# The Journal of
# The Tanjore Maharaja Serfoji's
# Sarasvati Mahal Library


EDITED BY

A. PANCHANATHAN, M. A., B. Lib. Sc.,

*Administrative Officer i/c,*

Sarasvati Mahal Library, Thanjavur





Vol. XXXVI No. 1, 2 & 3

PUBLISHED ON BEHALF OF

**THE SARASVATI MAHAL LIBRARY**

THANJAVUR

Annual Subscription Rs. 6-00

A. D. 1985

TANJORE MAHARAJA
SERFOJI'S SARASVATI MAHAL LIBRARY, THANJAVUR.

EDITORIAL BOARD

*Patron :*

Thiru T. R. RAMASWAMY, I. A. S.,
District Collector and Director,
T. M. S. S. M. Library,
Thanjavur.

*Editor :*

Thiru A. PANCHANATHAN, M.A., B.Lib.Sc.,
Administrative Officer i/c,
T. M. S. S. M. Library,
Thanjavur.

*Members :*

Thiru V. M. Ananthanarayanan, M.A., M.Phil.,
Lecturer in Sanskrit,
T. M. S. S. M. Library, Thanjavur.

Thirumathi Pulavar S. Thilagam,
Tamil Pandit,
T. M. S. S. M. Library, Thanjavur.

Thiru T. R. Bhima Rao,
Marathi Pandit,
T. M. S. S. M. Library, Thanjavur.

Thiru N. Viswanathan,
Telugu Pandit,
T. M. S. S. M. Library, Thanjavur.

Thiru M. Seeralan, B.A.,
Librarian Grade II.
T. M. S. S. M. Library, Thanjavur.

# The Journal of The Tanjore Maharaja Serfoji's Sarasvati Mahal Library


EDITED BY

A. PANCHANATHAN, M. A., B. Lib. Sc.,
*Administrative Officer i/c*,
Sarasvati Mahal Library, Thanjavur.



Vol. XXXVI

No. 1, 2 & 3





PUBLISHED ON BEHALF OF

**THE SARASVATI MAHAL LIBRARY**

THANJAVUR

Annual Subscription Rs: 6-00

A. D. 1986

# CONTENTS


1. EDITORIAL.

2. GLIMPSES.

— Thiru V. M. Ananthanarayanan. M.A., M.Phil.,
Lecturer in Sanskrit.

3. இரண்டாம் ஏகோஜியும் பிரபஞ்சாமிருத சாரமும் ... 1—18

— சாஹித்ய சிரோமணி திருமதி S. இராஜலக்ஷ்மி

4. முதலாம் சரபோஜியும் அவர்காலத்து நூல்களும் ... 1—24

— வேதாந்த சிரோமணி & வித்துவான் N. ஸ்ரீநிவாசன்

5. நடேசவிலாசம் ... 1—22

— திரு. N. விசுவநாதன், தெலுங்கு பண்டிதர்

6. மன்னர் ஏகோஜி ... 1—27

— திரு. T. R. பீமராவ், மராத்தி பண்டிதர்

7. மோடிப் பலகணி—7 (போர்ச் செய்திகளும் அல்லா பண்டிகையின் வரலாறும்) ... 1—28

— புலவர் திரு. V. சொக்கலிங்கம் (ஓய்வு)

# AN APPEAL

Manuscripts on Palm Leaf or Paper of the ancient works of the wise men of the past, are the great treasures, solely inherited by the Nation, and it is the moral obligation of persons who possess them to preserve them safely for the future generations of mankind.

Probably you have some of these in your possession or you know friends or neighbours who possess them. You can make a great contribution to the cause of the preservation not only of our National Culture but also to the Culture of Humanity as a whole by arranging to present such manuscripts to the famous T. M. S S. M. Library, Thanjavur.

The manuscripts so presented will be accepted and acknowledged with pleasure and gratitude by the authorities of the Library, preserved with meticulous care and made available to successive generations of readers and scholars for study and research. The hitherto unpublished works found among them, will be printed and published in due course, as facilities occur, with the expression of the Library's gratitude for your gift.

The great Scholar-King of Tanjore, Rajah Serfoji, has attained immortal fame by dedicating enormous time and wealth to the expansion and firm establishment of this world-famous 'Sarasvati Mahal Library.' It is open to you to share the honour of Serfoji, in your own measure, by contributing your manuscripts to the great institution built by him.

This great Honour is beckoning to you to accept it. Will you hasten to take it up? The Library waits for your answer.

Collector & Director,
T. M. S. S. M. Library, Thanjavur

The Journal of
The Tanjore Maharaja Serfoji's Sarasvati Mahal Library

Vol. XXXVI A. D. 1986 Saka 1908 No. 1, 2 & 3

# EDITORIAL

Dear Readers,

This Journal of the Tanjore Maharaja Serfoji's Sarasvati Mahal Library, Volume XXXVI, is now presented to our readers with extreme happiness. This contains valuable research oriented articles on literature, history, fine arts and histriography, written after careful analysis of the manuscripts in our collection in Sanskrit, Tamil, Marathi and Telugu. The Telugu article is made out in Devanagari script.

Our Library possesses with pride, numerous collections of manuscripts and books of very great value, dealing with all branches of knowledge. Apart from this, we are in the process of collecting manuscripts (palm-leaf and paper) and books from donors. Thus our collection keeps on growing day by day.

The Library has appointed great scholors in different fields of knowledge in Tamil, Sanskrit, Marathi and Telugu as Guest Editors to bring out in print, the rare collections of our Library. The Lecturer in Sanskrit and the Pandits are also engaged in editing and publishing of manuscripts. Research scholars from different parts of the motherland and the rest of the world visit the Library.

The Government of India and the Government of Tamilnadu render very great help by the sanction of grants to the Library. We express our gratitude for their continued patranoge. With these grants, we have published so far 234 books in Tamil. Sanskrit, Marathi and Telugu.

Our thanks are due to the donors of manuscripts and books, the contributors in this number and the staff members of the Library, who with great devotion did their part in bringing out this volume.

T. R. RAMASWAMY, I.A.S.,
District Collector and Director,
Sarasvati Mahal Library.

Thanjavur,
13-5-1986.

# GLIMPSES

**V. M. Ananthanarayanan,** M.A., M Phil.,
Lecturer in Sanskrit.

In this Journal we have four articles dealing with the aspects of history, culture and development of literature during the Maratha period.

The article entitled **Irandam Ekojiyum Prancamrtasaramum** of Smt. S. Rajalakshmi, stresses the fact that the king was a great patron of letters though he ruled for a short span. The **Prapancamrtasara** consists of seventy chapters. among which, the **Devimahatmyasataka, Parabrahmatattvanirupana Tulajamaharajagunavarnana** and **Dipambamahatmya** have already appeared in our previous issues of journals. The appendix of the article under discussion, has the critical edition of **Uttamasevakanirupana,** one among the **Prapancamrta** collection discribes in 105 verses, the duties of a servant. This piece could be kept on par wlth the chapters on the duties of a loyal servant of the **Dharmasastra** texts.

Volume 35 of our journal carried the first part of the article - **Mudalam Serfojiyum Avar Kalatthu Nulgalum.** King Serfoji's birth and learning have been discussed at length in that article. The King's understanding of the statecraft, the overcoming of the problems in administiation too found a place in that. Apart from these, the author, basing his argument on the text **Serfojicarita,** detailed on the protection of Grand-Anicut (Kallanai) and the part played by Serfoji I, on the administration of Sethu Kingdom.

The focus of the present article, is on the cultural development with special reference to the manufacturing of Tanjore Art Plates, conscration of temples and grants, based on the epigraphy and copper plate inscriptions The division of the country into three, has also been taken up for discussion. The author gives a brief summary of the litereature during the King's reign. Sri. N. Srinivasan concludes the article with the historical references to the emergence of confusion in the Kingdom due to the absence of any heir to succeed King Serfoji I.

The **Natesavilasa** (Marathi), ascribed to King Sivaji, is actually penned by one Ranganatha. He is an expert in composing **Nirupana-s;** he has also written **Minaksiparinaya.** The **Natesavilasa** is a dance-drama, based on the

**Cidambaramahatmya**. The stories relating to **Bhiksatana, Devadarucarita** and **Anandanartanapradarsana** have been taken up for weaving the plot of the **Natesavilasa**. Following the tradition of **Bhagavatamela**, this work has been divided into two and staged for two days, says the editor. The Marathi verses set to the meters of Sanskrit and Telugu, worth mentioning here. The first act of **Natesavilasa** has been published in this journal, edited by Sri N. Viswanathan. The second act, with a critical introduction shall be included in the fourth-coming issues.

**King Ekoji** ruled the Tanjore Kingdom between A. D. 1695 and 1736. The artiele of Sri T. R. Bheema Rao deals in short the life history of King Ekoji. The author setreeses upon the King's diffident attitude, which brought the destruction to the kingdom itself. Three works which came to the light during that period, have been taken up for study. The **Jivasivasamvada**, a work in Sanskrit with the Commentary in Marathi has for its content the questions raised by **Jiva** (the individual soul) to Lord **Siva** (the ultimate reality). The principles of **Sivadvaita** are brought out in this work, which is translated into Tamil.

The **Rajaputraniti**, deals with the code of conduct prescribed for the Princes. The **Avicararamaniyakatha** is an illustrative example of a King who repented for his negligence on small matters. It hints upon the truth that a King must be alert at each and every step.

The Serial, **Modi-p-palakani**, of Pulavar Thiru V. Chockkalingam, discusses with some of the Modi manuscript sources referring to the wars waged by the Maratha Kings and Muslim festivals. There are references to the reconsideration of the Government orders on further appeal by the citizens. The present article throws light on the celebration of the Mohurrum festival. People belonging to other religious faiths too, participated in the processions of this celebration, the authorstates. Reference has been made to the grants sanctioned to the Darghas and mosques by the Maratha rulers. It seems, the Muslim preceptors (religious leaders) enjoyed an unique honour in this period.

# இரண்டாம் ஏகோஜியும், பிரபஞ்சாமிருதசாரமும்

ஸாஹித்ய சிரோமணி, சம்ஸ்கிருத பண்டிதர்,

**திருமதி. எஸ். இராஜலக்ஷ்மி.**

*

தஞ்சை மராட்டிய அரசில் ஐந்தாவது மன்னராக ஆட்சிசெய்தவர் இரண்டாம் ஏகோஜி. முதலாம் துளஜாவின் புதல்வர். இவரைப் பாவா சாகிப் என்றும் கூறுவர். இவருக்கு ஆறு மனைவியர். இவர்களில் மூத்த மனைவி சுஜான்பாயி. இத்தம்பதியருக்கு குழந்தை கிடையாது. அதனால் இரண்டாம் ஏகோஜியின் மறைவுக்குப்பின் அவர்மனைவி சுஜான்பாயும், தஞ்சையை பிரதாபசிம்மனும் முறையே அரசாண்டனர்.

இரண்டாம் ஏகோஜி சிறந்த கல்வியைக் கற்றவர். இவர் தந்தை முதலாம் துளஜாவுக்குப்பின் கி. பி. 1735 - 1736 வரை அரசாண்டவர். இவர் அரசோச்சிய காலம் இரண்டு ஆண்டுகளுக்கு உட்பட்டு இருந்தாலும் கடவுள் பக்தியுடனும், நீதியுடனும் அரசுபுரிந்துள்ளார். [1]பல அறச்செயல்களைச் செய்துள்ளார் என்பதை மோடிச் செய்திகளாலும், செப்பேடுகள் வாயிலாகவும் அறியமுடிகிறது.

முதலாம் ஏகோஜியின் பேரன், அதாவது முதலாம் துளஜாவின் மகன் இரண்டாம் ஏகோஜி கி. பி. 1720-இல் திருப்பனந்தாளில் மடம் நிறுவிய தில்லைநாயக சுவாமிகள் முதலாம் துளஜா அல்லது அவரது தமையன் முதலாம் சரபோஜியிடமிருந்து காசியில் அன்னதானம், நந்தவனம் ஆகிய அறங்களை 500 சக்கரம் வீதம் ஆண்டுதோறும் பெற்றனர் ஆதல்வேண்டும். அத்தொகை காலாகாலத்தில் கொடுக்கப்பெறவில்லைபோலும், ஆகவே, ஒரு ஊரைச் சருவமானியமாகச்செய்து கொடுக்கவேண்டும் என்று இரண்டாம் ஏகோஜியிடம் கி. பி. 1737-இல் கேட்டுக்கொண்டார். ஆவணத் தொடக்கத்தில்

---

1, 2. தஞ்சை மராட்டிய மன்னர்கால அரசியலும்-சமுதாய வாழ்க்கையும், திரு. K. M. வெங்கட்ராமையா - தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை - 1984. பக்கம் 423.

சுஜான் பாயிசாகேப் என்று பெயர் குறிக்கப்பெற்று இருத்தலால் அவ்வரசமாதேவி அரசரிடம் பரிந்துரைசெய்திருக்கக்கூடும். அரசரும் மனமுவந்து முன்னர் அளித்துவந்த தொகையோடு 500 சக்கரமும் சேர்த்து ஆண்டுதோறும் 1,000 சக்கரம் வருமானம் வரக்கூடிய நிலங்களை (திருப்பனந்தாளுக்கு அருகில்) திருச்சித் தாலுக்கா 'கோன்பட்' என்ற ஊரில் சர்வமானியம் செய்தார்.

தீபாம்பாள் அறச்செயல்களைச் செய்ததுபோல் அவளுக்குப்பிறகு அவளுடைய பேரன் இரண்டாம் ஏகோஜி (பாவாசாஹிப்) பினுடைய மனைவி சுஜான்பாய் பாகவத மேளாவைச் சார்ந்த கலைஞர்களுக்கு தீபாம்பாள்புரத்தை யொட்டிய நிலப்பகுதியில் தனது கணவர் பெயரில் ஏகமகாராஜபுரம் என்று பெயரிட்டு ஒரு அக்ரஹாரத்தை உருவாக்கி வழங்கியுள்ளார். இச்செய்தியை கீழே காணும் ஆவணம் கூறுகிறது. இந்த இனம் பத்திரம் மோடி எழுத்தில் உள்ளது. இதன் தமிழாக்கம் —

"எழுதுவது என்னவெனில் மஹாராஜா ராஜஸ்ரீ ஏகோஜி ராஜா சாகேபின் மனைவியின் உத்திரவு :

இப்பொழுதும், இனி வரப்போகும் அலுவலர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில் 1657 (சகம்) ராக்ஷஸஆண்டு தைமாதம், கிருஷ்ணபக்ஷம், திரியோதசி திதி, மகரசங்கராந்திநாளில் (30—12—1735) தீபாம்பாள்புரம் செல்லும் சாலையில் மகிமாலை வீரசோழகன்பேட்டை அருகில் 'ஏகமகாராஜபுரம்' என்னும் பெயரில் அக்ரஹாரம் ஏற்படுத்தியுள்ளேன். இதில் சிவன்கோவில், விஷ்ணுகோவில், பாடசாலை, அந்தணர்களுக்குவீடு, ஞானிகள் தங்கும் மடங்களும் கட்டுதற்குரிய இடமும், பசுக்கள் சுதந்திரமாக மேய்வதற்குரிய இடமும், ஆக 87 வேலி, 3½ மா நிலத்தை பேஷ்வாவிடம் இனம் நிலமாகக் கொடுக்கப் பட்டுள்ளது. அதில் பாகவதமேளா (இசை நாட்டிய நாடகத்தை) நடத்தும் கோபால பட்டருடையா போனும், அஹோபல சாஸ்திரியின் மகனுமான கிரிராஜகவீஸ்வரருக்கு 'நன்செய் நிலம்' 13 அடிக்கோலால் ¾ வேலி சர்வ மானியமாக தாராகிரஹபூர்வமாக இனம் கொடுக்கப்பட்டது."[1]

இதுபோன்ற பல அறச்செயல்களை மோடிக் குறிப்பிலிருந்தும், செப் பேடுகளிலிருந்தும் அறிந்துகொள்ள முடிகிறது.

சோழமண்டலத்தில் அளகாபுரி என்னும் நம்முடையதான தஞ்சாவூரான தஞ்சைமாநகரத்தில் போசலகுல திலகசூடாமணியரான ஸ்ரீ துளசாமகாராசா வரபுத்திரரான ராயார் ஸ்ரீ ஏகோசி மகாராசா சாயபு அவர்கள் நீதியுடனே இராச்சியபாரம் பண்ணும் நாள் என்ற மோடி குறிப்பில் இருந்து அவருடைய அரசாட்சியை நாம் மேலும் அறிந்துகொள்ள முடிகிறது.

---

1. குலவிளக்கு தீபாம்பாள் - திரு. N. ஸ்ரீனிவாசன் - நூலக பருவ இதழ் நெ. 33. பக். 10.

இம்மன்னனின் ஆட்சிகாலத்திலும் தனது மூதாதையர்களைப்போல், கலை, இலக்கியம், வைதிக நெறிகளைப் பின்பற்றினர். இவரது அரசவையில் பன்மொழிகளை அறிந்த புலவர்கள் பல நூல்களை இயற்றியுள்ளனர். இவரின் தந்தை துளஜா மகாராஜா தன்னுடைய நூல்களில் தன் வம்ச பரம்பரையை கூறியிருப்பது போலவே (இரண்டாம் ஏகோஜி) இவரும் தாம் இயற்றிய சம்ஸ்க்ருத கிருதிகளில் தனது வம்ச பரம்பரையைக் கூறியுள்ளார்.

கல்யாணிராகக் கிருதியில் :—

दीपाम्बिकातनय तुलजेन्द्रपूजित

दीपाम्बिकापौत्र केन्द्रविनुत என்றும்

தீபாம்பிகையின் பௌத்திரன் என்றும் அடுத்து பூபாளராக அடசாபுதாளக் கிருதியில்,

तुलजेन्द्रतनयैकराजेन्द्रसन्नुत என்று

மேலும் தன் பெரிய தகப்பனாரைப் பற்றியும் கூறியுள்ளார்,

இவ்வாறு நூல்களில் மட்டுமின்றி [1]செப்பேடுகளின் வாயிலாகவும் இவர்கள் வம்சத்தைப் பற்றி நாம் அறிந்துகொள்ள முடிகிறது. ஏகோஜிக்குப் பின் பிரதாபசிம்ம ராஜாவும் தன் தந்தையைப் போலவே சிறந்து விளங்கினர் என்பதை இவர் காலத்து [2]செப்பேடுகள் வாயிலாக அறிய முடிகிறது.

இவ்வாறு இரண்டாம் ஏகோஜி குறுகிய காலம் *(1735—1736)* ஆட்சி செய்திருந்தபோதிலும் பல அறச்செயல்களிலும், கலைகளிலும், [3]தர்மங்களிலும் பக்தியிலும் சிறந்து விளங்கினர் என்பதை இவர் காலத்தே எழுந்த 'பிரபஞ்சசார ராஜரஞ்சன புராணம்' என்ற நூலில் இருந்து மேலும் தெரிந்து கொள்ள முடிகிறது. இந்நூல் ஒரே தலைப்பில் இருந்தாலும் ஒரே நூலாக இல்லாமல் சிறு சிறு அத்தியாயங்களாக (பகுதி) சுமார் எழுபது தலைப்புகளில் உள்ளன, இவைகள் ஓலைச்சுவடியாகவும், காகிதச் சுவடியாகவும் உள்ளன.

இவைகளில் சில இந்நூலாகப் பருவ இதழில் வெளிவந்துள்ளன. அவைகள் தேவீமாஹாத்ம்ய சதகம்[4] பரபிரும்மதத்வ நிரூபணம்[5] துளஜா மஹாராஜ குணவர்னனம்[6] தீபாம்பா மாஹாத்மியம்[7] முதலியன.

---

1) தஞ்சை மராட்டியர் செப்பேடுகள் 50 —
செ. இராசு, தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சை, 1983 பக். 40
2) ,, ,, ,, Ibid., 169
3) ,, ,, ,, Ibid., 81
4) V. Gopala Iyengar, TMSSM Jl. XX-1, pp., 1—10.
5) I bid., 2—3, pp. 1—20.
6) by the author, TMSSM Jl. XXXIII, p.
7) N. Srinivasan, TMSSM Jl. XXXIII, p.

இந்நூலை ஏகோஜி மன்னன் எழுதியதாக சில நூல்களிலும், மகாதேவ கவி எழுதியதாக சில நூல்களின் கடைசிக் குறிப்பில் (Colophon) காணப்படு கின்றன.

இந்நூல் ஏகோஜிமன்னரின் அவைப் புலவரும் மகாதேவகவியுமான புலவர் பெருமாளுல் இயற்றப்பட்டு மன்னர் பெயரில் அங்கிதம் செய்துள்ளார்' என்றும் இந்த நூலகத்தின் Catalouge-இல் குறிப்பிடப்படுகிறது.

இந்நூலில் சில அத்தியாயங்களில் தன்னுடைய வம்சத்தைப்பற்றியும், சில அத்தியாயங்களில் மாஹாத்மிய கிரந்தங்களாகவும், ஸ்தோத்திரங்களாக வும் அஷ்டகங்களாவும் எழுதியுள்ளார்.

இத்தகைய சிறந்த நூலின் ஒரு பகுதியாக உள்ள 'உத்தமசேவக நிருபணம் (B. 1417 D. 18918) என்னும் நூல் அனுபந்தமாக இத்துடன் வெளிவருகிறது. உத்தமசேவகன் எஜமானனிடம் எவ்வளவு பக்தியாகவும், உண்மையுள்ளவனுகவும் இருக்கவேண்டும் என்பதை நமது நீதிநூல்கள் பலபடக்கூறுகின்றன. அந்த உத்தம சேவகனுடைய தர்மங்களை 'உத்தம சேவக நிருபணம்' என்னும் இந்நூல் விவரிக்கிறது.

இதன் பொருளை அனைவரும் அறிந்துகொள்வதற்காகத் தமிழ்மொழி யாக்கமும் (சுருக்கம்) இணைக்கப்பெற்றுள்ளது.

# ॥ प्रपञ्चामृतसारराजरञ्जनपुराणे ॥

## *उत्तमसेवकनिरूपणम्

श्रीकृष्णं देवकीसूनुं कौस्तुभोद्भासिवक्षसं ।
नारदः परिपप्रच्छ विनयावनतः शुचिः ॥ -१

सर्वेऽपि प्राणिवश्चात्र सेवाधर्मं वितन्वते ।
उत्तमा मध्यमाश्चैव ह्यधमाश्च त्रिधा श्रुताः ॥ -२

एतेषां सेवकानां त्वं लक्षणं मे वद प्रभो ।
कीदृक्गुणाः किमाचाराः किंस्वरूपाश्च सेवकाः ॥ -३

कीदृक्गणा कथं जेया मनुजेनात्र भूतले ।
उत्तमा मध्यमाश्चैवाधमाश्चेति तान् मुदा ॥ -४

विस्तरेणाघ कथय देवकीनन्दन प्रभो ।
एवमुक्तस्तु मुनिना भगवान् यदुनंदनः ॥ -५

देवर्षिं नारदमुनिं वक्तुं समुपचक्रमे ।
मुने स्वस्वमिनिकट्वात् देवताभ्योऽपि सर्वदा ॥ -६

प्रसादमुत्तमं धत्ते लोकत्रयजयी च यः ।
सेवकश्चोत्तम इति कीर्त्यते स भुवस्तले ॥ -७

शिवभाक्ति सदा कुर्वन् शिवबिष्णोरभिन्नतां ।
चिन्तयेत् मानसे नित्यं यः स उत्तम ईरितः ॥ -८

---

* B. 1417, D. 18918.

देवतापूजनविधौ स्वस्वामिहितचिन्तनम् ।
कृत्वादौ स्वहितं पश्चाद्विचिंतयति सादरम् ॥ -९

यः स्वामिनो हिता देव स्वहितं चाचरेत्परम् ।
सोऽनुजीवी शुभाचार श्चोत्तमः परिकीर्तितः ॥ -१०

योऽनुजीवी स्वामिमर्म परस्मै न निवेदयेत् ।
सदाचारविशुद्धात्मा यस्य कांता पतिव्रता ॥ -११

पुत्रः स्वबीजसंभूतो यस्यास्ते स तु चोत्तमः ।
यः स्वामिना कृते कोपेप्यहितं कर्त्तुमुद्यमं ॥ -१२

नैव धत्ते मानसेऽपि स भृत्यश्चोत्तमो मतः ।
स्वस्वामिनि परं प्रीत्या दयां कुर्वति सादरं ॥ -१३

स्वहितालोकनपरो नाचरेत् स्वामिनोऽहितं ।
उत्तमः स तु विज्ञेयः सेवको नीतिमत्तरैः ॥ -१४

कस्मिंश्चित्संकटे प्राप्ते स्वामिनो यस्तु सेवकः ।
स्वसंकटं संमनुते स उत्तम इतीरितः ॥ -१५

उत्तरेऽभो बहुद्रव्यप्राप्तौ सत्यामपि स्वयं ।
न तां गणयति क्षिप्रं स्वस्वामिहितमाचरन् ॥ -१६

स्वामिनः श्रेयसा स्वीयश्रेयः संपादयेच्चयः ।
स ज्ञेयश्चोत्तम इति सेवको बुधसत्तमैः ॥ -१७

विपत्स्वपि च सर्वासु स्वामित्वं नैव मुंचति ।
सुतीक्ष्ण खड्गधारोत्थशोणितौघपरिप्लुते ॥ -१८

समरे स्वामिनं स्वीयं दर्शयित्वा रिपुव्रजे ।
आत्मनो रक्षणं कुर्वन् स्वकं सद्म न याति यः ॥ -१९

स उत्तम इति ज्ञेयः सेवको नीतिवित्तमैः ।
यः कर्मणा स्वस्य स्वामिनोऽपि विनाशनम् ॥ -२०

तादृशं कर्म कुरुते न कदाचिदपि चोत्तमः ।
जितकामारिषड्वर्गः सामदानाद्युपायवित् ॥ -२१

परस्त्रीसङ्गरहितः सर्वत्रातिविवर्जितः ।
स्वप्नेऽपि चाहितं कर्म स्वामिनस्तु न वेत्ति यः ॥ -२२

स्वजाप्याचरकरणे सदोद्यतमनाः सुधीः ।
सत्यकर्मकरः सत्यवचा गार्हस्थ्यकर्मकृत् ॥ -२३

निजस्वाम्येव मे देवः इति संमनुते सदा ।
संसारकृत्यकरणचतुरो मितवाङ्नियमो यमी ॥ -२४

अपृष्टोऽपि स्वामिहितं ब्रूते वै सर्वदैव हि ।
उत्तयान् मनुजान् स्वीयविभूसन्निधिगोचरान् ॥ -२५

कुरुते स्वामिनः कोशवृद्धिं वितनुते परम् ।
गावश्च धनधान्यादि सौभाग्यमतुलं शुभं ॥ -२६

संपादयति यो मित्यं स्वामिनस्तोषकारकम् ।
यः कारयति वित्तानां व्ययं स्वस्वामिनोपि हि ॥ -२७

उचितं कार्यकरणं हितं स्वजनसंमतम् ।
स्वामिद्रोहजनैर्दुष्टैः सङ्गं न विदधाति यः ॥ -२८

मदकारकवस्तूनि न भक्षयति जातुचित् ।
हनुमानिव रामस्य भक्तिं स्वस्वामिनस्तु यः ॥ -२९

तनुते सर्वदा सर्वप्रकारेणापि सर्वतः ।
विभीषण इवानन्यभवेम रघुपुङ्गवम् ॥ -३०

धीरं निजस्वामिनं यः सर्वथा शरणं गतः ।
वक्ति स्वामिहितं यस्तु तस्मात्संश्रृणुते न चेत् ॥ -३१

स्वामि तदा तेन सार्द्धं स्वयं मत्तुं व्यवस्यति ।
निस्तन्द्री बद्धकक्षः सन् स्वामिसेवनतत्परः ॥ -३२

कुलीनः पण्डितः सर्वकलाभिज्ञस्स्वधर्मवित् ।
चतुरः स्वामिनो मर्म स्वमर्मापि परस्य यः ॥ -३३

न निवेदयते शुद्धः स भृत्यश्चोत्तमो मतः ।
तत्वज्ञो बुद्धिमान् ज्ञानी मानी स्वामिहितोद्यतः ॥ -३४

दत्तेऽपि हि महाभाग्ये स्वामिना तुष्टचेतसा ।
न विमुंचति मर्यादां स्वीयां भृत्यः कदाचन ॥ -३५

चित्तं शोधयितुं स्वामी न दत्ते यदि संपदं ।
तदापि खिन्नो मर्यादां नोल्लंघयति जातुचित् ॥ -३६

सोऽनुजीवी नीतिशास्त्रपारगैरुत्तमः स्मृतः ।
स्वामिदायादवर्गैश्च शत्रुसंघैश्च यः सदा ॥ -३७

सङ्गं न तनुते धीरः स उत्तम इतीरितः ।
परंपरागतस्वीयस्वामिनः पद्धतिं तु यः ॥ -३८

न मज्जयति नीतिज्ञैः स उत्तम इति स्मृतः ।
न जपेत्क्षुद्रमन्त्रान् यः कुत्सितेषु मतेष्वपि ॥ -३९

चित्तं न धत्ते सततं स उत्तम इति स्मृतः ।
स्वकीययजमाने तु न जातु विचिकित्सते ॥ -४०

क्षणे क्षणे बुद्धिमन्यां न करोति कदाचन ।
योगेषु साधुविप्रेषु विश्वासं बिभृयाद्भृशं ॥ -४१

गृहागतेष्वतिथिषु तथैवाभ्यागतेषु च ।
पूजां वितनुते भक्त्या नित्यकर्मपरायणः ॥ -४२

स्वामिना दयमानेन प्रतिष्ठा महती कृता ।
तथापि स्वामिना सार्द्धं समतां न तनोति यः ॥ -४३

स उत्तम इति ज्ञेयो ह्यनुजीविषु पण्डितैः ।
परसंस्थानगं मर्म परस्यापि च मर्म यत् ॥ -४४

गृहीत्वा स्वामिनं स्वीयं विबोधयति संततम् ।
स्वकीयस्वामिनो मर्म स्वस्य मर्मापि जातुचित् ॥ -४५

यथाऽम्परो न जानाति तथा चरति नित्यशः ।
स उत्तम इति ज्ञेयो नीतिशास्त्रविशारदैः ॥ -४६

विजानन् स्वामिनश्चित्तं स्वेप्सितं स्वामिनः पुनः ।
निवेद्य याचयित्वा च संगृह्णाति निजेप्सितं ॥ -४७

ज्ञेयः स नीतिशास्त्रज्ञैः सेवकः परमोत्तमः ।
स्वकीयकार्यसिध्यर्थं येन केनापि धीमता ॥ -४८

दत्तं वस्तु निवेद्याथ स्वामिने तदनुज्ञया ।
गृण्हाति स तु विज्ञेयः सेवकेषूत्तमः सुधीः ॥ -४९

स्वामिनो गृहकृत्यं यः स्वकीयगृहकृत्यवत् ।
नित्यं पश्यति मेधावी विज्ञेयः स तु चोत्तमः ॥ -५०

प्रतिक्षणभवं वृत्तं स्वामिनः कर्णगोचरम् ।
विधाय तनुते शिक्षां शत्रूणां सोपि चोत्तमः ॥ -५१

हितकारिषु भूयस्सु मनुजेषु विभोः स्वयं ।
द्वेषं न चावितनुते स उत्तम इति स्मृतः ॥ -५२

मनःक्लेशकरं वाक्यं स्वामिनः स्वस्य सेवकः ।
यो न ब्रवीति च तथा विषवाक्यं विषोपमम् ॥ -५३

स्वामिनो विषमद्कार्यं न चिन्तयति जातुचित् ।
स उत्तम इति ज्ञेयः सेवको नीतिवित्तमैः ॥ -५४

अन्तःपुरेऽपि दोषं तु यथा न स्यात्तथैव हि ।
वितनोति च कार्याणि स उत्तम इतोरितः ॥ -५५

सरसं वचनं यस्य चित्तं निष्कपटं तथा ।
स उत्तम इति ज्ञेयः सेवको नीतिपारगैः ॥ -५६

सुललाटः सुविक्रान्तः चारुपद्मविलोचनः ।
आजानुबाहुर्विज्ञेयः चोत्तमः सेवको बुधैः ॥ -५७

यस्य चित्तं धर्मकृत्ये तत्परं सर्वदैव हि ।
कापथ्येन विहीनं च स उत्तम ईतीर्यते ॥ -५८

अतिप्रीतिर्यदा देवे तथा स्वामिपदांबुजे ।
भाषणं सरसं यस्य स उत्तम इतीर्यते ॥ -५९

विश्वासवान् सदाचारयुतः सत्सङ्गवान् भृशं ।
श्रोता सर्वपुराणानां निग्रहानुग्रहे पटुः ॥ -६०

न कदाचिदपि स्वस्वाम्यसमंजसचिन्तकः ।
सर्वज्ञः स्वामिभिन्नस्य यादृशस्य यथोचिता ॥ -६१

तादृशस्य तथा सेवां विधातुं यतिमान् भृशम् ।
स्वामिकार्यविधौ किंचिदपि चांतरकृत्नहि ॥ -६२

अचांचल्येन मनसा संविधातो सदैव हि ।
ऋतुकाले तु संप्राप्ते स्वीयपत्नीसमागमं ॥ -६३

नैव मुञ्चति शुद्धात्मा सर्वदैव शुचिव्रतः ।
स्वकीयविभुना कार्ये त्वेकस्मिन्विनियोजितः ॥ -६४

पूर्वकार्याविरोधेन बहुकार्य प्रसाधकः ।
सत्यवान् यजमानं स्वं न मुंचति कदाचन ॥ -६५

नाज्ञो भूतं भविष्यं च वर्तमानं च वेत्ति यः ।
श्रीमच्छंभुमहादेवप्रसादपरिचिन्तकः ॥ -६६

धर्ममेव सदा पश्येन्नाधर्मं च कदाचन ।
युक्तकृत् यजमानस्य हितार्थं तु कदाचन ॥ -६७

अयुक्तमपि कार्यं तु कुरूते स्वामि भक्तिमान् ।
यथा पतिव्रता योषा भर्तारमनुसृत्य वै ॥ -६८

सर्वदा वर्तते तद्वत् सर्वस्मिन् विषये विभुम् ।
अनुसृत्यैवाचरणं यस्यास्ते स तु चोत्तमः ॥ -६९

कदाचिदपि दैवेन यजमानकुलस्य हि ।
दोषः कश्चित्संगतश्चेत् तदा दोषविनाशनम् ॥ -७०

मन्वादिस्मृतिशास्त्रोक्तप्रमाणाचरणेन हि ।
प्रायश्चित्तेन कुरूते स उत्तम इति स्मृतः ॥ -७१

उत्तमानां देवतानामाराधनविचक्षणः ।
उत्तमव्रतकर्त्तायः स्वकुलाचारतत्परः ॥ -७२

गार्हस्थ्यधर्मवित् धीरः स उत्तम इतीर्यते ।
मायाविभिर्वंचकैश्च हितशत्रुजनैः सह ॥ -७३

असाधुवृत्तैः स्वस्वामिद्रोहिभिश्च कदाचन ।
सङ्गं न तनुते यस्तु स उत्तम इतीर्यते ॥ -७४

निर्लिप्तचित्तः सततं प्रपंचांतर्गतोपि यः ।
इह लोकं स्वामिनैव परलोकं शिवेन तु ॥ -७५

जेष्यामीति मनो यस्य स उत्तम इतीर्यते ।
साधून् दृष्ट्वा तुष्टचित्तः शास्त्रार्थमनुचिंतयन् ।
सर्वदा वर्तते यस्तु स उत्तम इतीर्यते ॥ -७६

स्वामिसेवाविधौ यस्तु नियमेन हि वर्तते ।
स्वामी मदीयस्तत्कार्यं मदीयमिति यो हृदि ॥ -७७

धत्तेऽभिमानं नितरां स उत्तम इतीर्यते ।
कलासु चतुरो धीमानिङ्गितज्ञश्च धर्मवित् ॥ -७८

मानवान् सर्व विद्यासु निपुणः कुशलः कृती ।
राजस्निग्धाः अथाध्यन्ये केचित्सामाजिका जनाः ॥ -७९

एवं गुणाश्च वर्तंते तथाप्यनुचरश्च यः ।
दाक्षिण्यमदधत्तेषां स्वकीयस्वामिनो हितं ॥ -८०

नित्यं विलोकते भृत्यः स उत्तम इतीर्यते ।
सर्वदा शस्त्रभृत्द्वारि जाग्रदेव हि वर्तते ॥ -८१

स्वजात्युचितमाचारं न मुंचति कदाचन ।
विवाहं नैव कुरूते ह्यन्यजातिभुवास्त्रिया ॥ -८२

स्वामिनोप्यहितं कर्म न करोतीह जातुचित् ।
कपटं स्वामिना सार्धं कुरूते नैव सेवकः ॥ -८३

स्वकीयस्वामिनं नैव मानसे विचिकित्सते ।
वीक्षते यः स्वामिशत्रून् स्वशत्रुमिचान्वहम् ॥ -८४

स उत्तम इति ज्ञेयः सेवकेषु बुधोत्तमैः ।
कायेन मनसा वाचा स्वामिद्रोहं न चारयेत् ॥ -८५

स्वामिनोप्यहितं चित्ते न विचिंतयते तु यः ।
स उत्तम इति ज्ञेयः सेवको नयशालिभिः ॥ -८६

सेवां वितनुते यस्तु चातुर्येणैव सर्वदा ।
कृतारिषड्वर्गजयः शुचिः स्वाधीनमानसः ॥
क्षमावान् जयकर्ता च सद्भसमरभूमिषु ॥ -८७

गुणवानुत्तमकुलप्रभवो भक्तितत्परः ।
स उत्तम इति ज्ञेयः सेवको नयशालिभिः ॥ -८८

अन्यैर्जनैर्बोधितोऽपि न भवेद्भेदगोचरः ।
शरीररक्षणं स्वीयं स्वामिसेवानुरोधतः ॥ -८९

कुरुते स्वामिनो मर्म बहिर्नैव प्रकाशयेत् ।
परेषां मर्म जातं तु गृण्हाति मतितः परम् ॥ -९०

प्रत्यक्षेपि परोक्षेपि स्वामिनो हितमेव हि ।
य आचरेत्स विज्ञेयो ह्युत्तमः सेवको बुधैः ॥ -९१

तुष्टेन स्वामिना दत्तं भाग्यं चेत्तदपि स्वयं ।
वंचनां स्वामिना सार्धं न करोति कदाचन ॥ -९२

हितं च कुरुते शश्वतु स्वामिनो नियमेन यः ।
स उत्तम इति ज्ञेयः सेवको नयशालिभिः ॥ -९३

क्वचिदपि कोपं चेत्कुरुते स्वविभुभृंशम् ।
तथापि स्वामिनः स्वस्य कुरुते हितमेव यः ॥ -९४

स्वयं सर्वार्थवित् कार्यकारी भवति यद्यपि ।
तथापि स्वविभोस्तूर्णमज्ञतां रक्षयन् मुहुः ॥ -९५

प्रभुनैव कृतं सर्वं कार्यं चेति वदन् परं ।
विशदीकुरुते यस्तु पाण्डित्यं स्वविभोः सदा ॥ -९६

उत्तमः सेवको ज्ञेयो नीतिशास्त्र विशारदैः ।
सेवकस्योत्तमस्यास्य गणो दैव इतीरितः ॥ -९७

उत्तमस्यास्य भृत्यस्य पुनर्जन्म भवेद्दि ।
राजजन्म मुनेर्जन्म गोजन्माप्यथवा भवेत् ॥ -९८

अमायस्यापि वाजन्मजन्मे वा दीक्षितस्य तु ।
स्वामिभक्त्यै विजयते त्रिन्लोकान् पुरुषोत्तमः ॥ -९९

उत्तमेष्वपि भृत्येषु यः स्वामिन्यतिभक्तिमान् ।
वर्तते तत्पुण्यजातज्ञानादेव हि केवलम् ॥ -१००

सायुज्यभुक्तिर्भवति पुरुषस्योत्तमस्य तु ।
भक्त्या मध्यमया यस्तु सेवकः स्वामिनं निजं ।
सेवते तस्य मुक्तीर्हि सारुप्यं भवति ध्रुवन् ॥ -१०१

अत्यंतज्ञानवान् यस्तु सर्वत्रेश्वरभावनां ।
कुरुते स परब्रह्म प्राप्नुते सुखवान् भवेत् ॥ -१०२

इह लोके परत्रापि सुखमुत्तमवाप्नुयात् ।
दैवी कला भवेत्तस्मिन् मान्यो भवति निश्चितं ॥ -१०३

पितृणां देवतानां च कुलीनो भवति ध्रुवग ।
अतिमान्यः स्वामिनः स्यात् तद्वंशश्च शुभो भवेत् ॥ -१०४

उत्तमं ग्रन्थरचनां कुरुते सर्वदैव हि ।
वेदान्तवित् कलाभिज्ञः सर्वज्ञो भवति ध्रुवम् ॥ -१०५

॥ इति श्री मद्राजाधिराज तुलजराज तनूजकुमारांबागर्भ संभव श्री महा देवैक भक्तैकराजं विरचिते प्रपञ्चामृतसारराजरञ्जनपुराणे सेवाधर्मं उत्तमसेवकनिरूपणं नाम प्रथमोध्यायः ॥

* * * * *

அனுபந்தம் ;

# தமிழாக்கச் சுருக்கம்

❀

தேவமுனியான நாரதர் ஸ்ரீ கிருஷ்ணரிடம், "பிரபுவே! உத்தம மானவர், மத்திமமானவர், அதமமானவர் என்ற வகையில் சேவை செய்கிற வர்களின் லக்ஷணத்தைக் கூறவேண்டும். சேவகர்கள் எப்படிப்பட்ட குணமும், நடத்தையும் உடையவர்கள்? அவர்களை எவ்வாறு அறிந்துகொள்வது? அவர்களை உத்தமர், மத்திமர், அதமர் என்று பிரித்தறிவது எங்ஙனம்? என்று விபரமாக கூறவேண்டும்" என்று கேட்க, ஸ்ரீ கிருஷ்ணர் கூறினர் –

எஜமானனுடையவும், தேவதைகளுடையவும் அருளைப் பெற்று சந்தோஷத்தை எவன் அடைகிருனோ, அவனே மூவுலகத்தையும் ஜயிக்கும் உத்தம சேவகனுவான்.

எப்பொழுதும் சிவபக்தியுடன், சிவன், விஷ்ணு இவர்களை மனதில் சிந்திக்கிறவன் உத்தமனுவான். தேவதைகளைப் பூஜிக்கும் பொழுது தன் எஜமானனின் நன்மையை நினைத்து, பிறகு தன் நன்மையைச் சிந்திப்பவன் நன்னடத்தையுடையவன்; உத்தமனுவான்.

எந்த சேவகன், தன் எஜமானனின் ரஹஸ்யத்தை வெளியில் சொல் லாமல் இருக்கிருனே அவனே மேலானவன். எஜமானன் கோபித்தாலும் அவனுக்குக் கெடுதியை நினைக்காதவனே மேலான வேலைக்காரன். தன் எஜமானனிடம் ஆதரவுடன் இருப்பவன் தன்னுடைய நன்மைக்காக அவனுக்கு தீங்கு நினைக்காதவன்; நீதிமான்களால் சிறந்த சேவகனுக எண்ணப்படுவான்.

தன் எஜமானனுக்கு வந்த சங்கடத்தைத் தன்னுடையதாக நினைப் பவன், மற்றவர்மூலம், அதிக பொருள் கிடைப்பதாயினும், அதைப் பொருட் படுத்தாமல் எஜமானனுக்கு நன்மையை நினைப்பவன், எஜமானனின் நன்மை யாலேயே தனக்கும் நன்மைதேடிக்கொள்பவன் ஆகிய இவர்கள் உத்தம சேவகர்களாவர்.

விபத்துக்களில் எஜமானனைவிட்டு விலகாமல் இருப்பவன், ரத்தப் பெருக்கெடுத்தோடும் கொடியபோரில் எஜமானனைவிட்டுத் தன்வீடு செல்லா தவன், இப்படிப்பட்டவன் உத்தமசேவகனுவான்.

காமம் முதலியவற்றை வென்றவன், சாமம், தானம் முதலியவற்றை அறிந்தவன், பிறன் மனைவியை விரும்பாதவன், அதிக ஆசையற்றவன்,

கனவிலும், எஜமானனுக்குத் தீங்கு நினைக்காதவன். தன்ஜாதி ஆசாரங்களைக் கடைப்பிடிப்பவன், உண்மையான செய்கை, உண்மையானவாக்கு உடையவன், இல்லறம் நடத்துபவன், தனது எஜமானனையே தெய்வமாக நினைபவன், மிதமாகப் பேசுபவன், கேட்காமலேயே எஜமானனுக்கு நல்லது கூறுபவன் இத்தகையோர் மேலான சேவகர்களாவர்.

எஜமானனின் செல்வத்தைப் பெருக்குபவன், பசு, தன, தான்யங்களால் அவனுக்கு சந்தோஷத்தை உண்டாக்குபவன், தகுதியான செலவுகளைச் செய்வதுடன் எஜமானனின் துரோகிகளோடு சேராதிருப்பவன், மதத்தை உண்டாக்கும் உணவுகளைச் சாப்பிடாமல் இருப்பவன், ராமனிடம் ஹனுமார் இருந்ததுபோல் பக்தி செலுத்துபவன், விபீஷணன்போன்று எஜமானனிடம் ஒருமனதாக இருப்பவன், எஜமானனையே தஞ்சமாக அடைந்திருப்பவன் தான் கூறும் நல்லவற்றைக் கேளாமல் எஜமானனுக்குத் தீங்கு நேர்ந்தால், தானும் இறக்கத் தயாரானவன். சோம்பலற்று, எப்போதும் எஜமானனுக்கு நன்மை செய்ய முனைகிறவன், நற்குடியில் பிறந்தவன், கற்றவன், எல்லாக்கலைகளையும் அறிந்தவன், கெட்டிக்காரன், எஜமானனின் ரஹஸ்யத்தைக் கேட்காத தன்னுடையதையும் சொல்லாத சுத்தமானவன், சிறந்த சேவகன் ஆவான்.

உண்மை அறிந்தவன், மானமுள்ளவன், புத்தியுள்ளவன், எஜமானன் நன்மையைக் கருதுபவன், எஜமானன் சந்தோஷப்பட்டு நிறைய செல்வம் கொடுத்தபோதிலும் தன் வேலையைவிட்டு விலகாதவன் உத்தமனுவான். சோதிப்பதற்காக எஜமானன் எதுவும் கொடுக்காதபோதிலும் வருந்தி, மரியாதையை விடமாட்டான். எஜமானனின் தாயாதிகளுடனும், பகைவர்களுடனும் சேராதவனே உத்தமனுவான்.

கணத்துக்குக்கணம் புத்திமாருதவன், யோகங்களிலும், சாதுக்களிடத்திலும் நம்பிக்கை வைப்பவன். வீட்டுக்கு வந்த விருந்தினர்களிடத்தில் மதிப்புவைப்பவன், நித்தியகர்மங்களைச் சரியாகச் செய்பவன். எஜமானன் தன்னை உயர்வாக நடத்தினுலும், அவனுக்கு சமமாக நடக்காதவன். பிறருடைய அமைப்புக்களின் ரஹஸ்யங்களை அறிந்து எஜமானனுக்குக் கூறுபவன். எஜமானனின் மனம் அறிந்து தன் விருப்பத்தைத் தெரிவித்து நிறைவேற்றிக் கொள்பவன். தனக்குக் கொடுக்கப்பட்ட பொருளை, எஜமானனுக்குத் தெரிவித்துவிட்டு எடுத்துக்கொள்பவன். எஜமானனின் வேலையைத் தன் வேலை போன்றே செய்பவன். பகைவர்களின் ஒவ்வொரு கண நடத்தையையும் அறிந்து எஜமானனுக்கு அறிவித்து அவர்களைத் தண்டிப்பவன். இவ்வாறு இருப்பவனே உத்தமசேவகன்.

எஜமானனுக்கு நன்மை செய்பவர்களிடம் பகைமை கொள்ள மாட்டான். எஜமானனுக்கு மனவருத்தம் உண்டாக்கக்கூடிய தீய வாக்கியங்களைப் பேசமாட்டான். தர்மகாரியத்தில் பற்றியமனதும், எஜமானனிடத்தில்

கபடமற்ற தன்மையும், அதிக அன்பும், சுவையான பேச்சும் உடையவன் சிறந்த சேவகனாவான். நம்பிக்கையுள்ளவனாகவும், நன்நடத்தை உடையவனாகவும், நல்ல போக்கை உடையவனாகவும், புராணங்கள் கேட்பவனாகவும், ஆக்கல், அழித்தல் செய்வதில் திறமையுள்ளவனாகவும், ஒருபொழுதும் எஜமானனுக்குத் தீங்கு நினைக்காதவனாகவும், எல்லாமறிந்தவனாகவும், தக்கார்க்குத் தக்கபடி நடப்பவனாகவும் இருப்பவன் சிறந்த சேவகனாவான்.

உறுதியான மனத்துடன் இருப்பவன் சுத்தமான விரதமுடையவன், எஜமானனால் ஏவப்படும் காரியத்தில் முன் வேலைக்கு முரண் இல்லாமல் செய்பவன், உண்மை பேசுபவன், முக்காலத்தையும் அறிபவன், பரமசிவனின் பாதங்களை நினைத்து தர்மமே செய்பவன், எல்லாவற்றிலும் எஜமானனை அனுசரித்தே வேலைசெய்பவன், எப்பொழுதுதாவது எஜமானனின் குலத்திற்கு தோஷம் ஏற்பட்டால் விதிப்படி பரிஹாரம் செய்பவன் உத்தம சேவகனாவான்.

உத்தம தேவதைகளை ஆராதிப்பவன், தன் குலாசாரத்தில் ஈடுபட்டவன் இல்லற தருமம் அறிந்தவன் உத்தம சேவகனாவான். மாயாவி, வஞ்சகன், பகைவர், கெட்டவர், எஜமானனின் துரோகிகள் இவர்களுடன் சேராதவன், உத்தமன். இவ்வுலகம் எஜமானனாலும், மறு உலகம் சிவனாலும் என்று எண்ணுபவனும், சாதுக்களைப் பார்த்து சந்தோஷிக்கிறவனும், சாஸ்திரங்களைச் சிந்திப்பவனும், எஜமானன் என்னுடையவன், அவன் காரியம் என்னுடையது, என்று எண்ணுகிறவன், கலைகளில் நிபுணன், புத்திசாலி, இங்கிதமறிந்தவன், அவனுடைய குணங்களுக்காக மற்றவர் மதித்த போதிலும், எஜமானனுடைய காரியத்திலேயே கவனமாகப் பார்ப்பவன் உத்தமனாவான்,

எப்பொழுதும் கையில் ஆயுதத்துடன் விழித்திருப்பவன். தன் ஜாதிக்குரிய செய்கை விடாதவன், உத்தம சேவகன். எஜமானனுக்குக் கெடுதியோ, வஞ்சனையோ, செய்யமாட்டான். உடலாலும், உள்ளத்தாலும், வாக்கினாலும், எஜமானத்துரோகம் செய்யமாட்டான். எப்பொழுதும் சாதுரியத்துடன் காமம், கோபம், முதலியவற்றை, ஜயித்தவனாகவும், மனதை அடக்கியவனாகவும் பொறுமையுள்ளவனாகவும், நற்குடி பிறந்தவனாகவும், இருப்பவன் உத்தமன் எனப்படுவான்.

மற்றவரால் தூண்டப்பட்டபோதிலும் ரகசியத்தை வெளியிடமாட்டான். நேரிலும், மறைவிலும், எஜமானனுக்கு இதம் செய்வன் உத்தமனாவான். எஜமானனுக்கு முறைப்படி நன்மை செய்பவன் உத்தம சேவகனாவான்.

எஜமானன் கோபித்துக்கொண்டாலும், உத்தம சேவகன், நன்மையே செய்வான். தான் எல்லாம் அறிந்திருந்தும் எஜமானனின் அறியாத்தன்மையை

வெளியிடமாட்டான். எஜமானனாலேயே எல்லாம் செய்யப்பட்டதாகச் சொல்லி அவனை பெருமைப்படுத்துவான் உத்தமன்.

இப்படிப்பட்ட உத்தம சேவகர்களை தேவகணம் என்பர். இவர்கள் இறந்தபின் அரசனாகவோ, முனிவராகவோ, பசுக்களாகவோ, மந்திரியாகவோ, தீக்ஷிதராகவோ பிறக்கிறார்கள். மூவுலகங்களையும் ஜெயிக்கிறார்கள். சிறந்த சேவர்களிலும் எஜமானனிடம் பக்தியுள்ளவன் சாயுஜ்ய பதவியை அடைகிறான்

பக்தியோடு எஜமானனுக்குச் சேவை செய்பவன், சாரூப்ய முக்தியை அடைகிறான். இவ்வுலகிலும், மறு உலகிலும், சுகத்தை அடைவான். தெய்வீகக்கலை அவனை அடையும் பெருமையை அடைவான். பித்ருக்கள், தேவதைகள், எஜமானன், யாவராலும் போற்றப்படுவான். அவனது வம்சமும் நலம் பெறும். உத்தம சேவகன் நல்லநூல்கள் இயற்றுவான். வேதாந்தத்தை அறிவான். கலைகளை அறிவான். நிச்சயம் எல்லாவற்றையும் அறிந்தவனாவான்.

பருவ இதழ் 35-ன் தொடர்ச்சி

# முதலாம் சரபோஜியும் அவர்காலத்து நூல்களும்

வேதாந்த சிரோமணி & தமிழ் வித்துவான்
**என். ஸ்ரீநிவாசன்,**
சம்ஸ்கிருத பண்டிதர்,
சரஸ்வதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

**பவானி சங்கர சேதுபதி :**

பவானி சங்கரனுக்கு கி. பி. 1726-ஆம் ஆண்டு முடிசூட்டினார்கள். இவரது ஆட்சியும் அதிக காலம் நீடிக்கவில்லை. பாம்பாற்றுக்கு வடக்கேயும், பட்டுக்கோட்டைக்குத் தெற்கிலும் உள்ள பகுதிகள் தஞ்சையின் நிலப் பகுதிகள். இவை கிழவன் சேதுபதியின் காலத்தில் சேது நாட்டுடன் இணைக்கப் பட்டது என்பதை முன்பு கண்டோம். 'இந்த நிலப்பகுதிகளை ஆட்சிக்கு வந்த நான்கு மாதங்களில் மீண்டும் தஞ்சைக்கே திரும்ப அளித்துவிட வேண்டும்' என்ற நிபந்தனையுடன் சரபோஜியிடம் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டிருந்தார் பவானி சங்கரன். அந்த உடன்படிக்கையின்படி இவர் ஆட்சிக்கு வந்து பல மாதங்களான பின்னும் நடந்துகொள்ளவில்லை. இதனால் பவானி சங்கரன் மீது மிகுந்த சினங்கொண்டிருந்தார் தஞ்சை மன்னர் சரபோஜி.

இதைப்போலவே சிவகங்கைப் பகுதியை ஆட்சி செய்துகொண்டுவந்த சசிவர்ண தேவருக்கு உரிமையான வள்ளிக்கோட்டை பாளையத்தைத் தருவதாகக் கூறியிருந்தும் அவருக்கும் நிலத்தைக் கொடுக்காது ஏமாற்றி வந்தார் பவானி சங்கர சேதுபதி.

மேலும், தனக்கு அடங்கிய பாளையக்காரர்களை உரிய முறைப்படி மரியாதையாக நடத்தாமலும் இருந்தார். அரசு அதிகாரிகளை சந்தேகக் கண் கொண்டே பார்த்தும், அவர்களிடம் நம்பிக்கை கொள்ளாமலும், ஆட்சி புரிந்தார். இதனால் அரசு அதிகாரிகளுக்குள் கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டன. இந்நிலையில் தனது எதிரியும், முன்னாள் சேதுபதியாகவுமிருந்த தண்டத்தேவரின்

சகோதரனை 'கட்டயத்தேவரே' அரசபதவிக்கு முறையான வாரிசு[1] இவர் மூலமாக தனது பதவிக்கு ஏதேனும் ஆபத்து ஏற்பட்டு விடுமோ என்றும் அஞ்சினார் பவானி சங்கரன். இதனால் அவர் ஆட்சி செய்த காலத்தில் அவர் நிம்மதியாக ஆட்சி செய்யவில்லை இல்லை. அதுமட்டுமின்றி சிறந்த அரசனின் ஆட்சியின்மையால் அந்த நாட்டின் மந்திரிப் பிரதானிகளும், மக்களும் நிம்மதி யற்று வாழ்ந்தனர்.

இந்நிலையில், சிவகங்கை மன்னர் சசிவர்ணதேவர் தஞ்சை அரசின் சார் பில் நடந்த சிறப்பு விழாவில் சரபோஜியின் முன் ஒரு புலியுடன் போரிட்டு வெற்றி பெற்றார். இதனால் மகிழ்ந்த சரபோஜி சசிவர்ணதேவரிடம் நட்புக் கொண்டார்[2]. இந்த சந்தர்பத்தில் 'பவானி சங்கர சேதுபதி சிவகங்கைக்குக் கொடுக்கவேண்டிய நிலத்தைக் கொடுக்காமல் ஏமாற்றி வருகிறார்' என்று கூறி மன்னன் சரபோஜியின் கோபத்தைக் கிளறினான். இச்சமயத்தில் கட்டயத் தேவனும் உடனிருந்து, தனக்கே முறையாகச் 'சேதுபதி'ப் பதவி சேரவேண்டும் என்றும், பவானி சங்கரன் தனக்குப் பல இன்னல்களைச் செய்கிறான் என்றும் சரபோஜியிடம் கூறினார். இது, எரியும் தீயில் எண்ணெ வார்த்தது போலாயிற்று.

இந்நிலையில் ஒரு திட்டம் உருவாகியது. பாம்பாற்றுக்கு வடக்கேயுள்ள பகுதிகளின் அதிகாரத்தை தஞ்சைக்குத் தருவதாயின் உதவி செய்வதாக சர போஜி வாக்களித்தார். கட்டயத்தேவரும் இதற்கு உடன்பட்டார். ஒரு புதிய திட்டமும் ஒப்பந்தமும் ஏற்பட்டது. சிவகங்கை மன்னன் சசிவர்ணத்தேவரும் கட்டயத்தேவருக்கு உதவி செய்வதென்றும், அதற்குப் பிரதியாக வள்ளிக் கோட்டை பாளையம், முதலிய பகுதிகளைக் கொடுக்கவேண்டுமென்றும் ஒப்பந் தம் செய்துகொண்டனர்.

தஞ்சை மன்னர் சரபோஜி, சிவகங்கை மன்னன் சசிவர்ணதேவர், சேது அரசின் முறையான வாரிசு கட்டயத்தேவர் ஆகிய மூவருமே இப்போது பவானி சங்கரனுக்கு எதிரியாகிவிட்டனர்.

இருபடைகளின் உதவியுடன் கட்டயத்தேவர் பவானி சங்கரனுடன் போர் தொடுத்தார். இப்போரில் இராமநாதபுரத்தின் கோட்டைகளை சரபோஜியின் யானைகள் இடித்துத் தள்ளின. போர்முனையில் எதிர்க்க இயலா மல் தோற்ற பவானி சங்கரனைக் கைதுசெய்து தஞ்சை சிறையில் அடைத்தனர். இப்போர் 1729-இல் நடைபெற்றது.

---

1 இவரை குட்டத்தேவர், கட்டயத்தேவர் என்று சில நூல்கள் குறிப்பிடுகின்றன. குமார முத்து விஜய ரகுநாத சேதுபதி என்பதே இவருடைய இயற்பெயர்.

2 Ramnad Mannual P. 235.

இதன் பிறகு, கட்டயத்தேவர், மறவர் நாட்டை மூன்று பகுதிகளாகப் பிரித்தார். பாம்பாற்றுக்கு வடக்கேயுள்ள பகுதிகளை தஞ்சைக்கு அளித்தார்[1] 1729-இல் மீதமுள்ள நிலப்பகுதியை 5ல் 3பாகத்தை கட்டயத்தேவருக்குக் கொடுத்து இராமநாதபுரத்தைத் தலைநகராகக்கொண்டு ஆட்சி செய்யவும், 5ல் 2பாகத்தை சிவகங்கை மன்னர் சசிவர்ணத்தேவருக்கு அளித்து சிவகங்கையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்யவும் வழிவகுத்தனர்[2]. இவ்வாறு 1729-ல் தஞ்சை அரசர்களால் புதிய சிவகங்கை தோன்றியது.

இராமநாதபுரத்தைத் தலைநகராகக்கொண்டு ஆட்சி செய்த பகுதியைப் பெரிய வடுகை என்றும், இவர்களைப் பெரிய மறவர்-பெரிய மருது என்றும், சிவகங்கையைத் தலைநகராகக்கொண்டு ஆட்சி செய்த பகுதியை 'வடுகை' என்றும், இவர்களை சிறிய மறவர் —சின்ன மருது என்றும் அழைக்கலாயினர். இவர்களின் வழியினரே பெரிய மருது—சின்ன மருது என்னும் மருது சகோதரர்கள்.

சரபோஜியும்—அபிராமிபட்டரும் :

தஞ்சை மன்னர் சரபோஜி தை அமாவாசையில் காவிரிப்பூம்பட்டிணத்தில் கடலாடி, தஞ்சை திரும்பும்போது திருக்கடவூர் சென்று அபிராமவல்லியுடனுறையும் அமிர்தகடேசரை தரிசிக்க விரும்பித் தனது பரிவாரங்களுடன் திருக்கடவூரை அடைந்தார். சுவாமிதரிசனம் செய்து முடித்து இறைவியை தரிசிக்க அம்பிகையின் சந்நிதிக்குச் சென்றார். அப்போது அம்பிகையின் அடியாரும், சிவாசாரியாருமாகிய அபிராமிபட்டர் தியானத்தில் மூழ்கியிருந்தார். இவர் வழிவழியாக ஸ்ரீவித்யையின் உபாசனையைச் செய்யும் குடும்பத்தில் பிறந்தவர். சரியை, கிரியை என்னும் இரண்டு சோபானங்களைக் கடந்து யோக நிலையில் யாமளையின் திருக்கோலத்தை ஆதார பீடங்களில் கண்டு கண்டு இடைப்பட்ட கிரந்திகளைத் தாண்டிச்சென்று பிரம்மரந்திரத்திலிருக்கும் சகஸ்ராரகமலத்தில் ஒளிமயமாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலலிதையின் திருவருளின்பத்தில் திளைத்துப் பத்தரைப்போல ஆனந்தாதிசய வெறி மூண்டு உலவுகின்றவர். அவருடைய அனுபவ நிலையை உணராதவர்கள் 'இவர் ஏதோ 'வாமமார்கத்தினர்' என்றும், அந்தணர்க்குரிய ஆசாரங்களை மேற்கொள்ளாமல் கள், புலால் முதலியவைகளை உண்டு மதி மயங்கி அலைகிறார்' என்றார்கள். ஆனால் அவரோ அம்பிகையைத் தினமும் தரிசித்து தியானத்தில் 'உள்ளத்தே விளைந்த கள்ளால் உண்டான களியிலே' பெருமிதத்தோடு மிதந்து வந்தார்.

ஆனந்த நிலையிலிருந்த அபிராமிபட்டரை ஆலயத்தில் தரிசித்தார் சரபோஜி. ஆனால் பட்டரோ, மன்னன் வந்த ஆரவாரமோ, அவரால் நிகழும்

---

1 இவைகளே பட்டுக்கோட்டை முதல் கொட்டக்குருக்கர் வரையுள்ள நான்கு தாலுக்காக்களாகும்.

2 Tanjore Mannual P. 773.

பரபரப்பையோ சற்றும் கவனிக்கவில்லை. யாவரும் அரசன் வந்ததை அறிந்து ஒதுங்கி நின்று மரியாதை காட்டும்போது அவர் மாத்திரம் தூண்போல இருந்தார். அங்கிருந்த சிலருக்கு இச்செய்கை கோபத்தைக் கிளப்பியது. மன்னனும் இவருடைய தோற்றப் பொலிவைக் கண்டு இவர் ஒரு மகான் என்ற எண்ணத்தால் 'இவர் யார்' என்று கேட்டார். இவரிடத்தில் வஞ்சம் கொண்டவர்கள் இவர் ஒரு பித்தர். துர்தேவதையை வழிபடுகின்றவர் கொஞ்சம் சோதிடம் மட்டுமே தெரியும்' என்றனர்.

தீபாராதனை நடந்தது. வாத்தியங்கள் முழங்கின. அந்தப் பேரொலியினால் கண்ணை மூடியபடியே நின்றவர், சற்றே கண்விழித்துச் சுற்றுமுற்றும் பார்த்தார். இவரைக் கவனித்த மன்னன் இன்று என்ன திதி? என்று கேட்க, நின்ற அபிராமிபட்டர் உடனே "பௌர்ணமி" என்று சொல்ல அருகிலிருந்தவர்கள் 'நேற்று அமாவாசை இன்று பௌர்ணமியோ?' என தமக்குள்ளே சிரித்துக் கொண்டார்கள். மன்னனே இவர் அறிவுக் குழப்பமுடைய பித்தர் என்றே கருதினர்.

மன்னரும் தன்னிருப்பிடம் சென்றார். தொண்டரும் தமது இல்லம் சென்றார். வீட்டுக்கு வந்துகொண்டிருக்கும்போது அவருக்கு உலக உணர்வுகள் தெளிவாகத் தெரிந்தது. மன்னரிடம் தாம் தவறாகப் 'பௌர்ணமி' என்று சொல்லிவிட்டதை அறிந்தார், மனம் சற்றே குழம்பியது. 'அம்பிகையின் சந்நிதியில் அப்படி வந்தது வார்த்தை' அவள்தான் அப்படிப் பேசச்செய்தாள். 'நன்றே வரினும் தீதே வருகினும் நான் அறிவது ஒன்றேயுமில்லை.' என்று தெளிவு பெற்றார். உடனே அபிராமி வல்லியைப் பாடத் தொடங்கினார். மனம் கனிந்துருகித் தமிழில் பக்தி மணக்கும் செய்யுட்களைப் பாடும் பழக்கம் அவருக்குண்டு.

சரபோஜி மன்னர் தமது இருப்பிடத்தில் தங்கி இருந்தபோது அவர் மனம் எண்ணமிட்டது. நம்மைக்கண்டு மாறுபாடாகப் பதில் சொன்னாரே! அவர்; அவரைப் பித்தர் என்று சொன்னார்களே! பித்தராக இருந்தால் அவ்வளவு நேரம் ஒன்றையும் கவனியாமல் கண்ணை மூடிக்கொண்டு நிற்க முடியுமா? அவர் முகமோ பொலிவாக இருந்ததே! இவ்வாறு அவர் சிந்தனை ஓடியது.

அச்சமயம் அம்பிகையின் திருவருளால் மன்னன் அரிதுயில் கொள்ள 'அம்பிகை தன் அடியாரின் வாக்கை மெய்ப்பிக்க எண்ணித் தனது காதிலிருந்த ஒரு தோட்டை வானில் வீசி எறிந்தாள். அது கீழ்வானத்தில் நின்று முழுமதியாக நிலவைப் பொழிந்தது. இவ்வதிசயத்தைக் கனவில் கண்ட அரசன் அபிராமி பட்டரை தரிசிக்கச் சென்றார். அப்போது அவர் அபிராமி அந்தாதியில் 79-ஆவது பாடலைப் பாடி முடித்தார். மன்னன் அடியாருடைய திருவடியில்

வீழ்ந்து வணங்கி நின்றார். அம்பிகையின் திருவிளையாடலை மன்னன் கூறக் கேட்டு மகிழ்ந்தார் பட்டர். மன்னனும் அந்தப் பாடல்களை முழுமையாகப் பாடி நூலுருவத்தில் இத் தமிழகத்திற்குக் கொடுத்தருள வேண்டும் என்று வேண்டினார். தாம் பெற்ற அனுபவத்தையும், மன்னர் பெற்ற அனுபவத்தை யும் இணைத்து ஆனந்த அதிசயப் பெருக்கோடு 80-ஆவது பாட்டைப் பாடினார்

கூட்டிய வாஎன்னைத் தன்அடி யாரில்! கொடியவினை
ஓட்டிய வா! என்கண் ஓடியவா! தன்னை உள்ளவண்ணம்
காட்டிய வா கண்ட கண்ணும் மனமும் களிக்கின்றவா!
ஆட்டிய வாநடம்! ஆடகத் தாமரை ஆரணங்கே.

(இதன் பொருள் ;— ஆயிரம் இதழ் அமைந்த பொற்றாமரையில் எழுந் தருளியிருக்கும் அரிய அழகியாகிய தேவி, ஒன்றுக்கும் பற்றாத என்னைத் தன் அடியாருள் ஒருவனைச் சேர்ந்தருளியவாறும், அங்ஙனம் சேர்த்துப் பின் என் பால் உள்ள கொடிய இருவினைகளையும் போக்கியவாறும், என்பால் அருள்புரிய ஓடிவந்தவாறும், அதனைத் தரிசித்து அறிந்தகண்ணும், மனமும் ஆனந்த மேலீட் டால் மகிழ்கின்றவாறும், இவ்வாறெல்லாம் என்னைத் திருவருள் நாடகம் ஆடிய வாறும் என்ன அதிசயம்!!)

இப்பாடலுக்குப்பின் இருபது பாடல்களையும், பயனையும்பாடி 'அபிராமி அந்தாதி'யாகிய நூலை நிறைவேற்றினார் அபிராமிபட்டர்.

செந்தமிழ்ப் பாடல்களிலீடுபட்ட சரபோஜி மன்னர் அபிராமிபட்டரை வணங்கிச் சில விளை நிலங்களை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டி வழங்கினார்.[1]

சரபோஜியும்—கலைத்தொண்டும் :

## 1. தஞ்சைக் கலைத்தட்டு

முதலாம் சரபோஜியின் காலத்தில்தான் தஞ்சையில் கலைத்தட்டு செய்யும் கலை அறிமுகம் செய்யப்பட்டது. ஆனால் இவ்வகைக் கலைக்கு நீண்ட தொரு வரலாறுண்டு. இதனைக் குறிப்பிட வேண்டுமாயின் கி. மு. 4-ஆம் நூற்றாண்டிலிருந்தே இவ்வகைக்கலை இந்தியாவில் இருந்திருக்கிறது. தஞ்சை யின் புகழில் பங்குகொண்டுள்ள 'கலைத்தட்டுக்கு' அடிப்படை 'பிடாரி' என்று குறிப்பிடலாம்.

1 இதன் விளக்கங்களை இந்தக் கட்டுரையின் சரபோஜியின் அறக்கட்டளைகள் என்னும் தலைப்பில் காண்க.

இந்தக் கலையைத் தமது குலத்தொழிலாகக் கொண்ட கலைஞர்களை ஆதரித்தவன் இந்து மன்னனான 'பிடார்' என்பவனே. இவன் கி. மு. 4-வது நூற்றாண்டில் ஹைதராபாத்தை ஆட்சி செய்தவன். இவனது ஆட்சிக்குட்பட்ட நிலப்பகுதி 'பிடார்' என்னும் சிற்றூர். இவ்வூர் ஹைதராபாத்திற்கு வடக்கே 75 மைல் தொலைவில் உள்ளது. இந்த ஊரில் குலத்தொழிலாக கலையம்சமுள்ள உலோக வேலைப்பாடுகள் செய்யப் பெற்றன. இதனால் இவ்வகை வேலைப்பாடுகளை 'பிடார்' கலைப்பாணி என்றே அழைக்கலாயினர்.[1] இதனால் இன்றும் ஹைதராபாத்தைச் சுற்றியுள்ள ஊர்களில் இவ்வகைக் கலைத்தொழில் நடைபெற்று வருகிறது.

இக்கலைநுட்பம் பொருந்திய உலோக வேலைப்பாடுகளை காகதீய ஆந்திர நாயக்க மன்னர்களும்; ஹைதராபாத் நிஜாம் போன்ற முகமதிய மன்னர்களும் ஆதரித்துள்ளனர்.

இக்கலையில் அதிக நாட்டங்கொண்ட சரபோஜி இக்கலையை தஞ்சைத் தரணிக்கு அறிமுகம் செய்துவைக்க விரும்பி, அக்கலைஞர்களை தஞ்சையில் குடியமர்த்தினர். அவர்கள் மூலமாக "பழைய கலைநுட்பம் புதிய வடிவத்தில் புதிய பாணியில் உருவாக்கினர்கள். மிகக் குறுகிய காலத்திலேயே இப்பாணி உலகப் புகழ் பெற்றது[2].

முதலாம் சரபோஜி மன்னனுக்குப்பின் அவனது தம்பி முதலாம் துக்கோஜி தஞ்சையை 8 ஆண்டுகள் ஆட்சி செய்தார். இம் மன்னனும் நுண்கலைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இதனால் இந்தக் கலைக்கு அரசாங்கத்தின் ஆதரவும், சிறந்ததொரு செல்வாக்கும் கிடைத்தது[3]. இந்தச் செய்திக்கு தஞ்சை மாவட்ட கெசெட்டியர் (1983) மேலும் வலுவூட்டுகிறது.

---

1 According to a tradition, Bidar was founded by a Hindu king in 4th century B. C. It is in 75 miles north of Hyderabad. It is said that one of the Hindu Kings of Bidar invented the manufacture of Bidr-ware.

– *Art Manufacturers of India, T. N. Mukarjee, New Delhi, 1974, P. 180.*

2...........this was an improvement that had been introduced by the artisans of Surfoji I from this fact we have to from an idea that though the art was an imitation of Bidri, some improvements were also introduced in the techniques of this are even during Serfoji's time.

– " Metal Art in Thanjavur-A short history " a Dissertation by S. Sekaran, in 1984. Dept. of History, Periyar E. V. R. College, Trichy.

3 Maratha rule in carnatic—by C. K. Srinivasan, Annamalai University, 1944, P. 236.

தஞ்சாவூர் கலைத்தட்டுக்கலை, 'கங்கா—ஜமுனா தாட' என்றே மராத்தியர் அழைக்கின்றனர். இப்பொருக்கு ஏற்ப இதில் வெள்ளியையும் செம்பொன்னையும் (செம்பு) கொண்டு கலைத்தட்டுகள் தயாரிக்கப்படுகின்றன. கங்கையின் புனிதநீர்—வெண்மையானது. யமுனையின் புனிதநீர் கருமையானது. இதனால் இதில் உபயோகப் படுத்தியுள்ள உலோகங்களைக்கொண்டு 'கங்கா-ஜமுனா தாட' (Ganga-Jamuna Plate) என்று பெயர் பெற்றது[1].

தஞ்சை கலைதட்டுகள் இன்று உலக மக்களால் விரும்பி வரவேற்கப் படுகின்றது. தஞ்சை மாவட்டத்தில் இக்கலை குடிசைத் தொழிலாகக்கொண்டு வளர்க்கப்படுகிறது. பல்லாயிரக்கணக்கான கலைஞர்கள் இக்கலைத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். பலகோடி ரூபாய்கள் இதன்மூலம் அந்நியச் செலாவணி கிடைக்கின்றது. இத்தகைய சிறந்ததொரு கலைப்பணிக்கு அடிகோலியவர் முதலாம் சரபோஜியே எனில் மிகையில்லை.

## பெரியகோவில் திருப்பணி :

மாமன்னன் இராஜராஜன் எழுப்பிய தஞ்சைப் பெருவுடையார் ஆலயத்தை, அவனுக்குப்பின் வந்த மரபினரும், தஞ்சையை ஆட்சிசெய்த நாயக்கர்களும், மராட்டியர்களும் பாதுகாத்துள்ளனர். இவர்கள் அவ்வப்போது பழுதுபார்த்து செப்பனிட்டு குடமுழுக்கும் செய்துள்ளனர். இதன்படி முதலாம் சரபோஜியும் தனது ஆட்சிக் காலத்தில் தஞ்சைப் பெரிய கோவிலுக்குக் குடமுழுக்குச் செய்துள்ளார் இதற்குரிய கல்வெட்டு விமானத்தில் செதுக்கப்பட்டுள்ளது. 241 51 மீட்டர் நீளமும் 125.218 மீட்டர் அகலமும் உள்ள கோயிலின் கருவறைமீது 66 மீட்டர் உயரமான விமானம் வீறுடன் விளங்குகிறது. விமானத்தின்மேல் 7.77 மீட்டர் பக்கமுள்ள சதுரக்கல்லின் மேல் கலசம் (செப்புக்குடம்) அமைக்கப்பட்டுள்ளது. இச்செப்புக் குடம் 339 55 கிலோ கிராம் எடையுள்ளது என்றும், அச்செப்புக் குடத்தின்மேல் வேயப்பட்டுள்ள பொன் தகடு 2926½ கழஞ்சு (1902 சாவரன்) எடையுடையது என்றும் கூறுவர். இச்செப்புக் குடத்தைத் தாங்கும் பீடத்தில் கீழே காணும் கல்வெட்டு உள்ளது. இந்தக் கல்வெட்டு முதலாம் சரபோஜியின் காலத்தைச் சேர்ந்தது. கி. பி. 1729-ம் ஆண்டு (சௌமிய—சித்திரை) பஞ்சலோகத்தை சிவபெருமாள் கொத்தன் கோத்தது என்றும் வீரபத்திர முதலியார் என்பவரும் தாண்டவராய பிள்ளை என்பவரும் முதலாம் சரபோஜி மன்னனுக்காக தேவர் நாசி அமைத்தனர் என்றும் எழுதப்பெற்றுள்ளது.

1. சவுமிய வருசம் சித்திரை மாதம்[2]
2. பஞ்சலோக கபமதில் கொத்தது சிவபெருமாள் கொத்தன்

---

1 Census Report of India-1961. Part VII-A, P. 2.

2 இக் கல்வெட்டுப் படியை கொடுத்துதவியவர் புலவர் செ. இராசு. ஆராய்ச்சி அறிஞர். தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை.

3. வத்தது தேவர் நாசி
4. ராரா சரபோசி மகாராசா
5. வீரபத்திர முதலியார் உபையம்
6. சதா சேருவை
7. தானம் தாண்டவ
8. ராய பிள்ளை

இதைப்போலவே திருவாரூர் தியாகேசர் ஆலயத்தை 12—4—1717ல் திருப்பணி செய்துள்ளார் என்றும் அங்குள்ள கல்வெட்டு கூறுகிறது.

**சரபோஜியின் அறக்கொடைகள் :**

இம்மன்னன் பல்வேறு சமயங்களில் பலருக்கு அறக்கொடைகளை நிலங்களாகவும், கிராமங்களாகவும் கொடுத்துள்ளார். இவை இன்று முழுமையாகத் தெரியவில்லை என்றாலும், பல சுரோத்திரிய கிராமங்கள் இவரால் கொடுக்கப்பெற்றுள்ளன என்பது தெளிவு. இவை வழிவழி அனுபவிக்குமாறு கொடுக்கப்பெற்றுள்ளன. இவைகளில் சில செய்திகள் உறுதியாகவும் சில இலக்கியச் சான்றுகளாகவுமே இருக்கின்றன. இவைகளை ஆய்வாளர்கள் ஆராயவேண்டும் என்ற நோக்கில் தொகுத்துக் கொடுத்துள்ளேன்.

1. **எடையாத்தங்குடி:** சுரோத்திரியமாகக் கொடுக்கப்பெற்றது. இந்த ஊருக்குச் **'சரபோஜிராஜபுரம்'** என்று பெயர். இந்த சுரோத்திரியம் "சூரிய சந்திராள் உள்ளவரையில்" அனுபவிக்குமாறு கொடுக்கப்பெற்றது. இங்கு கொடுக்கப்பெற்ற நிலம் $23,222\frac{5}{16}$ குழி. இந்த நிலக்கொடை மூன்று பேருக்கு அளிக்கப்பெற்றுள்ளது. இதில் ஒருவர் சிதம்பரம் பிள்ளை என்பவர் ஆவர். இவர் வேதியரா என்பது சிந்தனைக்குரியது. வேறொருவர் சோன்ஜி அப்பா மூன்றாமவர் பற்றித் தெரியவில்லை[1].

2. இம் மன்னருடைய தர்மாதிகாரியான **'ஐயாவையன்'** என்பவர் திருவெண்காட்டிற்கு அருகிலுள்ள **'மங்காமடம்'** என்னும் ஊரில் அந்தணர்களுக்கு ஒரு அக்ரஹாரத்தை மன்னன் பெயரால் ஏற்படுத்தியுள்ளார்[2].

3. திருக்கடையூரில் **'சரபோஜிராஜபுரம்'** என்ற பெயரில் சுரோத்திய கிராமம் கொடுக்கப்பட்டுள்ளது[3].

---

1 தஞ்சை மராட்டிய மன்னர் கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும்.
K. M. வேங்கடராமையா-தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு-1984 பக்கம் 262.

2, 3 The Maratha Rule in the Carnatic—C. R. Srinivasan, Page 231.

4. பூதலூர் ஆபத்சகாயேஸ்வர ஸ்வாமிக்கு அபிஷேகக் கட்டளையாக விட்ட நிலம் 10 அடிக்கோலால் காரில்வேலி ½ பிசானத்தில் வேலி ½ (பிசானம் என்பது தை—மாசி மாதங்களில் அறுவடையாகும் பருவம்) ஆக ஒரு வேலி நிலம் அளிக்கப்பெற்றுள்ளது[1].

5. குமரகுருபரர் காசியில் முத்தி பெற்றார். அவருக்குப்பின் வந்த நான்கு ஆதீனத் தலைவர்களும்

1. காசிவாசி ஸ்ரீலஸ்ரீ சொக்கநாத சுவாமிகள்
2. ஸ்ரீலஸ்ரீ அருணாசல சுவாமிகள்
3. ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண சுவாமிகள்
4. ஸ்ரீலஸ்ரீ சடையப்ப சுவாமிகள்

ஆகியோர் காசியிலேயே தங்கி மடத்தில் திருத்தொண்டு செய்தனர். ஐந்தாவதாக அருளாட்சிக்கு வந்த காசிவாசி தில்லை நாயகத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் கி. பி. 1720ல் திருப்பனந்தாளில் காசி மடத்தை ஏற்படுத்தினர். இவரது ஆட்சி கி. பி. 1720 முதல் 1756 வரை நடைபெற்றது. இவர் இந்த திருப்பனந்தாள் மடத்திற்கு விலைகொடுத்தும், அடகு பிடித்தும் நிலங்களைத் தன் பெயரால் வாங்கினர். மேலும் இந்த மடத்திற்கு அறக்கட்டளையாகப் பலர் நிலக்கொடைகளையும் அளித்துள்ளனர். அவற்றில் முதன் முதலாக இம் மடத்திற்கு ஒரு கிராமத்தை வழங்கியவர் முதலாம் சரபோஜியின் மனைவி என்பது குறிப்பிடத்தக்கது[2].

**கீழே காணும் செய்திகள் முதலாம் சரபோஜி காலத்து இலக்கியங்களில் உள்ளவை:**

6. இம்மன்னனுடைய அவைப்புலவர் அனந்தநாராயண சாஸ்திரி. இவரது புனைப்பெயர் 'பஞ்சரத்ன கவி'. இவர் இம்மன்னன்மீது 'சரபோஜி சரித்திரம்' என்ற பெயரில் இம்மன்னன் காலத்தில் நிகழ்ந்த வரலாற்றைச் சுருக்கமாக எழுதியுள்ளார். (இந்நூல் சென்ற 35-வது பருவ இதழில் வெளி வந்துள்ளது.) இந்தப் புலவருக்கும் மற்றும் பன்னிரண்டு பேர்களுக்கும் கி.பி.

---

1 தென்னிந்திய கோயில் சாசனங்கள். பாகம்-2. பக்கம்-608.

2 As already observed, Tillainayaka was the first Tambiran at Tiruppanandal, and he was in management from 1720 to 1756. He built the Mutt, purchased lands and took mortgages from various persons in his own name. These transaction are evidenced by exhibits.........It appears that several villages were granted to him as endowments for charities instituted at Benares in his time. He obtained one village from the Rani of Tanjore in 1720. —X Madras-P. 394.

(A. D. 1881ல் தருமபுர ஆதீனத்திற்கும் திருப்பனந்தாள் காசிவாசி கந்தசாமி தம்பிரான் அவர்களுக்கும் சென்னை உயர்நீதிமன்றத்தில் நடந்த வழக்கிலிருந்து.)

1701-ம் ஆண்டு மன்னன் சகஜி, தனது ஆட்சியின்போது, சீர்காழிச் சீமையில் இம்மன்னனின் ஆளுகைக்குட்பட்ட பாளையக்காரர்கள் மூலமாக 'வரிசைப் பத்து' கிராமத்தில் 'அநாதிநாசு' நிலங்கள் அளிக்கப்பட்டுள்ளன[1]. அந்தப் பன்னிரண்டு பேர்களில் இந்த அனந்த நாராயண சாஸ்திரியும் ஒருவர். இவர் பிற்காலத்தில் தஞ்சை அரசவையை விட்டுவிட்டு பிற இடங்களுக்குச் சென்று மீண்டும் தஞ்சைக்கே வருகிறார். அப்போது முதலாம் சரபோஜி ஆட்சி செய்து கொண்டிருந்தார். அவரிடம் 'தனக்கு மீண்டும் நிலம் அளிக்கவேண்டு மென்றார், கொடுப்பதைக் காலந் தாழ்த்தாமல் உடனடியாகக் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்[2]. இவனைச் செவிமடுத்த மன்னன் நிலக்கொடையளித்தாரா இல்லையா என்பது ஆய்வுக்குரியது.

7. பாகவதமேளா என்னும் இசை நாட்டிய நாடகம் தஞ்சைத் தரணியில் செழிப்பாக வளர்க்கப்பெற்றது. இக்கலை வளர மன்னர்கள் பலரும், நிலக்கொடைகளை அளித்து ஆதரவு நல்கியுள்ளனர் மெலட்டூர், சாலிய மங்கலம், அம்மாபேட்டை, ஊத்துக்காடு முதலிய ஊர்களில் இந்த பாகவத மேளா கலை நிகழ்ச்சிகள் ஆண்டுதோறும் நடைபெற்று வந்திருக்கின்றன. ஆனால் இற்றைய நாளில் மெலட்டூரிலும், சாலியமங்கலத்திலுமே பாகவத மேளா இசை நாட்டிய நாடகங்கள் நடைபெற்று வருகின்றன.

இந்த பாகவதமேளாக் கலைஞர் குழுவைச் சேர்ந்தவரே ஸ்ரீ நாராயண தீர்த்த ஸ்வாமிகள். இவரின் சிஷ்ய பரம்பரையினரும், பாகவதமேளா கலைக் குடும்பத்தில் தோன்றியவருமான ஸத்குரு ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் தனது குலத்திற்காக செய்த நூல்களே 'நௌக சரித்திரமும்' 'பிரஹ்லாத பக்த விஜய'முமாகும். பாகவத சப்பிரதாயத்திற்குரிய அடிப்படையான நவவித (ஒன்பது வகையான)[3] சோபானங்களை, முதன் முதலில் கூறியவர் என்பதால் 'பிரஹ்லாதன்' பாகவத சப்பிரதாயத்திற்கே முதன்மையானவர் என போற்றப் படுகிறார். அதனால் 'பாகவத மேளா' நாட்டிய நாடகங்களில் 'பிரஹ்லாத நாடகமே' முதன்மையுடையதாக இருக்கிறது. இந்த பிரஹ்லாத நாடகம் ஆண்டுதோறும் சிறப்பாக நடத்துவதற்கு மன்னன் சரபோஜி அறக்கட்டளை

---

1 மராட்டியர் காலச் செப்பேடுகள்—செ. இராசு தமிழ்ப்பல்கலைக் கழக வெளியீடு, 1983, பக்கம்-31.

2 முதலாம் சரபோஜியும் அவர்காலத்து நூல்களும்—சரஸ்வதி மகால் நூலகப் பருவ இதழ்—எண். 35ல் (1985) அனுபந்தம் ஸ்லோகங்கள்-30, 31, 32.

3. श्रवणं कीर्तनं विष्णोः स्मरणं पादसेवनम् ।
अर्चनं वन्दनं दास्यं सख्यं आत्मनिवेदनम् ॥

-श्रीमद्भागवतम्

யாக நிலம் கொடுத்துள்ளார். இந்த நிலம் எங்கு, யாருக்கு, எவ்வளவு அளித்துள்ளார் என்னும் செய்தி தெரியவில்லை. நிலக்கொடையளித்த செய்தி மட்டுமே இவரது அவைப்புலவர் வேங்கடேச கவி இம்மன்னனைப்பற்றி எழுதிய 'சம்பு காவியத்தில்' குறிப்பிடுகின்றார்[1].

8. முதலாம் சரபோஜி ஆட்சிக்கு வந்தபின் பல ஆண்டுகளாகியும் இவருக்கு மக்கட் பேறில்லை. இதனால் 'இம்மன்னனுடைய அவைப் புலவரும், அன்பிற்குரியவருமான மல்லாரி பண்டிதர் என்பவர் மன்னனுடைய குறையை நீக்க விரும்பி அவரின் அனுமதியுடன் பல புண்ணியத் தலங்களுக்கு யாத்திரை செய்தார். கும்பகோணம், மயிலாடுதுறை, வைதீஸ்வரன்கோயில் முதலிய தலங்களுக்குச் சென்று தஞ்சை திரும்பும் வழியில் 'தீபாம்பாள்புரம்'[2] சென்று அங்கு திருக்கோயில் கொண்டருளும் 'திருக்கோடீசுவரப் பெருமானை' தரிசித்து அங்கேயே சில நாட்கள் தங்கினார். இச்சமயம் அந்த தீபாம்பாள்புரத்தில் சதாசிவபிர்மேந்திரரும் தங்கியிருந்தார். அப்பெருந்தவ முனிவரிடம் மல்லாரி பண்டிதர் சென்று வணங்கி சரபோஜி மன்னனுக்குக் குழந்தைப் பேறில்லையென்றும், அருள்புரிய வேண்டுமென்றும் கேட்க, தன்னிடமிருந்த 'ஆத்ம வித்யா விலாசம்' என்னும் நூலை அளித்து மன்னனுக்கும் அருள் பாலித்தார்.' என்கின்ற செய்திகளை ஒரு சீட்டுக் கவிதையாக எழுதி மன்னனுக்கு அனுப்பினார் மல்லாரி பண்டிதர்.

மேலும், இச் சீட்டுக்கவியில், " தனக்கு முதுமைப் பருவம் வந்து விட்டதால் உடலில் வலுவின்றியுள்ளேன் என்றும், இனி தலயாத்திரை செய்ய இயலாமையால் இந்த தீபாம்பாபுரத்திலேயே தங்கிவிட எண்ணம் கொண்டிருப்பதாகவும், இவ்வூரின் எல்லையில் தனக்கு ஒரு மடம் கட்டிக் கொடுக்குமாறும், உரிய ஆணையை உடனே எதிர்பார்க்கிறேன் " என்றும் எழுதியுள்ளார். இதனால் மன்னன் சரபோஜி இவர் தங்குவதற்காக ஒரு மடம் கட்டிக்கொடுத்ததாகவும், அம் மடம் தற்போது இல்லை அது இடிந்துபோய்விட்டது என்றும் செவி வழிச் செய்தியாக அறிகிறேன். தற்காலத்தில் மடம் இருந்ததற்குரிய சுவடே தென்படவில்லை. இச்செய்தியும் ஆய்வுக்குரியது.

9. சரபோஜி மன்னன் அபிராமிபட்டருக்குத் தனது காணிக்கையாக சுரோத்திரியமாக சில கிராமங்களில் ஆண்டொன்றுக்கு வேலிக்கு எட்டு நாழி

---

1. " भिन्दन् स्तम्भमुरं हिरण्यकशिपुं क्षेत्रप्रदाताभवत -
प्रह्लादोत्सवकृन्नृसिंह इति तां ख्यातिं गरिष्ठां भजन् "॥

-भोसलवंशावलिचम्पू:

Sarasvati Mahal Library Descriptive Catalogue—No. 4240.

2 எமது கட்டுரை 'குலவிளக்கு தீபாம்பாள்' நூலகப் பருவ இதழ் 33ல் " தீபாம்பாள்புரம் " பற்றிய செய்திகள் விரிவாகக் கூறப்பெற்றுள்ளன.

நெல் அவருக்கும், அவரது சந்ததியினருக்கும் சுரோத்திரிய உரிமை அளித்து செப்புப்பட்டயத்திலும் எழுதிக்கொடுத்தார்.

இன்றும் இந்த உரிமையை இவரது பரம்பரையினர் அனுபவித்து வருகின்றனர். திருச்சியில் வயலின் வித்வானுக இருக்கும் 'ஸ்ரீ அமிர்த பாரதி' என்பவர், அபிராமிபட்டரின் வழிவந்தவர். அந்த வித்வான் ஒவ்வோராண்டும் இதில்வரும் நெல்லைத் தொகுத்து அன்னை அபிராமிக்கு அபிஷேக ஆராதனைகளைச் செய்து அன்னதானம் செய்துவருகிறுர்[1].

முதலாம் சரபோஜி இயற்றிய நூல்கள் :

## 1. கோர்வையாஞ்சேசாகித்யாஞ்சே ஜினஸ் :

முதலாம் சரபோஜி மன்னரும், தனது தனயன் சகஜியைப்போல் சாகித்யங்களை இயற்றும் ஆற்றல் பெற்றிருந்தார். இம் மன்னரால் இயற்றப்பட்ட மராட்டிய மொழிப்பதங்கள் இந்த நூலகத்தின் வெளியீடாக (எண். 79) வெளிவந்துள்ளது. இதன் பெயர் "**கோர்வையாஞ்சே சாகித்யாஞ்சே ஜினஸ்**". இந்த நூலை இயற்றியவர் இரண்டாம் சரபோஜி என்று இதன் பதிப்பாசிரியர்கள் குறித்துள்ளனர். அந்த நூலை நன்கு ஆய்வு செய்யும்போது இதன் சாகித்யகர்த்தா 'இந்த நூலில் எந்த இடத்திலும் தனது பெற்றோரைப் பற்றியோ, வேறு எந்தவிதமான குறிப்புக்களையோ அதில் குறிப்பிடவில்லை. இதனை இயற்றியவர் 'இரண்டாம் சரபோஜியே' என்று உறுதியாகவும் கூறமுடியவில்லை. சாகித்யங்களின் அமைப்பு, பொருள் முதலியவற்றை நோக்கும்போது முதலாம் சரபோஜியால்தான் இயற்றப்பட்டிருக்கும் என்பதைக் கண்டுபிடிக்க முடியும்.

இந்த நூலில் 'குமார சம்பவ நிருபணம்' என்ற தலைப்பில் 'முருகப் பெருமான் திருவவதாரப்படலம்' வரையுள்ள பகுதிகளுக்கு சாகித்தியங்கள் அமைக்கப் பெற்றுள்ளன. இந்தப் பாடல்கள் வைதீஸ்வரன் கோவிலில் எழுந்தருளியுள்ள முத்துக்குமாரசாமியிடம் பிரார்த்தனை செய்வது போல் அமைந்துள்ளது.

மன்னன் ஷாஜிக்கும் முதலாம் சரபோஜிக்கும் சந்ததியில்லாமையால் இவர்களின் தம்பி துக்கோஜி என்னும் துளஜா ஆட்சிக்கு வந்தார் என்பது வரலாறு. ஆகவே, முதலாம் சரபோஜி தனக்குக் குழந்தைப் பேறு வேண்டும் என்பதற்காக, தங்களது குடும்பத்தின் பிரார்த்தனை க்ஷேத்திரமான வைதீஸ்வரன் கோயில் சென்று அங்கு எழுந்தருளியுள்ள முத்துக்குமார சுவாமியின் மீது பதம் பாடியுள்ளார். அதில் "குழந்தை இல்லாத வீடு, வாசல், குடும்பம், எல்லாம் வீண், இதனுல் மனத்துன்பந்தான் மிச்சம். இந்தத் துன்பம் நீங்கி நான்

1 எழில் உதயம். கி. வா. ஜ. அமுதநிலைய வெளியீடு, சென்னை, 1980, பக்கம் 7.

மகிழ்வாக இருக்க குமரனே! நீயே எனக்குக் குழந்தையாக வருவாயாக. உன்னை நான் கட்டித் தழுவுகிறேன்[1]. என்றும் "சேவகன், சேவிக்கப்பட்டவன் என்கிற உறவை விட்டுவிட்டு அந்தத் திரிபுரசம்ஹாரனை ஆராதித்தால் அவன் சகல ஐஸ்வர்யங்களையும் மக்கட்பேற்றையும் அளித்து நற்கதியும் கொடுப்பான்"[2] என்றும் பாடியுள்ளார். இதைப் போன்று பல இடங்களில் மக்கட்பேற்றைப் பற்றியே அதிகமாகக் குறிப்பிட்டுள்ளார். இதன் மூலம் இதனை இயற்றிய சாகித்யகர்த்தாவுக்கு குழந்தைப் பேறில்லை என்பது தெளிவு. மக்கட்பேறில்லாதவர்கள் சஷ்டி விரதமிருந்து முருகப் பெருமானை வழிபடுவது என்பது மரபு. இதனால் இந்த சாகித்யகர்த்தா சரபோஜி, முதலாம் சரபோஜியாகவே இருக்கும் வாய்ப்புண்டு. இரண்டாம் சரபோஜிக்கு 'சிவாஜி' என்ற மகன் இருந்தார் என்பதும் தெரிந்ததே. இதனால் இரண்டாம் சரபோஜி இப்பாடலைப் பாடவில்லை என்பதும் தெளிவு பெறுகிறது.

அடுத்து, ஷாஜி மன்னனும் முத்துக்குமாரசாமி, பேரிலும், வைத்யநாதஸ்வாமி பேரிலும் சலாம் தருக்களைப் பாடியுள்ளார். ஜக்கினி தருக்களைப் புனைவதில் ஷாஜி மன்னர் புகழ் வாய்ந்தவர். இதனால் இவரைப் பின்பற்றியே முதலாம் சரபோஜியும் அக்காலத்து வழக்கப்படியே சாகித்தியங்களைப் புனைந்துள்ளார். இரண்டாம் சரபோஜி மன்னர் காலத்தில், சலாம்தரு, ஜக்கினிதரு போன்ற அமைப்புடன் கூடிய சாகித்தியங்கள் புனையப்படவில்லை என்பதும், இதைப் போனற வழக்கமோ, வேறு புலவர்கள் எழுதிய சாகித்யச் சான்றுகளோ இதுவரை கிடைக்கவில்லை என்பதும் சிந்திக்கத்தக்கது.

மேலும், முதலாம் சரபோஜியின் சகோதரர்களான ஷாஜியும், துளஜாவும் இசை, நாட்டியம், சாகித்தியம் ஆகிய கலைகளைத் திறமையாகக் கையாண்டிருப்பதால் முதலாம் சரபோஜியும் பதங்களை இயற்றும் வல்லமையைப் பெற்றிருத்தல் கூடும். மோடி ஆவணச் செய்திகளிலும் 'சரபோஜி ராஜா ஸாஹித்யம்—தைலங்கபாஷா பதம்—பக்கம் 96 பூர்த்தி— சரபோஜி ராஜக்ருதம்' என்ற சான்றுகளிலும் கிடைக்கின்றன[3]. இந்த நூலில் காணப்படும் சாகித்தியங்களில் 'சரபேந்திர' என்று 'இந்திர' என்ற பட்டப்பெயர் வருவதிலிருந்து 'இந்திர' பட்டம் இரண்டாம்சரபோஜிக்கே உரியது என்றும் சொல்லமுடியாது.

---

1 लेंकराविणें घरदार संसार । काथ सकल हीं व्यर्थ जोजार ।
धाक धरूनको षण्मुखा ये । तुजला घेयिन अलाये बलाये ॥

—कोर्व्यांचे साहित्याञ्चे जिन्नस् P. 46

2 कोर्व्यांचे साहित्याञ्चे जिन्नस -P. 269.

3 தஞ்சை மராட்டிய மன்னர்கால அரசியலும், சமுதாய வாழ்க்கையும்—
K. M. வேங்கடராமையா, தமிழ்ப்பல்கலைக் கழக வெளியீடு, 1984, பக். 220.

இதே பட்டத்தை முதல் சரபோஜியும் பெற்றிருக்கவேண்டும். அவருடன் பிறந்த மற்ற இரண்டு சகோதரர்களும் சாகேந்திர-துளஜேந்திர என்ற பெயர் பெற்றுள்ளதை அறிவோம். ஆதலின் இப்பாடல்களை இயற்றியவர் முதலாம் சரபோஜியா? இரண்டாம் சரபோஜியா? என்பதை பெயரை மட்டும் கொண்டு கூறமுடியாது. பாட்டின் பொருளையும், கருத்தையும் கொண்டு கவனிக்கும் போது குழந்தைக்காக ஏங்கியவர் முதலாம் சரபோஜியே ஆகும். ஆதலால் இப்பாடல்களை இயற்றியவர் முதலாம் சரபோஜியே என்று கொள்வதுவே பொருந்தும்.

## 2. ராகவ சரிதம் :

இந்த நூல் முதலாம் சரபோஜியால் இயற்றப்பட்டதாக இந்நூலின் இறுதிக் குறிப்பில் (Colophon) கூறினும் இம்மன்னரின் அவைப்புலவரும் இம்மன்னரின் வரலாற்றைக்கூறும் 'சரபோஜி சரித்திரம்' என்னும் காவியத்தை இயற்றிய வருமான அனந்த நாராயண சாஸ்திரி என்பவரே இயற்றியுள்ளார். இது பற்றிய குறிப்பை இந்த நூலின் இரண்டாவது சர்கத்தில் இக்கவிஞர் குறிப்பிட்டுள்ளார்.

## அவைப் புலவர் வரலாறும்; நூல்களும்

### சம்ஸ்கிருதம் :

### 1. ஜகன்னாத பண்டிதர் : (जगन्नाथ बालकृष्ण)

இவரது பெற்றோர்களின் பெயர் பாலகிருஷ்ணன்—லக்ஷ்மி. பால கிருஷ்ணன் சரபோஜி மன்னரது அமைச்சர்களில் ஒருவர். இவர் காமேஸ்வரர் அல்லது காமாக்ஷி சூரி என்று அழைக்கப்பெறும் புலவர் பெருமானிடம் கல்வி பயின்றவர். இவரது குடும்பத்தினர் மராட்டிய நாட்டிலிருந்து தஞ்சையில் குடியமர்ந்த 'தேசஸ்த்த பிராமணர்கள்'. தாய்மொழி மராட்டி. குலப்பெயர் 'உகாவூகர்' எனப்படுவது[1]. தஞ்சையில் பிறந்தவர். இவர் தனது வாழ்க்கையின் பிற்காலத்தில் சக்தி வழிபாட்டில் (ஸ்ரீ வித்யா) ஆவல் கொண்டு பாசுரானந்தா (பாஸ்கரராய தீக்ஷிதர்) அவர்களிடம் ஸ்ரீவித்யை பெற்றுக் கொண்டார். இவருடைய தீக்ஷா நாமம் 'உமானந்த நாதர்'[2] எனப்படுகிறது. இவர் எழுதிய நூல்களை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். தீக்ஷை அடைவதற்குமுன் என்றும், பின் என்றும் வகைப்படுத்தலாம். தீக்ஷை அடைந்தபின்

---

1 ச்ருதபேடவ என்று N.C.C. II, 390-a தொகுதியில் காணப்படுகிறது. உகாவூகர் என்பது இந்நூலக மராட்டி மொழிச் சுவடி கேட்டலாகில் குறிப்பிடப்பட்டுள்ளது-தொகுதி—1, 1968, 149.

2 Ibid, 390-a.

இவருடைய எழுத்து ஸ்ரீவித்யையின் நூற்கள்பால் சென்றடைந்தன. தீக்ஷையடையுமுன் எழுந்த நூல்கள்:

1. ரதிமன்மத நாடகம்
2. சரபராஜ விலாசம்
3. வசுமதி பரிணயம்
4. ஜனன விலாஸம்

முதலியன.

இதில் ரதிமன்மத நாடகம் (D. *4488*—J. L. *646)* என்னும் நாடகம் தஞ்சாவூர் விண்ணாற்றங்கரையில் எழுந்தருளியுள்ள ஆனந்தவல்லி உடனுறை தஞ்சபுரீசர் ஆலயத்தின் வசந்த விழாவில் மக்கள்—மன்னன் முன்னிலையில் நடைபெற்றது என்னும் குறிப்பை இந்த நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார். இந்த நாடகத்தில் முதலாம் சரபோஜியின் துதியும் காணப்படுகிறது. இந்தச் சுவடி *21—11—1755*ஆம் ஆண்டில் பிரதி செய்யப்பட்டது. 'இந்தப் பிரதி செய்யப்பெற்ற ஒரே ஒரு சுவடியே இந்த நூலகத்தில் காணப்படுகிறது.

சரபராஜ விலாசம்: இந்த நூலை இதே காலத்தில் வாழ்ந்த மற்றொரு ஜகன்னாத பண்டிதர் எழுதியுள்ளதாக இந்த நூலகத்தின் D கேட்டலாக் எண். *19*-ல் திரு. P. P. S. சாஸ்திரி குறிப்பிடுகிறார். ஆனால் இந்த நூலின் மையப்பகுதியில் 'பாலகிருஷ்ண ஜகன்னாதன்' எழுதியதாக நூலாசிரியர் குறிப்பிடுவதால் திரு P. P. S. சாஸ்திரியின் குறிப்பு தவறு என்பது தெளிவாகிறது. இப்புலவர் இந்த நூலை எழுதிய ஆண்டு கி. பி. *1722* என்ற செய்தியையும் புலவர் குறிப்பிடுகிறார். இவர் இம்மன்னனின் அவைப்புலவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**இப்புலவர் தீக்ஷையடைந்தபின் எழுதிய நூல்கள்:**[1]

5. **நித்யோத்ஸவ நிபந்தம் (नित्योत्सव निबन्ध):** இந்த நூல் பரசுராம கல்ப சூத்திரத்தை அடிப்படையாகக்கொண்டு கி. பி. *1745*-ல் எழுதப்பெற்றது.

**6. பாஸ்கர விலாஸம் (भास्करविलासः)** - இவர் 'தனது குருவின் மீது இயற்றியது[2].

**7. ஹ்ருதயாமிருதம் (हृदयामृतम्)** இந்த நூலை கி. பி. *1742*-ல் இயற்றியுள்ளார்.

---

1 புலவர்களின் வரலாற்றுச் சுருக்கமும்—நூல்களும் ஆய்வுக்குப் பயன்படும் என்ற காரணத்தால் இம்மன்னரின் அவைப் புலவர்களின் பிற நூல்களும் இங்கு குறிப்பிட்டுள்ளேன். இவ்விடங்களில் சில நூல்களின் காலங்கள் மட்டும் மாறுபடும்.

2 N. C. C. Vol. II. P. 390 (a)

8. ஞானேஸ்வரி டிப்பணம் (ज्ञानेश्वरीटिप्पण) ஸ்ரீமத் பகவத் கீதைக்கு மராட்டிய மொழியில் 'ஓவி' என்னும் விருத்தப் பாடல்களில் உரை எழுதியுள்ளார் ஞானேஸ்வரர். இவர் எழுதிய உரை நூலை 'ஞானேஸ்வரி' என்று மராட்டியர்கள் போற்றி அழைக்கின்றனர். இத்தகைய சிறந்த உரைக்கு இந்த பாலகிருஷ்ண ஜகன்னாதன் மராட்டியில் குறிப்புரை (டிப்பணம்)யை கி. பி. 1747-ல் இயற்றியுள்ளார் என்பதையும் அறியமுடிகிறது[1].

9. ஆத்மபோத விவரணம் (மராட்டி)[2]

2. ஜகன்னாத பண்டிதர்—2 (श्रीनिवासजगन्नाथ)

இவர் மராட்டிய அந்தனர் வகுப்பினர். 'காவலே' என்னும் வம்சத்தினர். ஸ்ரீநிவாசன்—சோயராபாயி தம்பதிகளுக்குப் பிறந்தவர். புகழ்பெற்ற கவி ரகுநாத பண்டிதர் இப்புலவர் பெருமானுக்குப் பெரிய தந்தை. இவர் எழுதிய நூல்கள்[3]

1. அனங்கவிஜய பாணம் (अनङ्गविजयभाणः)

2. சிருங்கார தரங்கிணீ (शृङ्गारतरङ्गिणी)

ஆகியவைகள்.

மேலே குறிப்பிட்டுள்ள அனங்க விஜய பாணம் என்னும் நாடகம், (நாடகங்கள் பத்து வகைகளாக வகைப்படுத்தப்படும். அவைகளிலொன்று பாணம் என்பது.) தஞ்சாவூர் பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் ஆலய வசந்த விழாவில் மக்கள்—கற்றறிந்த சான்றோர்களின் முன்னிலையில் அரங்கேற்றம் செய்யப்பெற்றுள்ளது, என்னும் செய்திகள் இச்சுவடியில் 'சூத்திரதாரன்' மூலமாகக் குறிப்பிடுகின்றார், ஆசிரியர்

மேலும், 'இப்புலவருடைய தந்தை சரபோஜியின் அமைச்சர் என்றும் இதன் மூலம் குன்றிலேற்றிய விளக்கைப்போல் தான் பிரகாசிப்பதாகவும்

---

1 & 2 Sarasvati Mahal Library Descriptive Catalogue of Marathi Mss. Vol. I Page No. 149, 21.

3 சரபராஜ விலாஸம் என்னும் நூலை இப்புலவர் எழுதியதாக இந்த நூலகத்தின் Descriptive Catalogue தயாரித்தளித்த திரு. P. P. S. சாஸ்திரி குறிப்பிட்டிருந்தாலும் நூலில் உரிய அகச்சான்றில்லை. நூலில் பாலகிருஷ்ண ஜகன்னாதன் எழுதியதற்கான அகச்சான்றுகள் உள்ளன. ஆகவே சரபராஜ விலாஸம் என்னும் நூலை இயற்றியவர் இவரில்லை என்பதால் இங்கு அதைப்பற்றி குறிப்பிடவில்லை.

கூறிக்கொள்ளுகிறார்.'[1] இதனால் மன்னன் சரபோஜிக்கு இருந்த அமைச்சர்கள் பலரில் இவரின் தந்தை ஸ்ரீநிவாசனும் ஒருவர் என்பதையும் அறியலாம்.

3. கோவிந்த நாதர் (गोविन्दनाथः)

இவர் ஒரு துறவி. 'சங்கராசாரிய சரிதம்' என்னும் நூலை 30 3-1713ல் இயற்றியுள்ளார். இத்துறவியிடம் 'சங்கராச்சாரியாரின்' வரலாற்றை மிகச் சுருக்கமாக எழுதுமாறு கேட்டுக்கொண்டார் சரபோஜி மன்னரின் அன்னை தீபாம்பாள். அதனால் இவர், பல சங்கர விஜய நூல்களை ஆராய்ந்து இந்த நூலை இயற்றியுள்ளார். இந்த நகல் தஞ்சை அரண்மனையிலேயே மலர்ந்த தால் இந்த நூலகத்தில் மட்டுமே காணப்படுகிறது. இத்துறவி பல நூலைத் தொகுத்துச் சுருக்கமாகப் பாட 'வெங்கடேச சாஸ்திரி' என்பவர் ஏட்டில் எழுதியுள்ளார்[2].

4. திரியம்பகராயமகி:

இவரால் இயற்றப்பெற்ற இராமாயணத்தின் உரைக்கு 'தர்மாகூதம்' என்று பெயர். இவர் முதலாம் ஏகோஜி, இரண்டாம் சகஜி, முதலாம் சரபோஜி ஆகியோருடைய அவையில் அமைச்சராகப் பணிபுரிந்தவர். இவர் எழுதிய 'தர்மாகூதம்' என்னும் உரை அன்னை தீபாம்பாளின் விருப்பப்படி எழுதியுள்ளார். இந்த நூல் சகஜி மன்னனின் ஆட்சிக் காலத்தில் அதாவது கி. பி. 1719ல் உரை எழுதி நிறைவேற்றிற்று[3]. அடுத்து இவர் இயற்றியதாகக் கூறப்படும் தாமாகூதமும், 'ஸ்த்ரீ தர்ம பத்ததி' என்னும் நூலும் இவர் எழுத வில்லை என்றும், இவருடைய அன்புக்கும், ஆதரவுக்கும் பாத்திரமான டுண்டி வியாசரே இயற்றி, திரியம்பகராயமகியின் பேரில் அங்கிதம் செய்துள்ளார் என்றும் டாக்டர் இராகவன் அவர்கள் சாஹேந்திர விலாசத்(முன்னுரை— பக் 26—27)தில் குறிப்பிட்டுள்ளார்.

---

1 आः किं तस्य भोसलकुलतिलकसचिवशिखामणेः तनयः । तर्हि ज्ञायत एव शैलश्रृङ्गनिहितदीपो हि जगन्नाथवीरो नाम ॥ — अनङ्गविजयभाणे

Sarasvati Mahal Library Descriptive Catalogue No. 4572. Burnell's Catalogue No. 5281.

2 எமது கட்டுரை குலவிளக்கு தீபாம்பாள் நூலகப் பருவ இதழ் எண். 33, பக். 12.

3 Tryambakaraya Makhin finished his Dharmakuta on the Ramayana in A. D. 1719. —Mudraraksasanataka katha Ed. Dr. V. Raghavan. Pub: Sarasvati Mahal Library 1946. P. 3.

## 5. டுண்டி வியாஸர்:

இவர் முத்ராராக்ஷஸம் என்னும் நாடகத்தின் கதையை வசன நடையில் எழுதியுள்ளார். இவர் இந்தக் கதையை கி.பி. 1713ல் எழுதிமுடித்துள்ளார்[1]. காசியிலிருந்து இவர் தஞ்சைக்கு வந்து குடியேறியவர். 'வியாஸ்'என்பது இவரது குடும்பப்பெயர். இவர் மராட்டி அரசாங்கத்தில் 'ராஜபுராணிகர்' (அரசாங்கத்தின் சொற்பொழிவாளர்) ஆக இருந்தவர். மன்னர்களுடைய ஆதரவாலும், அமைச்சர் திரியம்பகராயரின் ஆதரவாலும் சுவாமிமலையில் வாழ்ந்தவர். இவரது தந்தையின் பெயர் லக்ஷ்மணன். இப்புலவர் சகஜி, முதலாம் சரபோஜி ஆகியோரின் ஆட்சி காலத்தில் அவைப்புலவராகப் பணியாற்றியவர். மன்னன் சகஜி மீது பாடிய அஷ்டபதியைப் புகழ்ந்து பாராட்டி சகஜி மன்னன் இவருக்கு 'அபினவஜயதேவன்' என்ற பட்டத்தைக கொடுத்து கௌரவித்தான்.

## 5. அனந்தராயமகி:

இவர் முதலாம் ஏகோஜியிடம் அமைச்சராகப் பணியாற்றிய ந்ருசிம்மராயமகி என்பாரின் புதல்வர். சகஜி-சரபோஜி ஆகியோரிடம் அமைச்சராகப் பணியாற்றியவர். இவர் புலவராகவும், வேதநெறியில் மிகுந்த பற்றுள்ளவராகவும் இருந்ததால் பல புலவர்களுக்கும், வேத நெறியில் நின்று யாக, யக்ஞங்களைப் புரிகின்றவர்களுக்கும் உதவி செய்தவர்.

இப்புலவர் பெருந்தகை அத்வைத வேதாந்தக் கருத்தை மையப் பொருளாகக் கொண்டு 'வித்யாபரிணயம்' என்னும் நாடகத்தை இயற்றியுள்ளார். இந்த நாடகம் தஞ்சையை அடுத்துள்ள விண்ணாற்றங்கரையில் எழுந்தருளியுள்ள ஆனந்தவல்லீ உடனுறை தஞ்சரீசர் ஆலயத்தில் நடைபெற்ற ஒரு விழாவின்போது கற்றறிந்த சான்றோர்—பொதுமக்கள் கூடிய அரங்கில் நடிக்கப்பெற்றுள்ளது. இந்த நாடகம் மன்னன் முதலாம் சரபோஜியின் காலத்தில் எழுதப்பட்டது என்று, இந்நாலில் குறிப்பு காணப்படுகிறது. இந்த நூல் அச்சாகியுள்ளது.

இவர் எழுதிய வேறு நூல்—ஆச்வலாயன க்ருஹ்ய ஸூத்ர விருத்தி (D. 11763—B. 649)

## 6. வேங்கடேச கவி: (நைத்ருவ கோத்திரம்)

இக்கவிஞர் சகஜி, முதலாம் சரபோஜி ஆகியோரின் அவைப் புலவர். இவருடைய தந்தையின் பெயர் 'தர்மராஜர்'. சீர்காழிக்கு அருகிலுள்ள

---

1 Dundi finished his gloss on the Mudraraksasa in A. D. 1713.

மணலூர் என்னும் பதியில் வாழ்ந்தவர். இவர் கீழே காணும் ஆறு நூல்களை இயற்றியவர்.

1. போசல வம்சாவளி சம்பூ — காவியம்
2. சபாபதி விலாசம் — நாடகம்
3. நீலாபரிணயம் — ,,
4. ராகவானந்தம் — ,,
5. உன்மத்தகவி கலசம் — பிரஹஸனம் (நாடக வகையிலொன்று)
6. பிரதிக்ஞாராகவம் — (இந்நூல் கிடைக்கவில்லை)

சகஜி மன்னரின் ஆட்சிக் காலத்தில் கி. பி. 1709-ஆம் ஆண்டு சீர்காழிச் சீமையில் 'வரிசைப்பத்து' என்னும் கிராமத்தில் 12 நபர்களுக்கு நிலக்கொடையளித்துள்ளார். அதில் இப்புலவர் பெருமானுமொருவர் என்று அறிய முடிகிறது[1] மேலும் இவர் எழுதியுள்ள **நீலாபரிணயம்** (D 4379 B) என்னும் நாடக நூல் புலவரால் எழுதப்பட்ட மூலச்சுவடியாக இருக்கும் என்றும் கருத முடிகிறது.

7. மகாதேவ வாஜபேயி:

இவர் சகஜி, சரபோஜி, துளஜா ஆகியோரின் அமைச்சராகப் பணியாற்றிய **அனந்தராய மகியின்** ஆதரவில் சுவாமிமலையில் வாழ்ந்தவர். 'வாஜபேயம்' என்னும் யாகத்தைச் செய்தவர். இதனால் மக்கள் இவரை வாஜபேயி என்று அழைக்கலாயினர். இவர் சிறந்த புலவர். இவர் இயற்றிய நூல்கள்:

1. போதாயன ச்ரௌத ப்ரயோக விருத்தி (D 2612. B 3695)
2. போதாயன ச்ரௌத ஸூத்ர வ்யாக்யா (D 2060, B 9165)

இவருடைய மூத்த புதல்வரே வாசுதேவ தீக்ஷிதர்.

8. வாசுதேவ தீக்ஷிதர்:

இவர் மேலே காணும் மகாதேவ வாஜபேயியின் மூத்த புதல்வர். இவரும் அனந்தராய மகியின் ஆதரவில் சுவாமிமலையில் வாழ்ந்தவர். இவர் ஐந்து நூல்களை இயற்றியுள்ளார். இதில் 'ஸித்தாந்த கௌமுதீ' என்னும் வடல் மொழியின்[2] இலக்கண நூலுக்கு 'பாலமனோரமா' என்னும் உரையை

---

1 Bhosala vamsavali Campuh nnder preparation for edition by the Author

2 சம்ஸ்கிருதம் என்னும் சொல்லுக்குத் தமிழாக்கமாக வடு+அல்+மொழி = வடல் மொழி என்று கொள்க. வடமொழியன்று.

எழுதியவர். (இந்த உரையே மிக எளிமையானது என்று புலவர்களால் கொண்டாடப்படுகிறது. இன்றும் அவ்வுரையே மாணவர்களுக்கு மிகவும் பயன்படுகிறது).

இவர் எழுதிய பிற நூல்கள்:

1. போதாயன ச்ரௌத ஸூத்ர வியாக்கியானம்(அக்னிசயனம்)
D 2064—B 9178 (a)

2. போதாய ச்ரௌத ஸூத்ர வியாக்கியானம்(யூபைகாதசினி)
D 2065—B 9178 (b)

3. போதாயன தர்சபூர்ணமாச ப்ரயோக ரத்னம்—D 2620—B 9167

4. அத்வர மீமாம்ஸா குதூஹல வ்ருத்தி

## 9. அனந்த நாராயண சாஸ்திரி:

இவர் சகஜி, சரபோஜி ஆகியோரின் அவைப் புலவராக இருந்தவர். இப்புலவருக்கு 'வரிசைப்பத்து' கிராமத்தில் நிலக்கொடையளிக்கப் பெற்றுள்ளது. இவர் முதலாம் சரபோஜி மன்னரின் சரித்திரத்தை சிறு காப்பியமாக எழுதியுள்ளார். (இக்காப்பியம் சென்ற பருவ இதழில் அனுபந்தமாக வெளிவந்துள்ளது) பிருகதம்பா — மிருத்யுஞ்ஜயர் என்னும் தம்பதியருக்குத் தோன்றியவர்.

இவர் இயற்றிய நூல்கள்:

1. ஆனந்தவல்லி ஸ்தோத்திரம்—D. No. 19466—B. No. 200 (a)
2. கீத சங்கரம்—(D. No. 10951—B. No. 6661)
3. சரபோஜி சரித்திரம் (B. No. 162(b)—D. No. Nil)

தமிழ் நூல்கள்:

இம்மன்னனின் காலத்தில் எழுந்த நூல்களில் 'அபிராமி அந்தாதி'யுமொன்று என்பதை முன்பு கண்டோம். இம்மன்னனை முன்னிட்டே இவ்வந்தாதிப்பாடல் எழுந்தது. இவரது ஆதரவாலல்ல.

## 10. ஒப்பிலாமணிப்புலவர்:

இவர் சிவரகசியம் என்னும் நூலை (தமிழ்ச்சுவடி எண். 970—வரிசை எண். 1185)இயற்றியுள்ளார். கும்பகோணத்தில் வாழும் சிவநேசச்செல்வர்

பலர் கேட்டுக்கொண்டதற்கிணங்க சம்ஸ்கிருதத்திலிருந்து[1] தமிழில் மொழி யாக்கம் செய்யப்பட்டதாகவும் இது தஞ்சாவூரில் 'விளம்பி ஆண்டு தை மாதம் (3—1—1718) அரங்கேற்றம்' செய்ததாகவும் இந்த நூலின் பாயிரம் குறிப்பிடு கின்றது.

*மன்னர் புகழ் சரபோஜி மகாராச ராசர்*
*மாநிலங் காத்திடு நாளிற் றஞ்சைமா நகரிற்*
*றுன்னுமே விளம்பியற் மகரமதி யைந்திற்*
*சோதிசிவ ரகசிய மொப்பிலா மணிசொற் றமிழ்மழை*
*யின்னிலத்தி னரங்கேறச் செய்தனர் பொன்மாறை*
*யேழில்சேருந் தீராத வினைதீர்த்தான் பாகைப்*
*புன்னைவன நாதனிவர் சைவநெறி வளர்க்கும்*
*பூபாலு ரவனியெங்கும் புகழினி தோங்கிடவே.*

தெலுங்கு :

## 11. கிரிராஜகவி :

இவர் பாகவதமேளா நாட்டிய நாடகத்தை நடத்தும் கலைஞர். இவ ருடைய பெண்வழியில் தோன்றியவரே ஸத்குரு ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள். இந்த கிரிராஜகவி மராட்டிய மன்னர்களான சகஜி, முதலாம் சரபோஜி ஆகி யோரின் காலத்தில் இவர் அரசவைப் புலவராக இருந்தவர். இவருக்கு இரண் டாம் ஏகோஜியின் மனைவி சுஜான்பாய், தீபாம்பாள்புரத்திற்கு அருகில் ஏக மகாராஜபுரம் என்னும் அக்ரஹாரத்தை ஏற்படுத்தி நிலக்கொடை அளித்துள் ளார். (இதனைப் பற்றிய முழுச்செய்திகளையும் இந்நூலகப் பருவ இதழ் 33ல் குலவிளக்கு தீபாம்பாள் என்னும் கட்டுரையில் காண்க.)

ஆக, இப்புலவர் பெருமான் நீண்ட காலம் வாழ்ந்தவர் என்பதும், மராட்டிய மன்னர்களிடம் நெருங்கிய தொடர்பு கொண்டவர் என்பதும், மன்னர்கள் இவரைப் பாராட்டிப் பல பரிசுகளை அளித்துள்ளார் என்பதும் தெளிவு.

இக்கவிஞர் முதலாம் சரபோஜி மன்னரின் காலத்தில் '**லீலாவதி கல் யாணம்**' என்னும் நூலை (M. 630 D. 587) இயற்றியுள்ளார். இதில் காணப் படும் பாடலில்

---

1 இது சம்ஸ்கிருத மொழியில் ஒரு லட்சம் ஸ்லோகங்களைக் கொண்டது. சம்ஸ் கிருத புராண இலக்கியங்களில் ஸ்காந்தம், பாரதம், சிவ ரகசியம் ஆகிய மூன்று நூல்களே ஒரு லட்சம் (கிரந்தங்களை) ஸ்லோகங்களைக் கொண்டவை. சிவனுடைய திருவிளையாடல் கள், மற்றும் சைவ சம்பந்தமான புராணச் செய்திகளை தன்னகத்தே கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

" கிரிராஜ நுத லீல
சாபோஜி பூபால
சுரதகேலி நன்னு
சொக்க ஜேஸி திவி "

என்னும் முத்திரை காணப்படுகிறது. இவர் இரண்டாம் சரபோஜி காலம் வரை வாழ்ந்திருக்கவியலாது. ஆகையால் இவர் முதலாம் சரபோஜியின் காலத்தில் இந்த நூலை இயற்றியுள்ளார் எனக் கருதலாம். இந்த நூலைத் தவிர வேறு நூல்களைப்பற்றிய குறிப்புக்கள் கிடைத்தில.

**சரபோஜியின் வாரிசு :**

மன்னன் முதலாம் சரபோஜிக்குப்பின் இந்த நாட்டையாள வாரிசு இல்லை. இதனால் அரசு அவரது தம்பி துக்கோஜியின் ஆட்சிக்கு ஆட்பட்டு விடும். இதனால், சரபோஜியின் இரண்டாவது மனைவி அபரூப பாய் சாகிப் சிலருடைய வஞ்சகச் சொற்களில் மயங்கி கருவுற்றதுபோல் பொய்யாக நடித்து 10 ஆவது மாதத்தில் குழந்தையைப் பெற்றது போலப் பாவனை செய்து ஒரு வேலைக்காரியின் குழந்தையை மன்னரிடம் காட்டினாள். இங்கு நடந்த செயல்களை அறியாத மன்னன் தனது பிள்ளை எனக்கருதி குழந்தைக்கு ஸவாயி சாஹஜி என்று பெயர் சூட்டி மகிழ்ந்தான். இங்கு நடந்த சூழ்ச்சியை அறிந்த 'துளஜா' மகாதேவப் பட்டணத்திலிருந்து தனது சகோதரன் சரபோஜிக்குத் தெரிவிக்க, உண்மையை அறிந்த மன்னர் சரபோஜி அரசியல் நிலையை உணர்ந்து அக் குழந்தையைத் தக்கபடி 'பரிஹாரம்' செய்தார் என்று போன்ஸ்லே வம்ச சரித்திரத்தில் (பக்-81ல்) காணப்படுகிறது.

ஆனால், இந்நூலகத்தில் காணப்படும் திருமுடி N. சேதுராமன் அவர்களின் சுவடிப் பிரதியில் " அப்படியிருக்க சரபோஜி ராஜாவின் றெண்டாவது ஸ்ரீயான அபரூபபாயி சாயெபவர்கள் தனக்குப் புத்திர சந்தானமுண்டாக வேணுமென்கிற 'புத்திர வாஞ்சையுண்டாகி, அநேக விரதங்களும், தெய்வ, பிராமண, குரு, தெய்வத்தாருதனை பூஜை முதலியனதான தர்மங்கங்களை அநேகமாயி செய்து கொண்டிருந்தாள் " என்ற செய்தியே காணப்படுகிறது. மேலே கூறப்பட்ட " போன்ஸ்லே வம்ச சரித்திரத்தில் " கூறப்படும் ஸவாயி சாஹஜி செய்திகள் காணப்படவில்லை.

மேலும், சுஜான்பாயின் ஆட்சிக்காலத்தில் தஞ்சை அரசியலில் சில குழப்பங்கள் ஏற்பட்டு சுஜான்பாயியின் ஆட்சி கவிழ்க்கப்பெற்றுள்ளது. இந்த நிகழ்ச்சிகளுக்கு காட்டுராஜா என்னும் 'ஸவாயி சகஜி'யே காரணம் என்று பல நூல்கள் கூறுகின்றன.

**சரபோஜியின் மறைவு :**

இம்மன்னன் தனது 50-வது வயதில் கீலக ஆண்டு, சகம் 1649ல் மறைந்தார்[1]. இவர் மறைந்த ஆண்டுகளில் வேறுபாடுகளும் காணப்படுகின்றன. இவர் மறைந்ததும் இவரது மூன்று மனைவியரில் மூத்த மனைவியான சுலக்ஷுணு பாயி அவர்களும், மூன்றாவது மனைவியான ராஜஸபாயி அவர்களும் உடன் கட்டை ஏறினர். இரண்டாவது மனைவியான 'அபரூப பாயி' சதி ஏறியதாக அறியமுடியவில்லை. குழந்தைப் பேற்றுக்காகப் போலியாக நடித்தவள் இவளே யாதலால் மன்னருக்கும் இவளுக்கும் மனஸ்தாபமோ அல்லது ராஜத்ரோக குற்றத்துக்கு ஆட்பட்டோ இருக்கலாம். இவளைப்பற்றிய வேறு செய்திகள் நூல்களில் காணப்படவில்லை. முதலாம் சரபோஜிக்குப்பின் அவருடைய தம்பியான முதலாம் துளஜா அரசு கட்டிலேறினர்.

**நினைவுச் சின்னம் :**

1. **பித்தளைத் திருமேனி:** கும்பகோணம் சக்கரபாணித் திருக்கோயிலில் சுமார் ஆறு அடி உயரமுடைய மராத்தி மன்னரின் பித்தளை உருவச்சிலை உள்ளது. இது முதலாம் சரபோஜியின் உருவச்சிலை என்பதைச் சில ஆவணச் சான்றுகளாலும் ஓவிய ஒப்புமையாலும் அறியலாம். இந்தப் படிமம் உள் கூடில்லாத முழு பித்தளைப் பிரதிமமாக மிகப் பெரிய அளவில் படைக்கப் பட்டுள்ளது[2]. இதே காலத்தில் இத்தகைய அமைப்பில் 'தீபாம்பாளின்' சிலையும் செய்யப்பட்டுள்ளது. இவ்விரண்டு சிலைகளையும் முதலாம் துக்கோஜி என்னும் துளஜா செய்திருக்கலாம் என்று கருதமுடிகிறது[3]. மேலும் முதலாம் சரபோஜி முதன் முதலில் சாக்கோட்டையில் இருந்து கொண்டு மன்னர் சகஜிக்கு உதவியாக சில சுபாக்களை ஆட்சி செய்துள்ளார் என்பதை சென்ற இதழில் கண்டோம். அவர் சாக்கோட்டை (சகஜிகோட்டை) யிலிருந்தபொழுது கும்பகோணம் சக்ரபாணி ஆலயத்திற்குப் பல திருப்பணிகளைச் செய்துள்ளார், என்பதும், இக்கோவிலுடன் இம்மன்னருக்கு நெருங்கிய தொடர்பு இருந்ததாகவும் அறிகிறேன். ஆதலால் இவ்வாலயத்தில் முதலாம் சரபோஜியின் உருவச் சிலை இருப்பது சிறப்புக்குரியதே.

---

1 .........ஜன்மாதி 50 ஆம் வயதாகிய செக்கம் 1649க்கு கிரிஸ்து 1727 வருஷத்துக்கு தமிழ் பிலவங்க வருஷத்தில் கைலாச வாசியானர்.

—திருமுடி N. சேதுராமன் சுவடியின் பிரதி, காபபிடு வால்யூம் எண். 1248, பக்கம். 87.

2 தஞ்சை மராத்தியர் காலச் சிற்பங்கள், ஓவியங்கள்—மராத்திய அரசர் மோடி ஆவணக்கருத்தரங்கு.

—குடவாயில் பாலசுப்ரமணியன், தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, 1983 பக். 6.

3 எமது கட்டுரை 'குலவிளக்கு தீபாம்பாள்' நூலகப் பருவ இதழ் 33 பக்.

2. சுதை சிற்பம்: திருக்கடவூரின் ஆலயத்தின் இரண்டாவது நுழைவாயில் கோபுரத்தின் முதல் நிலையில் சரபோஜி மன்னனும் அபிராமி பட்டரும் அன்னை அபிராமியின் சந்நிதியில் உரையாடுதலைப்போன்ற அமைப்பில் சிலை வடித்துள்ளனர்.

3. ஓவியம்: 1. தஞ்சைப் பெரியகோவில் சுப்ரமணியர் சந்நிதிக்கு எதிரில் காணப்படும் மண்டபத்தில் மராட்டிய மன்னர்களின் சுவரோவியங்களில் இம்மன்னனின் ஓவியமும் உள்ளது.

2. திருக்கடவூர் அமிர்தகடேசர் ஆலயத்தில் சோமாஸ்கந்த மூர்த்தியின் சந்நிதிக்கு இருமருங்கிலும் சரபோஜியும், துக்கோஜியும் அவர்களது அமைச்சர்களுடன் நின்றுகொண்டு வணங்குவதைப்போல் மராத்தியர் காலப் பாணியில் சுவரோவியம் எழுதப்பெற்றுள்ளது.

3. தஞ்சை அரண்மனை தர்பார் மண்டபத்தில் துணி ஓவியமாக எழுதப்பெற்ற ஓவியங்களின் புகைப்படங்கள் இந்நூலகத்தில் பாதுகாக்கப் பெறுகின்றன. இவற்றில் முதலாம் சரபோஜியின் ஓவியமுமுள்ளது.

முடிவுரை: 'முதலாம் சரபோஜியும் அவர் காலத்து நூல்களும்' என்னும் இந்தக் கட்டுரை முதலாம் சரபோஜி மன்னனைப்பற்றியும், அவரது காலத்தைப்பற்றியும் ஆய்வு செய்கின்றவர்களுக்கு ஒரு தொகுப்பாகவும், வழிகாட்டியாகவுமிருந்து உதவும் என்று கருதுகிறேன். எனது சிற்றறிவுக்குப் பட்டவரை சில இடங்களில் விரிவான முறையில் செய்திகளைக் கூறியுள்ளேன். மேலும் இம்மன்னனின் காலத்தில சம்ஸ்கிருத இலக்கிய—இலக்கண நூல்கள் அதிக அளவில் தோன்றிய போதிலும் இன்றுவரை சில நூல்களே அச்சாகியுள்ளன. வரலாற்றுத் தொடர்புடைய நூல்கள் இன்னும் ஏடுகளிலேயே மறைந்து கிடக்கின்றன. புலவர்கள் பலரின் காலமும், அவர்களது நூல்களும் அதில் காணும் செய்திகளும் எளிதில் புலப்படாமையால் சில நூல்களைப் பற்றிய செய்திகளையே இங்கு குறிப்பிட்டுள்ளேன் என்பதை அறிஞர்களுக்குப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

# ॥ नटेशविलास* ॥

निर्माता : श्री शिवाजीमहाराजे तंजावर

( 1833—1855 A. D. )

तोडयमंगळ दरु. राग - कल्याणी.

जयजय शिवदेववर जयजय भवसौख्यकर
जयजय नवसोमधर जयजय निगमसार ॥ -१

जय पार्वतीरमण जय पन्नगाभरण
जय परमसुखसदन जय पापहरण ॥ -२

जय भूतिसल्लसित जय भूतिदगुणभरित
जय भूप शिवनुत जय भुवन कांता ॥ -३

शरणु दरु. राग - तोडी.

शरण शंकर चन्द्रशेखर शरण शाश्वत सुखकर
शरण पंकजादिसुरवर शरण ॐकारकूपरा ॥ -१

शरण कनकाचल सुकामुख शरण केशवशायक
शरण दीनजनार्तिहारक शरण देशिकरूपक ॥ -२

---

* राजेवर ग्रंथ अंकित कर्ता श्रीरंगनाथ कवि तंजावर. १. *667*, २. Tag. *30*.
S.B. No. *15304*, हे दोनें ग्रंथहीं सरस्वती ग्रंथालयांतील तेलुगु विभाग व संग्रह भांडारांतील होय.

शरण नवनवसत्कृपाकर शरण भवभयपारक
शरण शिवकल्याणसुंदर शरण शिवनृपसादरा ॥ -३

मंगळ दरु. राग - सुरटी ताल - आदि

चन्द्रमौळीश्वराय जयमंगळ. सान्द्रकरुणाकूपाराय शुभमंगळ
इन्द्रादिकसुरवन्द्रिताय जयमंगळ, चन्द्रस्पटिकपाददाताय शुभमंगळ ॥ -१

मन्दस्मितवदनाय जयमंगळ, मणिहंसकशोभितचरणाय शुभमंगळ
कुन्दद्युतिनिभशुभरदनाय जयमंगळ, कुतुकीकृतनिजभक्तजनाय शुभमंगळ ॥ -२

शिवभुजलतालिंगिताय जयमंगळ, श्रितजनकल्पमहीरुहाय जयमंगळ
शिवदायकगुणसंदोहाय जयमंगळ, शिवभूपतिवरवंदिताय जयमंगळ ॥ -३

सू. व. – श्रीकृष्ण ! एणेंरीती नाद्यारंभ जहल्यांनतर सूत्रधार रंगभूमीस्थळी सरसकविवर-विरचित श्रीनटेशविलासाभिधान नाटकानुसंधानें चतुरवर सभासदनिकर मनोरंजन करावया कारणें विघ्नहरणाची प्रार्थना करितो पहा.

श्लो. प्रसन्नानना शीघ्र प्रत्यक्ष व्हावें, प्रजारंजनीकार प्रज्ञेसि द्यावे
प्रसादा करीं तूं प्रभू आदिदेवो, प्रभावें तुझ्या हें प्रसिद्धीसि पावो ॥ १ ॥

सू — एणेंरीती विघ्नहरणाची प्रार्थना करोनि निजवाणी नव नवोन्मेषिणी व्हवया कारणें वाणीचे स्तवन करितो परिसा.

श्लो. वाणी तूं वशसी कृपें जरि तरीं वाणी महाशारदें
वाणी केंवि सुखासि जो सकलगीर्वाणी गुरू सावदें ।
आणी सिद्धींहि मंदिरासि भुवनी आणीक जेजे वसें
वेणी सत्कविता स्वरूप मज दे येणेक्षणी सौरसें ॥ २ ॥

सू – एणेंरीती वाणीचे स्तवन करोनि अज्ञानस्तमस्तोम निवारणी वासरमणी ऐसा श्रीगुरूचे स्तवन करितो परिसा.

श्लो. जें ब्रह्म निरंजनवस्तु तें तूं, सच्चित्सुखात्मतनु चिद्विभवासि हेतू
तारूं भवांबुधि सतांप्रति मुख्य सेतू, वंदू भवत्पा दयुग। गुरु रामसेतू ।। ३ ।।

सू – याप्रकारें सद्गुरुचें स्तवन करोनि निजकुलदेवता श्रीचन्द्रमौळीश्वराची प्रार्थना करितो पहा

श्लो. श्रीसाब गौरीवर चन्द्रभूषा श्रीकंठशंभो नतभक्ततोषा
देवादिदेवा करुणासमुद्रा देयीं कृपें वांछित सर्वभद्रा ।। ४ ।।

सू – एणेंरीती चन्द्रमौळीश्वराची प्रार्थना करोनि नटाकार्थसंग्रहसाटी नान्दीश्लोक वदतो परिसा

श्लो. श्रीमान् देवशिखामणि शिवधणी जो माय बापाहुनी
प्रेमाने पुरवीलळे निजजन स्तोमासि वानी मनी ।
जो मानें नटता सुरौघ नमिती सोमातया सर्वदां
सोमालंकृतचूड शंभु बहुधा क्षेमासि देवो सदां ।। ५ ।।

सू – याप्रकारें नाटकार्थसंग्रह नांदीश्लोक वदल्यांनतर नाटकारंभी विघ्नहराची प्रार्थना केल्यां करितां तो दयाकर विघ्नतमस्तोम दिवाकर प्रत्यक्ष येतो ह्मणूनि सभासदांस सावध करावया कारणें दौवारिक येतसे निरखा.

प्रावेशिक दरु | राग - बेगडा | ताळ - आदि

गणदास येतो पहा, गजरें नाचत हासत महा
गणपति येतो ह्मणूनि हा, जानावया सभ्या समूहा ।। -प.

अति प्रेमें सुमुखचरित्र, हर्षें गातचि मनगात्र
हातीं कांचानांचितवेत्र, हावभावें दावी विचित्र ।। -१

गातगातचि पेंकीं ताना, हात लावोनि याकाना
हात नाना करी ते नाना, पोतसा जो प्रिय गजानना ।। -२

सू – एणेंरीती गणदास येवोनि सभासदांस सावध केल्यानंतर गणपति प्रत्यक्ष येतसे निरखा.

प्रावेशिक दरु राग - गौळिपन्ते ताळ - आदि

गौरीनंदन येतो पहा, गोजिररूपी सुंदर महा
स्वारी करी बरी उंदिरावरि हा, चारी अठ्रा ज्यासी वर्णितीस हा ।। -प.

मोदक पाशांकुशरद हस्तीं, मुक्तमालापदकें कंठी प्रशस्तीं
मोदें डुलें मंदमंदचि मस्तीं, मुख्य गजानन सेव्य समस्तीं ।। -१

रत्नमकुट भव्यशोभे शिवावीं, रमणीय कंकण साजनी करीं
ताना पेंकीं नानाविधकुसरीं, तक्कर्ताधिंगिण नाचे परोपरीं ।। -२

सू -- एणेंरीती गणपति येऊन सकलविघ्न निरसिल्यानंतर चहूंकडें पाहून अहो: सिद्ध आहे. रंग मगंळ वीथी !

श्लो. वेदस्कंधविशाल आणि विविध शाखाचि शाखा जया
शास्त्रें वृंत्त सुनाद्यपुष्परस सत्साहित्यगानक्रिया ।
वाद्यासीं सहगंध षट्पद महा विद्वांस अनंद तो
ज्याचे सत्फल तो सभा सुरतरू यारंगणा साज तो ।। ६ ।।

आर्या - घनघन नाद विराजे, आनंदाचा सुशुद्धरव गाजे
सुसुषिररव ही जे सतत राव येथ बहु साजे ।। ७ ।।

सू – हे रंग प्रसादन !

सू – नेपन्यास पाहूनि, अरे ! पारिपार्श्वका येथें ये. पारि. जी मी सिद्धआहे. आज्ञा करावी - सू. आगाये पारिपार्श्वका ! सकलजन मन श्रवण नयनानंद करण्या विषईं मी आज्ञापि जेलों - पारि. कोंणा कडूनि - सू सभ्या कडूनिपारि. कोणते सभासद - सू. येथें श्रीमद्भोसलकुल कलशोदधि कळानिधि

राजाधिराज श्रीशिवाजी महाराजें क्रियमाण नवनव गणेशोन्सव विलोकन संतोषभरभरित चतुर वरनर मिळाले आहेत. ते कैसी ह्मणजे.

पञ्चचामर वृत्तभेद्

सुवाक्पती कुलेश एक देवनाथ मंडलीं
कलानिधी तसा सभा अधांतरीच दंडलीं ।
बृहस्पती कलानिधी कवीश सर्व येथिलें
शिवप्रसाद आमुचे मही सुभाग्य आथिलें ॥ ८ ॥

आर्या निधिला हाति शोधक जे, सज्जउनियां अंजनासि निजनेत्री ।
गूढव्यंग्य चमत्कृतिरस हे जाणती किति शास्त्री ॥ ९ ॥

श्लो. कर्ते भल्यावरि सदैव अनुग्रहाचेः, धर्मे कदापि जगती न दुराग्रहाचे ।
पूर्ते श्रुति स्मृति पुराण समस्त शास्त्रीं, वर्तेव सभे वसति पंडित भट्ट शास्त्री ॥ १० ॥

गानक्रिया कुशल जे कलकंठकंठी, नाट्यक्रियेत गमती जणु नील कंठी ।
साहित्य सत्सुममरंद मिळिंद जे कीं, शृंगारसार विदहि लसति विलोकीं ॥ ११ ॥

सू – ऐसाच अलभ्य योग घडला आहे कीं त्यास्तव यासभेस उचित श्रीनटेशविलासाभिधान शृंगार वीररसप्रधान नवीननाटक नाचवोनि सभासदांस रंजन करवोनि आत्म्या तें कृतार्थकरूं इच्छितों - पारि. कोण त्या रसाळग्रंथाचा निर्माता ? - सू. आगये पारिपार्श्वका तो ऐकिला नाही काय, याकलियुगा माजि बहुप्रख्यात भोंसलकुल ते परंपरा सांगतो ऐक.

श्लो. जगीं क्षत्रिया माझि जे श्रेष्ठराजे, तयाचि मही वंशावली विराजे ।
महाराज तो शाहजी मुख्य पाहे, तया हूनि विस्तारले भूप पाहे ॥ १२ ॥

एकोजी जो पुत्र त्याचा निघाला, आला येथें तो रिपुलागि घाला ।
घालोनी तो चोळसिंहासनाचा, राजा होतां खेवगेला जनाचा ॥ १३ ॥

आर्या  त्याचा सुत तुक्कोजी, पाळी सर्वांसि राखुनी राजी ।
तत्सुत प्रतापसिंह, प्रताप पाहतां नृपांत जो सिंहा ।। १४ ।।

तत्सुत तुळजेन्द्र भला, ज्ञाता जन पालिनी वरोनि भला ।
तत्सुत तो शरभेन्द्र, ज्ञाता दाता महीश देवेन्द्र ।। १५ ।।

श्लो.  वर्णु एकमुखें तयाप्रति कसें भागेल तो शेषहीं
ज्या सांबी दृढभक्ति वेद पडला भावेंचि निश्शेषहीं ।
यात्रा सर्व करोनि आणीक महादाने करी जो भला
पत्नीयुक्त ह्मणोनि जो शिव महा तत्पुत्रता लाभला ।। १६ ।।

ब्रह्माविष्णु तसाचि हा शिव पहा हे एक तीघे गणा
नामें भेद जनांत तो शिवकृपें पाळू भल्यांचा गणा ।
राजा जो शरभेन्द्र त्याहुनि जगीं जन्मे अहल्योदरी
ज्ञाता धीर उदार शूर वसुधालंकार तो केसरी ।। १७ ।।

सीसपद्य (तेलगु छंदस)

अनुपम ज्ञातृत्व अब्ज भव हाच कीं
अखिल पालक देव अच्युतच कीं
अमित सुख दे जनां आदिशंकरच कीं
अति विभव पाहतां अमरपति कीं
अगणित सुप्रताप आदित्य हाच कीं
आह्लादकर महा अब्ज हाच कीं
अंग लाहुनि मदन अवतरलाच कीं
अष्ट दिक्पतीचाचि अंश गण कीं

गीतपद्य (तेलुगुछंदस)

सरस सुखरूप अति सुकुमार मूर्ती
सकलभुवन व्याप्त भव्य शुभकीर्ती ।

सिद्धि अष्टैश्वर्य शिवरूपें लाहे
सिंहासनीं नृपति सिंह शिव पाहे ।। १८ ।।

सू – एतादृश सकलगुणरत्नाकर श्रीचोळदेश नृपवर याग्रंथाचा निर्माता ! पारि. अगाये सूत्रधारा चतुःषष्टि कळाप्रवीण जगत्प्रसिद्ध चोळदेशाधिप श्रीशिवाजी महाराज याग्रंथाचा निर्माता काय तरी सभासदांचे तुझें हीं मनोरथ सफल होतील.

सू -- चहू कडें पाहून, अगाये पारिपार्श्वका सकलजन मन संतोषकारक वर्षाकाल शोभतो पहा.

आर्या - विजई नृपा विसावां, ताप शमें हा ऋतूच थोर महा ।
घन पुष्पवृष्टि होते नाचोनि स्त्रीक नीलकंठ पहा ।। १९ ।।

सू – हे भारती वृत्तिः प्रस्तावनारंग नेपथ्या मध्यें "अहो नीलकंठ श्रीनटेश कोठे कोठे" - सू. अगाये पारिपार्श्वका. पारि. आगये सूत्रधारा ते आर्याचा अर्थ काय - सू. स्वाभिप्रायानुसार कल्पून आहेत "शिवकाम-सुंदरीची दूतिका आणि आणिमा सिद्धिः श्रीनटेशास धुंडीत येतेसी दिसते. आह्मी अनंतर करणीं यांस जाऊं ह्मणूनि दोघेहीं निघानि गेलें असतां अणिमा येतसे निरखा.

प्रावेशिक दरु राग - शंकराभरण ताळ - मिश्रजाति

अणिमा येतसे सुंदरी, अति शातोदरीं ।। प ।।

मणिमाला भूषण धारी, मानी घन निजांतरी
मदन कार्मुख सिंजिनी, मधुर गायिनी ।। अ प ।।

पदिहंसकर वरुण ह्मणी, मंदस्मित वदनी
सुंदरेशाचे घटनी, सुंदरी विहारे वनी ।। -१

सू – एणेंरीती अणिमा येवोनि वन पाहोनि बोलती पहा. आह्मा येवोनि फिरोनि "हा भ्रमलें नटवर कवणेवरी मोहूनि गुंतला कीं. ह्मणून आपणांत बोलतसे परिसा."

लघुपद्य -

भुवनमोहनमूर्ति भूतिभासुरतनू, भूतिदायक कोणें भुलवि जेला ।
कामजयशील शिवकामसुंदरी, कामपूरक अजि कां न आला ।। २० ।।

सू – याप्रकारें अणिमा दूतिका शिवकामसुंदरी श्रीनटेशाचा संघट्टन विषईं आलोचन करीत असतां, साटोप फिरोन आकाशीं कान देवून "अगाये पारिपार्श्वका श्रीशिवनाम मधुरध्वनी ऐकूं येत्यावरोनि गुंडोदर येतां असा दिसतों" ह्मणतांच गुंडोदर येतसे निरखा.

प्रावेशिक दरु राग - मध्यमावती ताळ - चापु

गुंडोदर येतो पहा, गडबडीने येथें हा ।
गोड गात नाचे महा, गोजिरा वाटे जनसमूहा ।। प ।।

सू – याप्रकारें गुंडोदर आल्यानंतर अणिमा बोलते पहा. गुं - अवो ये अणिमे अष्टमहासिद्धींत तूं वडील जाहलीस तहीं अद्यापि असो तूं येकली यावनी कोणत्याकामास फिरतेस - सू. एणेंरीती गुंडोदराने विचारितांच अणिमा बोलते परिसा.

आर्या - शिवकामसुंदरी ते, सिणते कामें बहुतदिन रजनीं ।
अभ्र सभेशाति असीं, जाऊं मी फिरतसें जनी विजनी ।। २१ ।।

अणिमा. असो श्रीनटेशाचा लडिवाळ बाळा हूनि प्रियकर ऐसा तूं त्यातें सोडूनि येथें यावयासकारण काय ते ऐकूं इच्छितों - गुंडोदर. अवो ये अणिमे आश्चर्य सांगतो ऐक.

लगुपद्य -

कामजनिता स्वर्गे कामिनी होउनी, सोमातया भुलऊं कामधरुनी ।
हेमाभतनुवरी मोहील कडुनी, हा मोहला सोख्यधाम मानी ।। २२ ।।

गुंडोदर - त्यास्तव मीही श्रीनटेशास धुंडीतच आलों. अणिमा - परमलाभ परमलाभ देवी विचित्रागतिः शिवकामसुंदरीस क्षणमात्रहीं न विसंबणार ऐसा श्रीनटेशवर स्त्रियेचा छंद सोडून माझ्या स्वामिणीस कैसा स्वाधीन होईल. गुंडोदर - त्यासी ऐसा उपाय करावा.

सू -  याप्रकारें दोघेहीं एकांत बोलत असतां नेपथ्या मध्यें जोडव्याचा झणत्कार ऐकून आणिमा बोलते पहा - अणिमा. अगाये गुंडोदरा माझा विलंब नसहतां शिवकामसुंदरीने (महिमा) पाठविली. महीमा येतसी दिसते. मी त्वरेनें स्वामिणी पाशी जातें तूंहीं त्याकार्यांत जाग्रता करे.

सू - ऐसा ह्मणून दोघेंहीं निघोनि गेल्यानंतर महीमा येतसे निरखा.

प्रावेशिक दरु राग - सावेरी ताळ - आदि

महिमा येते हे पहा, मदशालिनी महा ।
पहिल्या प्रीतीचि हे, पार्वतीसी लवलाहे ।। प ।।

हेमवर्णे साजिरीं, व्योमभेदी कुचगिरीं ।
जोडव्याचा झणत्कारीं, जो मे चाले सुंदरी ।। -१

सू - एणेंरीती महिमा येवोनि वन सौभाग्य पाहूनि. महिमावचन - एसा वनांत शिवकामसुंदरीसी श्रीनटेश कैं विहारेल बरें ? अणिमेने श्रीनटेशाचा शोध घेतला असेल -

सू - ह्मणतीस धुंडीत वन वर्णिते परिसा.

दारुकावनवर्णन दरु. राग - आनंदभैरवी. ताळ - आदि

रमणीय दारुकावनी रतिपति मदन ॥ प ॥

रमणी रमणाचा मन - रंजवी जेथें निपुण ॥ अ प ॥

मधुर शुकपिक हे गाती, मयूर सरस नटती
मधुरकर कूजित श्रुति देती, मन अत्यंत सुखविती ॥ -१

पवनें सद्वंश स्वरती, पावे सुस्वरते निगुती
जव कपोत हुंकृती, जे कीं सुंदर ताळ प्रकृतीं ॥ -२

केसर कुटज जो जांबळी केळी पोफळ नारळी
रसालादि कीं सफळी, रतल्या पाहे शुभवल्ली ॥ -३

सू — एणेंरीती वनवर्णन करीत असतां, नेपथ्यांत, घोगर्याघशाचा ध्वनि ऐकोनि, महिमावचन. "नन्दिकेश्वर येत असा दिसतो". सू. ह्मणतांचि नंदिकेश्वर येतसे निरखा.

प्रावेशिक दरु राग - अठाणा ताळ - आदि

नन्दिकेश्वर येतो पहा, नन्दनीय सद्गुण महा ॥ प ॥

बन्दी शंभूचा प्रियकर हा, वन्द्य बरवा देव समूहा ॥ अ प ॥

नानां कुशलता जाणता, नाट्य हाव भावी ज्ञाता।
तानां पेकीं नसे समता, ताकीत करी समस्तां ॥ -१

सू — याप्रकारें नंदिकेश्वर आल्यानंतर, महिमा वचन - अगाये नंदीशा! यावें यावें यावनांत तृणवल्ली फार सुरवाढीन वाडल्या आहेता, परंतु श्रीपशुपतीस सोडूनि येथें आलास ते युक्तेसि भासत नाही.

आर्या - मेरु धराधर धरिल्या, नगणुनि आलासि येथ जगदीशा।
तृण लाभ मेरु लाभा, ह्नुनि मानिसि मुख्य सुज्ञा नंदीशा ॥ २३ ॥

सू – एणेंरीती महिमेनें बोलतांचि नंदीकेश्वर बोलतसे परिस. नंदी. अवो ये महिमे भाम्या मध्यें सोन्या स्तवितेस जाणते, सोनें तृणाहूनि उणें मानितातो याविषईं सांगतों एक.

आर्या - भूक तहान शमेना, महिमा कैंसी वनांत हे मानें ।
तृण फलचि अन्न मानीं, अन्नाहुनि सर्व ह्मणूनि हे मानें ॥ २४ ॥

सू – याप्रहारें नंदिकेश्वर बोलतांचि माहिमा बोलते परिसा.

महिमा आर्यार्ध - अन्न प्रह्मचि हे तृण, तो सदा सेविति पशूचि नंदीशा ।
नंदी आर्यार्धे - थौरासि सर्व सम कीं, दूर्वा हीं वाहताति सर्वेशा ॥ २५ ॥

महिमावचन - दूर्वा तृणादि अंगीकार करणार ऐसा "श्रीनटेश धर्मेच अर्थेच कामेच नाति चरामि" ह्मणोनि वरिल्या, प्राणवल्लभास वंचना करोनि अन्यकान्तसक्त जाहल्यास्तव तो शब्द श्रीनटेशास अति प्रीतिपात्र, ऐसा तुजवरीच येईल. त्यास्तव शिवकामसुंदरी श्रीनटेश संघट्टणविषईं त्वां उपाय रचावा - नंदीवचन - अवो ये महिमेचा करानें सर्वज्ञ ऐसा यजमानास त्या विषईं सांगण युक्तनव्हें. त्यास्तव नारदाची भेटी जाहल्यां सांगतों. यजमान आणि यजमानीण दोघें हीं अत्यंत संतोष मिळोनि असणें मजला आणि तुजला हीं मुख्य जाहल्यास्तव नारदाची भेटी तुला जाहल्यां तूंहीं कळेवें. सू. व. एणेंरीती नंदीकेश्वर बोलोनि निघोनि घेल्यानंतर - महिमावचन - "ब्रह्मवीणाचा नारद, ऐकूं येत्यावरोनि नारद येतो असा दिसतो" सू. व. ह्मणतांच नारद येतसे निरखा.

प्रावेशिक दरु राग - मोहन ताळ - मिश्र

नारदमुनी येतो पाहीं, नम स्मरत वीणा वाहुनि भाहीं ।
थोर कुतूहल धरूनि, जो कलहीं तक्कतधिगिण नाचत महीं ॥ -१

सू - ऐणेंरीती नारद येतांच, महिमावचन - मी प्रणाम करितें. नारद वचन - "अबा ये महिमे तूं धनवंती. आणि गर्वी. तरुण इत्यादिकासी सोडोनि यावनी फिरतेस". महिमा वचन - तूं माथारा हांवोनिहिं परिहासाचि आणि कलह करावयाचि च सटसुटली नाहीं. बरें असो तुज कडूनेंच माझा मनोरथ सफल व्हावां.

आर्या - तो भय कृद्धूर्याहि हरीं, जैसा लोकी प्रसिद्धदेव हरी ।
तेविं पटु विघडवायां, तूंहि दयाळा तसाचि जुडवाया ।। २६ ।।

**नारद वचन** - अवो ये महिमे तुझ्या स्वमिणीनें तुझ्या ठाईं अधिक प्रीती धरिल्यास्तव श्रीनटेश विघडला - असो तूं येथें असतां श्रीनटेशानें पाहिल्यां उत्तरोत्तर कार्यास विरोध घडेल कैसाहीं श्री नतेशास जुडवितो - सू. व. एणेंरीती नारदांच वचन ऐकोनि हिमाख्य दूतिका त्यासी वंदोनि आपुल्या स्वमिणी पाशीं निघोनि गेल्यानंतर श्रीनटेश येतसे ह्मणोनी सभासदांस सावध करावया कारणें विटशेखर यतसे निरखा.

प्रावेशिक दरु. राग - फरज ताळ - चापु

सुंदर नट येतसे पहा श्रीचन्द्रमौळी ।। प ।।

मंदहास लसितवदन, कुंदकोरकाभरदन ।
सुंदरीसमेत सुगुण, सुसन्नुत भव्यचरण ।। -१

वामहस्त कीं कपाल, डमरू येर करीं ।
सुकळा कामकोटिसुकुमार, हेमपाबुकाधर ।। -२

सरस हावभाव निपुण, संगीत तान मान ।
सरिगमपधनिसा ह्मणून, संगीत तान मान ।। -३

हंसद्युति भासमान, हंसकादि लसितचरण ।
हासेन करी नटन हासत - तर्साधिगिण ।। -४

सू – यापकारें श्रीनटेश मोहिनी विदूषकाशीं सह आल्यानंतर नारद बोलतसे परिसा.

आर्या – जी कीं कामानी कामासी न मिळवील हे मानी ।
हेमासी समनवरी नवरी कथिले असेचि जनपरी ।। २७ ।।

नारद वचन - अगाये कामजयशीला तूं दिव्यालंकार होऊनि पार्वतीसी सोडूनि अन्य-स्त्रियेसी सहित येथें कां आलास.

सू – एणेंरीती नारदानें विचारितांच विदूषक बोलतसे परिसा.

आर्या – शंभू सासुर वाटी वसुनि बरा वाढलाचि सुर वाटी ।
गौरीप्रीय हा विटलाभास्तव चित्ते धुनी सुटला ।। २८ ।।

सू – यापकारें विदूषकानें बोलतांच नटेश बोलतो परिसा. नटेश वचन - "थोरा पुढें परिहास पुरें" - नटेश वचन - अगाये नारदा सुंदरस्त्री जवळी असतां हीं तीशी मोहणेंचि मन्मथ जो तिला त्याची खूण म्यां येथें यावयास कारण सांगतों ऐक.

आर्या – कंदर्पदर्प शमउनि जयाभिषेकार्थ पुण्य कासारीं ।
फिरतो सुपात्र सेऊं पहावया पुण्यभूमि कासारी ।। २९ ।।

सू – एणेंरीती नटेश बोलतांच नारदासी विदूषक बोलतो परिसा.

सीसपद्य –

जलजोद्भवे रचित जन तृप्तिकर बहा
जलजाक्षि लावण्य जाण पाणी ।
परम सुंदरवदन पाणियुग तैसचि
पादहीं जेथील पद्म मानी ।

मी बोलतों तथ्यमिति रहित चांचल्य
मीननयना चक्षुः मीनचि गणीं ।
शक्रादि देव नर चक्रासि मोहकर
चक्राकृति स्तनचि चक्र शकुनि ॥

गीतपद्य –

अद्भुतचि शैवाल अलक भावी
सुश्रेणि ते शिला समज जीवी ।
सकलताप हारी स्वप्रभावी
सेव्य ललना सरचि सरसभावी ॥ २९ ॥

सीसपद्य –

कां चिच्चते गमे कांची सुनिस्वना
कासेसि वेष्टिली कामिनीचि ।
शिखरी हुनि ऊंच शिखरि स्वयंभु
ते शंकराकस्तनें शंभु पर्वांव ।
धरणीवरि सौख्यधाम नरकामिनि
धन्य मुखकमल ते धातृ पर्वांव ।
सुजनाचि यार्जांग सुमनसींहि वसति
सुमनयुत धम्मिल्ल सुमन पर्वांव ॥

गीतपद्य –

अरुणतर अधरोष्ट अरुण पवर्की
तरुणिरदन छवी तरणि पवर्कीं ।
रमणीच हे गणी रंगपवर्कीं
निर्जरहिं सेविता तिज कीं ॥ ३० ॥

**विदूषक व.** - अगाये नारदा यारीतीचा तीर्थांत आणि याप्रकरीचा क्षेत्रांत विहारून इहपरसुख भोगूं इछितों.

**सू. व.** - एणेंरीती विदूषकानें ह्मणतांच नारद बोलतो वहा.

**नारद व** - सर्व ज्ञानी तूं त्यासी ऐसा उपाय करावें. कैसें कार्य केलेंतरीं ते बरौच दिसेल. (परंतु त्यासी ऐसा उपाय करावें)

**सू. व** - ह्मणौनि श्रीनटेशाची निमन करोनि निघोनि गेल्यानंतर श्रीनटेशी आश्रम राजित नटन करीत, डमरू वाजवितांच त्याचा मधुर ध्वनि ऐकूनि भाळोनि ऋषिपत्नि येताती पहा.

**प्रावेशिक दरु.** राग - **कांबोदी** ताळ - **आदि**

**बायका येताती पहा - बहुतचि सुंदर देहा ।। प ।।**

**ऐका जी त्याची नावें, अति रितल्या नटेशी जीव ।। अ प ।।**

**गुणाबाई ते बहु सुगुणा, सोनाबाई ते स्वर्ण वर्णा ।**
**धनाबाई तें बहु धन्या, मान्यबाई ते बहु मान्या ।। -१**

**गंगा यमुना सरस्वती कृष्णवेणी,**
**तुंगभद्रा अणि गोमती शृंगारिल्या शुभांगी सती ।। -२**

**नाकीं चा नभ घाली कानीं, एकी कंकण्या ल्याली चरणा ।**
**एकावळी माझी योजोनी, ऐसा संभ्रमे भुलोनी ।। -३**

**पाजवितां बाळा लागी, पातली तैसीच शुभांगी ।**
**द्विजीं हुंकारितां रागी, त्यजुनि पाहूं जाती जोगी ।। -४**

**साय दूधाची प्रीती, साखर हीं त्या आणिती ।**
**पायसपात्र घेऊनि हाती, परमानंदा आर्यासती ।। -५**

सूनमानता चंचल नयना, खुणाविती याया सदना ।
जनां न लाजनां ललना, जथुनी करिताति तराना ।। -६

लक्षा निशी त्या सुकेशी, लक्षावया नटेशासी ।
भिक्षामिसें त्या मोहीसेसी, दक्षा अल्या आनंदेशी ।। ७ ।।

सू – एणेंरीती ऋषिपत्नी येवोनि श्रीनटेशासी प्रार्थितां ती परिसा.

गोपीगीत - परमसुंदरा प्राणनायका - स्मरशरें आह्मी जेर बाईका ।
दर हरीनि ते धीर दे मना - पुरवि आमुचि पूर्णकामा ।। ३१ ।।

छंद - नटवरा तुझे नाट्य पाहतां - घडवि सत्सुखा वाढ तत्वतां ।
भट समस्त सद्भाव नेणती - खट पटिम कीं धीर सज्जती ।। ३२ ।।

सू - याप्रकारें ऋषिपत्नी येवोनि प्रार्थितांच श्रीनटेश मंदहास पूर्वक त्यांचा अंगीकरितांची, कित्तेक प्रौढबाइका आपणाहूनि धाकुट्यमुळी आल्या त्या पाहुनी, त्याप्रती बोलताती परिसा.

दरु राग - हुशेनी ताळ मिश्र

धाकटोग तूं मूला धरोनि हा नेईल ।
धाक मनी भरेल धवहीं तुज हा करील ।।

सू - याप्रकारे धाकुध्यामुळी कारणभीती दावितांच त्या चमकून गळमळींत असतां येरधाल गजा त्याप्रती धैर्य सांगताती परिसा.

दरु राग - येरुकलकांबोदी

धैर्य धरा बेगे आधीं कार्य अलभ्य हे साधीं ।
आर्य लीकांची वार्य जाण युक्ति बुद्धी ।। -१

पत्यादिकां आल्यां राग अत्याच्या वृत्तांत सांग ।
कृत्या जाणुनी होतील रंग अत्यादर लुटी रंग ।। -२

बिक्कु कैशी आली पहा बाळांतीण दिवसा दाहा ।
ठक्कु धाकुटी कीं ठकउनी आली बंधु समूहा ।। -३

सू - वेडे कां घावरी होतीस, हे जीवी सुंदरी कैसा आहेत पहा

आर्या - जीवी तंडुल हातें भिक्षा आणिली नटा स्वयं भातें ।
प्रेमरसें विरह शिखी योगे हा जाहला स्वयं भातें ।। १३३ ।।

सू - आणीक नवल पहा

श्लोक - फलपत्र पुष्प पाणीं आणी, भिक्षार्थ सुंदरी पाणी ।
विरह शिखीं तिज भाजी, त्यास्तव हे जाहली पहा भाजी ।। ३४ ।।

सू - याप्रकारें धाल गजा बोलत असतां, विदूषक - व - अहो थावा थावा येथें ऋषीचा गलवला ऐकूं यतो - तो ऐकून, सू - ह्मणतांच त्या समस्त स्त्रियाचकित बाहल्या असतांच त्याशीं सह श्रीनटेश वृक्षांतरीत होवोनि पाहत असतां याग होतसे निरखा (याग आचरण). सू - याप्रकारें याग होतांच त्या बाइका नटेशास पाहून मोहून घरिच्यास ठकवोनि भिक्षुक वरा कारणें घालणेचा सुभक्ष्य भोज्यादिक घेवोनि आल्या ऐसें वर्तमान यज्ञशालेंत विद्यमान ऐशा त्याचा पती कारणें अवभृधात विद्युक्त होणेचे समई नारद कळवितांच असूयेन दीक्षितादि नटवरास धेंडीत येताती निरखा.

दरु राग - कन्नड ताळ - आदि

येताती विप्रतापसी कांतार वासी ।। प ।।

अस्तोर्या मी अग्निषोमी, अग्निहोत्री जे बहु, कामी ।
अतिरात्री अग्निष्टोमी, ऐसे तत्पर जे कीं सोमी ।। -१

रामावधानी जो ज्ञाता, रामाभरणा धरुनी ममता ।
सोमाभिष व मिळवी चित्ता सोमा नेणे जो तत्वतां ।। -२

सू - एणेंरीती दीक्षितादिक ब्राह्मण येतांच स्वस्त्रियेसी न निखंदितां मोहिनी दर्शन मात्रें कामपरवश होवोनि बोलताती परिसा.

सीसपद्य -

कोमलांगी सरस कोटिरति सुंदरी
कोकिल सुनिस्वना कोण ललना ।
कुटिलका भव्य कुवलय सुलोचना
कुवलया मोहिनी कुंदरदना ।।

कठिण घनसुस्तना कलहंसगामिनी
कनक भासुरतनू कमलवदन ।
कटिविजित सिंहिकाकरभोरु हे पहा
कांतामणी परम कांत सुगुण ।।

गीतपद्य -

संसार सार तिज सर्वदां पाहूं
संगती इचिया सकल राहूं ।
कामबाणानळा केवी साहूं
कमनीय मूर्ति इज काय पाहूं ।। -३४

सू - एणेरीती सकल अश्रमवासी मोहिनी तें पाहोनि मोहले असतां, त्यांतील कित्तेक वृद्धब्राह्मण सावध होवोनि, हा कोळकीं कापालिक ह्मणोनि शापोनि त्यास दमऊं असक्त जाहल्यास्तव आलोचन करोनि परस्पर बोलताती परिसा.

आर्या - व्याभिचारकामिनीसह व्यभिचारी मोहवी भल्या योषा ।
गृहचार हाटलाया अभिचारें या दमूंचि नटवेषा ।। -३६

सू - याप्रकारें निश्चय करोनि कुंडमंटपविधानपूर्वक श्वेत सर्षपादिकाचा होम करोनि परमरागें पट्टवट्टि व्याघ्र निर्मोनि नटवरावरी सोडूनि बोलताती परिसा.

आर्या - तूं करिशी बहु माया सांबाळी फार वाघाया ।
परवनितेची चटका नटिका या हेतु हा नव्हे लटिका ।। -३६

सू - एणेंरीती व्याघ्र सोडितांच श्रीनटेश मंदहास्य करोनि परिहासें बोलतो परिसा.

आर्या - मज वश जित सिंह कटीं त्यानिकटीं बाघ बळ कसा प्रकटीं ।
निवटुनि त्यासी बहु हटीं आजि न पाटाल पटि तो पहा स्वकटीं ।। -३७

सू - याप्रकारें श्रीनटेशें बोलोनि त्या बाघा ते दमोनि त्याचा आजि नाचें परिधान करितांच अतिक्रोधयुक्त ऐसे ऋषीश्वर पुनः सर्पातें निर्मोनि बोलताती परिसा.

आर्या - तूं वर भुजंग भुजगा केल्या साध्वी परीय या भुजगा ।
बहु यत्नें सांभाळीं विधिली पिच्चुक नाचिलीहि यली भाळीं ।। -३८

सू - एणेंरीती बोलोनि सर्पातें सोडितांचि नटेश बोलतो परिसा.

आर्या - म्यां अधरामृत घटिका सेवियली मंत्र आपूला लटिका ।
करिता भट खट पटकां हे मज कटकादि भूषणें पटका ।। -३९

सू - याप्रकारें श्रीनटवरें बोलोनि सर्पातें करीं कंकण करितांच ऋषि याला महा प्रयोगें दमवावें ह्मणोनि प्रयत्न करीत असतां नटवर अंतर्धानांत पावोनि चतुर्भुज जटाधर त्रिनयन नीलकंठ पटाक्षेपें येवोनि नर्तन करीत असतां. ऋषीनि अपस्मार नामक राक्षस सोडितांचि श्रीनटवर बोलतो परिसा.

गोपीगीत -

भुवनी थोर जें भूत त्या स्मरा
धवडिणार मी दारुनी स्मरा ।
नवर भूत हें नावरें कसें
नवलयावरी नाचतों असें ॥

सू - एणेंरीती श्रीनटेश बोलोनि त्या राक्षसास पायातलीं घालोनि नर्तन करीत असतां, ऋषि पाहोनि हा उपायहीं व्यर्थ झालाकीं ह्मणोनि त्यासखीसचि अभिमंत्रोनि सोडोनि बोलताती परिसा.

आर्या - धाडूं धनंजयाया तव माया होय त्यापुढें पाया ।
पाळायो निजकाया साया सातें करोनि नटराया ॥ -४०

सू - याप्रकारें ऋषीश्वराचें वचन ऐकोनि श्रीनटेश बोलतो परिसा.

आर्या - दुस्सह हा विरह हा शिखीं सखो निवारितया सुधांशुमुखीं ।
तें प्रेमें मज रोखीं उभय नखीं अग्नि हा धरीन शिखीं ॥

सू - एणेंरीती श्री नटेश बोलोनि ते ज्योतिर्मय कलिका निजहस्तीं धरोनि नर्तन करितां ऋषीनि निज सर्वस्व ऐसा मंत्रगण सोडितांच श्रीनटेश ऋषीस पाहोनि बोलतो परिसा.

आर्या - मंत्र समूह हवाला केला मजला तुह्मीच हा वाळा ।
वीर मनी लेउनी पायीं नटतों तूं म्हा पुढेंचि निरपायीं ॥ -४१

सू - याप्रकार श्रीनटेश बोलोनि त्या मंत्रगणाचा वाळा करोनि पायीं लेवोनि आनंदतांडव करितो निरखा

दरु राग - पंतुवराळी ताळ - आदि

नटनाथ केवळ स्वच्छंदें नाचे आनंदें ।। ध्रु ।।

भटवर पटपट भावें नमिती ।
स्फुटतर अकपट स्तविती वाचें ।। -१

सखी हीं त्या सर्व गाती नगाती ।
नटती स्वानंद भरें निगुती ।। -२

तक्किटत तकिट धिक्कट धिमिकिट ।
थोंगिट नंगिट किटतक ऐसें ।। -३

सू - एणेंरीती श्रीनटेशाची अद्भुतकरणी आणी आनंदतांडव हीं पाहोनि हाचि श्रीपरमेश्वर एसें समजोनि पूजानें ऋषि आपुल्या स्त्रियासीं सहित प्रदक्षिण करीत स्तवितातीं परिसा

पंचचामरवृत्तभेद -

नगेन्द्र कन्यका वरां नटेश चित्सुखा करा ।
नतार्ति हारका परा नमोस्तुते शुभंकरा ।। -४२

सू - याप्रकारें ऋषीश्वरासी स्तवितांची विदूषक बोलतो पहा. **वचन** - अगाये नटेशा स्वस्त्रियेसी सोडूनी, परदारांचि कांस धरिल्यां सुख ऐसें घडतें पहा. ह्मणतां नटेश बोलतो पहा. **वचन** - अगाये विदूषका परिहास करूंनको ऊनांत गेल्यां सांउलीच सुख अधिकसें वाटेल. याप्रकारें बोलोनि निज प्राणवल्लभासक्त चित्त ऐसा श्रीनटेश पूर्वदिशैसी अवलोकोनि विदूषकाशीं बोलतो परिसा. **वचन** - अगाये विदूषका परमलाभ परमलाभ.

दरु ताळ - आदि

डो कांवितें सती मज मुख दिसतें ।
चन्द्र मंडलास माझे ।। ।। ९ ।।

सू. ह्मणतां विदूषक बोलतो पहा.

आर्या - शिवकामसुंदरी पैं नटवर चित्ता कसीन ते समजें ।। -४३

सू - एणेंरीती विदूषक आणी श्री नटेश परस्पर बोलत असतां संध्याकाल जाहल्या ह्मणूनि नित्यानंद मंदिरी प्रवेशतांची नटवराचा निजानंदतांडव दर्शने करून अत्यानंदभरित चित्त ऐसे होतातें समस्त ऋषीश्वर निकट हा स्त्रियासीं सहित अवभृत महोत्सव तें करोनि निजाश्रमवाटि केसी पावतांची (निष्कांता सर्वे)

इति भोंसलकुलकलशोदध्रि कलानिधि श्रीचन्द्रमौळीश्वरप्रसादलब्द चोळसिंहासन संपत्संततिसुविराजमान सार्वभौम महाराज छत्रपती भूमंडलाखंडल श्रीशिवाजीनृपवर विरचित श्रीनटेशविलासाभिधान नाटकें प्रथमोङ्कः समाप्त

।। प्रतापरामस्वामि सहाय – श्रीराम जय – धर्ममे जयसु ।।

।। शिवार्पणमस्तु ।।

संपादक. ना. विश्वनाथन्,
तेलुगुपंडित, सरस्वतीमहालग्रंथालय, तंजावूर.

# மன்னர் ஏகோஜி

## (பாவா சாகேப் - 1695-1736)

திரு. T. R. பீமராவ்,
மராத்தி பண்டிதர்.

தஞ்சையில் முதல் மகாராஷ்டிர மன்னராக சத்ரபதி சிவாஜியின் சகோதரர் ஏகோஜி என்கிற வெங்கோஜி கி. பி. 1676-ல் முடிசூட்டிக்கொண்டார். இவருடைய மூன்று மைந்தர்களான சஹஜி, சரபோஜி, துக்கோஜி முறையே ஒருவர்பின் ஒருவராக இத்தஞ்சையை அரசுபுரிந்தனர்.

போசலகுல மராட்டிய மன்னர்கள் ஆட்சியில் தஞ்சை மண்டலம் ஒரு சிறந்த கல்விக்கேந்திரமாக விளங்கியது. சமஸ்கிருதம், தெலுங்கு, மராத்தி மற்றும் தமிழ் மொழியில் பலமொழிப் புலவர்களால் எண்ணிறைந்த நூல்கள் படைக்கப்பட்டன. இதிலிருந்து அக்கால கலை, இலக்கியம், சாஸ்திரம், வரலாறு போன்றவைகளில் நூல்கள் பிற்கால சந்ததியினர் அறிந்து பயன் பெறும் வகையில் அமைந்திருக்கின்றன என அறியலாம்.

மராட்டிய மன்னர்கள் சிறந்த புலவர்களை தன் அவையில் அமர்த்தி, ஆதரித்ததோடல்லாமல், மன்னர்களும் சிறந்த மொழிப் புலமைபெற்று இலக்கியம் படைப்பதில் சிறந்தவர்களாகத் திகழ்ந்தனர். தங்களை ஆதரித்த மன்னர்களைப் புகழ்ந்து புலவர்கள் பல நூல்களையும் எழுதி மன்னர்களைக் கௌரவித்தனர். மன்னர்களும், புலவர் பெருமக்களுக்கும் நிறைந்த செல்வங்களைக்கொடுத்தும், வீடு நிலம் போன்ற பரிசுகளைக் கொடுத்தும், கௌரவித்தனர். இதன்மூலம் தங்களுக்கு மொழிமீதும், கலைகளின்மீதும் கொண்ட மதிப்பினை வெளிப்படுத்தினர்.

இதுபோன்று பெருமையுடன் வாழ்ந்த மன்னர்களில் கி. பி. 1736-ல் தஞ்சையை அரசுபுரிந்தவரும் தஞ்சை முதல் மராட்டிய மன்னர் ஏகோஜியின் மூன்றுவது மகனுன துக்கோஜியின் முதல் மைந்தர் பாவா சாகேப் என்கிற ஏகோஜியின் வரலாற்றை இங்கு காண்போம்.

## ஏகோஜியின் வரலாறு

தஞ்சையை கி. பி. 1729 முதல் 1735 வரையில் ஆட்சி புரிந்த துக்கோஜி என்கிற துளஜா மன்னரின் மூத்த மைந்தர் பாவா சாகேப் என்கிற ஏகோஜி, துளஜாவின் மனைவியும் பட்டத்தரசியுமான ராஜகுமாராம்பாவினிடத்தில்[1] கி. பி. 1695-ம் ஆண்டு பிறந்தார். இதை அமரசிம்ம மன்னர் காலத்து வரலாற்றுக் குறிப்பில் கீழ்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.[2]

"ஏகோஜியின் ஜேஷ்ட புத்திரரான சாஹாஜி ராஜாவானவர் தம்பிகள் சமேதருயி, பிதாவின் உத்திரக்கிறியைகள் முதலானதும் செய்து, பிறகு அத்தியந்த வைபோகத்துடனே தஞ்சாவூர் சமஸ்தானத்தின் பிட்டாதிபதியாகி, ருஜ நீதியோடே, மாதுர் வாக்கியம் தப்பாமல், ருஜியபாரம் பண்ணிக் கொண்டிருக்கும் காலத்தில் அவருடைய கனிஷ்ட்ட தம்பியான துக்கோஜி ருஜாவுக்கு செக்கம் (சகம்) 1617க்கு கிறித்து 1695 வருஷத்தில் தமிழ் யுவ வருஷத்தில் ஜேஸ்ட்ட புத்திரருன பாவா சாகேப் ருஜா ஜென்மித்தார்".

துளஜாமன்னர், தன் மைந்தரை சிறந்த ஆசிரியர்களைக்கொண்டு கல்வி அறிவைப் புகட்டினர். ஏகோஜி தன் தாய்மொழி மராத்தியுடன், சமஸ்கிருதம் தெலுங்கு இரண்டையும் கற்று சிறந்த புலமை பெற்றார். தன் தந்தையிடம் ராஜதர்ம சாஸ்திரங்களையும் முறையாக கற்று அறிந்தார்.

ஏகோஜி திருமணம் செய்துகொண்ட பெண்கள் ஆறுபேர்கள். இதில் இங்களே வம்சத்துப் பெண் சுஜான்பாய் முதல் மனைவி ஆகும். இவர் ஏகோஜிக்குப் பிறகு இரண்டு ஆண்டுகள் தஞ்சையை அரசாட்சி செய்தார். மற்ற மனைவிகள் ஜயந்திபாய், சக்குவார்பாய், சுகுமார்பாய், கிரிஜாபாய், மற்றும் பார்வதிபாய் எனவும், இவர்களைத் தவிர தாஞகை அபிமானமாக வைத்துக்கொண்ட ஸ்திரிகள் மூவர் எனவும் 'போன்ஸலே வம்ச' சரித்திரம் தமிழாக்கம் பக்கம் 80–இல் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஏகோஜி மிகுந்த தயாள குணமும் சாந்த குணமும் உடையவர். தெய்வ பக்தியும் பெரியவர்களிடத்தில் மரியாதையும் கொண்டவர். இவர் தன் வாழ்நாளில் பெரும்பகுதி அரண்மனையிலேயே கழித்து வந்ததால் வெளி உலக அறிவே அதிகம் பெற வழியில்லாமல் போய்விட்டது.

ஏகோஜி தன் தந்தையான துக்கோஜி மீது பெரும் மதிப்பும் அன்பும் வைத்துவந்தார். அவர் மனம் மகிழ்ச்சிக்காக சமஸ்கிருத மொழியில் காணும்

---

1) Referred as Rajahamsambika in Padamulu Kirtanamulu of King Ekoji, ref., Telugu MSS Cat,, I, D, No. 458.

2) **திருமுடிச் சேதுராமன் அவர்களின் சுவடியின் பிரதி** T. M. S. S. M. L. காப்பீடு எண் 1248 பக்கம் 85.

பதிவிரதா தர்மம், ராஜநீதி போன்ற நூல்களையும், ராஜநீதிகளைக் கூறும் ராஜபுத்ரநீதி, அவிசார ரமணீய சதை போன்ற நூல்களையும் மராத்திமொழியில் எழுதி தன் தந்தையின் மனதை மகிழ்ச்சியுறச் செய்தார். இவர் இயற்றிய நூல்களைப்பற்றி இக்கட்டுரையில் தனியாக குறிப்பிட்ட இடத்தில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளதைக் காணலாம்.

ஏகோஜியின் தந்தை துக்கோஜி கி.பி. 1735ல் காலமானார். அப்போது அவருக்கு ஐம்பத்து ஒன்பது வயதாக இருந்தது. இதை போன்சல வம்சம் தமிழாக்கம் பக்கம் 80-ல் இவ்வாறு கூறப்பட்டுள்ளது†

ஏகோஜி அரசவையில் அமர்ந்த நேரத்தில் பல அரசியல் சூழ்ச்சிகள் ஏற்பட்டு தஞ்சை அரசைக்கைப்பற்ற முயற்சிகள் நடந்தன. அதனால் ஏகோஜி மிகவும் மனம் குழம்பி காணப்பட்டார். பொதுவாக இவர் ஒருவர் மீதும் நம்பிக்கை கொள்ளாமலும் தன்னை பிறர் கபட எண்ணத்துடன் கெடுப்பார்கள் என நினைத்தும் வந்தார். ஆகையால் எவரைக் கண்டாலும் பயந்தார். யாராவது ஒருவர் கையில் கத்திபோன்ற ஆயுதம் காணப்பட்டால் அவர்களை சந்தேகிப்பார். யாராவது வாய் ஏதாவது அசைத்தாலும், தெய்வ துதியைக் கூறினாலும், கையில் ஜெபமாலையை வைத்திருந்தாலும், இரண்டு மூன்று பேர்கள் கூடிநின்று பேசினாலும், அவர்களை சந்தேகத்துடன் பார்த்து, 'தன்னை வசியம் செய்துவிடுவார்கள்' என பயந்தார். 'தன்னை மந்திரம், தந்திரம் செய்து மரணம் ஏற்படச் செய்து விடுவார்கள்' எனவும் பயந்தார், இவர் தன்னுடன் தினமும் வழக்கமாகப் பேசும், பெண்கள், குழந்தைகள், அரசாங்க அதிகாரிகள் இவர்களிடம் மட்டுமே சாதாரணமாகப் பேசுவார். மற்றபடி புதியவர்கள் தன்னை அண்டவிடமாட்டார்.

இவர் காலத்தில் தஞ்சைக்கு வெளியே நடந்த அரசியல் சூழ்ச்சிகளால் தஞ்சைக்கு ஆபத்து ஏற்படுத்தும்படியாக இருந்தன. ஆர்காட்டு நவாப் சுபாவின் தோஸ்துஅலிகானின் மாப்பிள்ளை சந்தாசாகேப் என்பவன் கி. பி. 1736ல் திருச்சிராப்பள்ளிக்குச் சென்று கொண்டிருக்கும்போது நடுவில் தஞ்சாவூரின் மேல் படைபெடுத்தார். அந்த நேரத்தில் ஏகோஜி உடல்நலம் குன்றி இருந்தார். இருந்தபோதும் சிறிதும் மனம் தளராமல் சந்தா சாகேப்புடன் நம்பிக்கை உள்ளவர்களைக்கொண்டு தன் படைகளைத் திரட்டி தன் கோட்டையை பாதுகாத்தும், தஞ்சை அரண்மனை கோட்டையின்மேல் வந்து வாயிலில் நின்று எதிரி படையின்மேல் பீரங்கியினால் சுட உத்திரவு செய்தும், தானும் தன் படையுடன் போர்பகுதியில் எதிரிப்படைகளை எதிர்த்து

---

†துக்கோஜி ராஜா தன் ஐம்பத்தொன்பதாவது வயதில் சகம் 1657-ல் (1735 A. D.) தமிழ் வருஷம் ராக்ஷசத்தில் காலமானார். தன் தந்தை காலமாகும்போது ஏகோஜிக்கு வயது சுமார் நாற்பதாக இருந்தது. இந்த சமயத்தில் தஞ்சை அரியணையில் ஏகோஜி அமர்ந்தார்.)

தீரமுடன் நன்முக போர் செய்தார். இந்த போரில் சந்தா சாகேப் தோல்வி அடைந்து 'இனி நம்மால் சமாளிக்கமுடியாது' எனநினைத்து திருச்சிராப்பள்ளிக்குத் தப்பிச்சென்று விட்டான்.

இந்த சமயத்தில் தஞ்சாவூரின் கஜாஞவில் செல்வம் இல்லாமல் காலியாக இருந்தது. 'ராஜ்யத்தை நல்ல முறையில் நடத்திச் செல்ல ஒரு மந்திரி சபையை ஏற்படுத்தி அதன்படி ஏகோஜி நடத்தச் செய்தார்' என்றும் ஆனல் அது செவ்வனே நடத்த முடியாமல் போய்விட்டது என்று சென்னை சுவடியின் மூலம் தெரியவருகிறது என்று மராத்திமொழியில் உள்ள 'தஞ்சாவர் மராட்டே ராஜே' என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது.

ஏகோஜி தனக்கும் சந்தா சாகேப்புக்கும் ஏற்பட்ட போரின் அசதியினுலும் முன்பு உடல்நலம் குன்றி ஏற்பட்ட பலஹீனத்திஞலும் மிகவும் உடல் குன்றி வியாதியஸ்தஞகி கி. பி. 1736ல் தமிழ் பிங்கள வருஷத்தில் காலமானர். ஏகோஜி தன் நாற்பதாவது வயதில் தஞ்சை சிம்ஹாசனத்தில் அமர்ந்து தனது சுமார் நாற்பத்தி ஒன்ருவது வயதில் காலமாஞர். இவர் அரசாண்ட காலம் ஒரே ஆண்டுதான் (கி.பி. 1635—1636)

ஏகோஜி காலமான பிறகு இவர் மனைவியான ராணி சுஜான்பாய் தஞ்சை அரசுப் பொறுப்பை ஏற்று அரியணையில் அமர்ந்தார். தன் கணவர் ஏகோஜி மந்திரி சபையில் உள்ளவர்களையே தன் அரச சபையில் வைத்து அவர்கள் யோசனையின்பேரில் தஞ்சை அரசுக்கு ஏற்பட்ட ஆபத்தை உணர்ந்து முடிந்தமட்டும் சமாளித்து அரசு செய்துவந்தார். (கி. பி. 1636—1638)

கி. பி. 1638ல் தஞ்சை அரசைக் கைப்பற்ற, கொடுமை குணமுள்ள முசல்மான் கில்லேதார் சையதும், 'காட்டுராஜா' என்று வர்ணிக்கப்படுபவனும் பெரும் முயற்சிகள் செய்தனர், மேலும் பல போர்களால் பலவிதமான சொல்லெண்ணுத தொல்லைகளும் அபவாதங்களும் ஏற்பட்டன. சையது பல சூழ்ச்சிகள் செய்து தஞ்சை அரசை கைப்பற்ற நினைத்து 'தஞ்சை கோட்டைக்கு வெளியே வந்து போர் செய்யலாஞன். அச்சமயத்தில் சுஜான்பாய் அவர்கள் ஆண் உடைதரித்து உடைவாள் ஏந்தித் தானே எதிர்த்து நின்று கோட்டைக்கு வெளியே வந்து போர் செய்தார். ஆனல் முடிவில் கோட்டைக் காவல் புரிந்த சில தளபதிகளும் சந்தாசாகிபின் மாமனுரான ஆர்காட்டு நவாப்பும் சேர்ந்து சதிசெய்து இவரை சிறை செய்து கொன்றனர்' என தமிழ்ப்பல்கலைக் கழக மோடி ஆவணக் கருத்தரங்கு ஆராய்ச்சி கட்டுரையில் கூறப்பட்டுள்ளது. முதலில் சுஜான்பாயை கைது செய்து அவர் மந்திரி சபையில் இருந்த ஒரு மந்திரியான சித்தோஜியை அரண்மனை திட்டிவாசலில் கழுமரத்தில் ஏற்றிஞன். இந்த சித்தோஜி என்பவர் சுஜான்பாய் ராணிக்கு அரசியலில் மிகவும் உண்மைஊழியஞக விளங்கியவர் ஆவார். இதுநாள் வரையில் போஸலகுல

மன்னர்கள் தஞ்சையை சிறந்த முறையில் ஆட்சி செய்தனர். வஞ்சகர்கள் சூழ்ச்சியால் எதிரிகளின் வசம் தஞ்சை சென்று அடைந்தது.

## ஏகோஜி மன்னர் காலத்திய சில விஷயக் குறிப்புகள்

தன் முன்னோர்களான ஷாஹஜி, சரபோஜி போன்றவர்கள் போலவே ஏகோஜியும் திருவாரூரில் கோவில் கொண்டுள்ள ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமி மீது பக்தி கொண்டிருந்தார். அதை வெளிப்படுத்தும் விதத்தில் 'ஸ்ரீ கமலாம்பா தியாகேச பரிணயம்' என்னும் நாடகத்தை மராத்தி மொழியில் இயற்றினர்*

[முதல் ஏகோஜியின் காலத்தில் ஸ்ரீ சமர்த்தராமதாஸ சம்பிரதாயமாக தஞ்சையில் முதன் முதலில் அமைந்த ஸ்ரீ சமர்த்த மடமும், அதன் முதல் மடாதிபதியான ஸ்ரீ பீமராஜகோஸ்வாமிகள் அவர்களும் இந்த பாவாசாகேப் என்கிற ஏகோஜி காலத்திலும் வாழ்ந்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (M. E. F. Silver-Jubilee Souvenir — South Indian Maharastrins Cultural and Economic Studies — 1937)

## ஏகோஜியின் காலத்து தர்மசாஸன செப்பேடு.

### 1. கொங்கணேஸ்வரர்கோவில் செப்பேடு :

இரண்டாம் ஏகோஜியின் ஆட்சிகாலத்தில் அறுகரைச் சனங்களும், கெட்டியக்காரரும் சேர்ந்து கொங்கணேசுவரருக்கும், ஞானம்பிகைக்கும், அன்னபூரணிஈசுவரி அம்மனுக்கும் அர்த்சாமக் கட்டளைக்காக எழுதிக்கொடுத்த தருமசாசன முறியே இச்செப்பேடு ஆகும்.

(விபரம்) நெல்லுப்பேட்டையிலும், அரிசிப்பேட்டையிலும் பொதி ஒன்றுக்கு $3\frac{1}{4}$ சேர் படியாலே வீசம் மாகாணி நெல்லும், அரிசியும், கோயில் வழிபாட்டுக்கு அளிக்கப்பட்டது" — தஞ்சை மராட்டியர் செப்பேடுகள் - 50 தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர் - புலவர் செ. இராசு, எம் ஏ.,

ஏகோஜி மன்னர் காலமான பிறகு அவர் மனைவி சுஜான்பாய் ராணி அவர்கள் அந்திமக் கிரியைகளைச்செய்த விபரமும் அதற்குண்டான சிலவு விபரமும் —

கி. பி. 1736 ஹுஜூர் உத்தரவு — ரா. மகாராஜ. மகாஸ்ரீ சுஜான் பாய் சாகேப் — முகாம். கோட்டை தஞ்சாவூர். தஞ்சாவூர் கோட்டை அன்னசத்திரத்தில் ரா. ஸ்ரீமகாராஜா சாகேப் கைலாஸ வாசஞ்செய்தார்.

---

*இவர் காலத்தில் ஸ்ரீராம பண்டிதர் என்னும் புலவர் 'தியாகராஜ மாகாத்மியம்' என்னும் மராத்தி நூலை எழுதினர். சரஸ்வதிமகால் வெளியீடு எண் 159.

அவருடைய 11-ம் நாள் முதற்கொண்டு 13-ம் நாள்வரையிலும், சமாராதனை செய்வித்தார். ஆக 3'250 போர் பிராமண போஜனம் செய்ததற்கு சமயல் காரனுக்குக் கூலி ஆயிரத்திற்கு சக். 5 வீதம் கொடுக்கிறது.

## ஏகோஜியின் மனைவி சுஜான்பாய் காலத்தில் மொயினை அதிகரித்துக்கொடுத்த விபரம் :-

தஞ்சாவூர் கோட்டை மா. ராஜ. ஸ்ரீ சுஜான் பாயி சாகேப் - பால கோபாலஸ்வாமி சந்நியாசி அவர்களுக்கு பேஸஜீ (முன்பு இருந்த) ராஜா, மாஸத்திற்கு 50 சக்கரம் மொயின் (நிர்ணயம் செய்யப்பட்ட தொகை) கொடுத்துக்கொண்டு இருந்தார். அதன்மேல் இவ்வருஷம் 500 சக்கரம் வீதம் மொயின் செய்தார். தற்போது ரா. சாகேப் மனமுவந்து வருஷத்திற்கு இவ் வருஷம் முதற்கொண்டு மாதத்திற்கு 50 சக்கரம் மொயின் கொடுப்பது.

பொருள் :— மாதம் 50 சக்கரம் வீதம் வருஷத்திற்கு 600 சக்கரமான தொகையை முன்பு இருந்த மன்னர் ஏகோஜி வருஷத்திற்கு 500 என குறைத் தலால் முன்போலவே வருஷத்திற்கு 600 சக்கரம் கொடுக்கவேண்டும் என முறையீடுசெய்து கேட்டுக்கொண்ட மனு (சரஸ்வதி மகால் நூல் நிலைய மோடிச் சுவடிகளின் கையெழுத்துப் பிரதி (Vol. No. I, B. No. 119c) —

## சுஜன்பாய் செய்த அறக்கட்டளை.

ஏகோஜியின் மனைவியான சுஜன்பாய் பாகவத மேளாவைச் சார்ந்த கலைஞர்களுக்கு தீபாம்பாள்புரத்தை ஒட்டிய நிலப்பகுதியில் தனது கணவர் பெயரில் 'ஏகமகாராஜபுரம்' என்று பெயரிட்டு ஒரு அக்ரஹாரத்தை உருவாக்கி வழங்கியுள்ளார். அங்கு ஒரு விஷ்ணு கோவிலும், சிவன் கோவி லும் அமைக்கப்பெற்றுள்ளது.

இரண்டாம் ஏகோஜியின் பெயரால் ஏற்படுத்தப்பட்ட அக்ரஹாரத்தில் வீடுகட்டிக்கொள்ள (மனை) நிலம்கொடுத்தச் செய்தியை கீழே காணும் ஆவணம் கூறுகிறது :—

"எழுதுவது என்னவெனில் மஹாராஜா ராஜஸ்ரீ ஏகோஜிராஜா சாஹேபின் மனைவியின் உத்திரவு —

இப்பொழுதும், இனிவரம்போகும் அலுவலர்களுக்குத் தெரிவிப்பது யாதெனில் 1657 (சகம்) ராக்ஷஸ ஆண்டு தைமீ கிருஷ்ணபக்ஷம், திரயோதசி திதி, மகரசங்கராந்தி நாளில் (30—12—1735) தீபாம்பாபுரம் செல்லும் சாலையில் மகிமாலை வீரசோழகன்பேட்டை அருகில் 'ஏகராஜபுரம்' என்னும் பெயரில் அக்ரஹாரம் ஏற்படுத்தியுள்ளேன். இதில் சிவன்கோவில், விஷ்ணு கோவில், பாடசாலை, அந்தணர்களுக்கு வீடு, ஞானிகள் தங்கும் மடங்களும் கட்டுதற்குரிய இடமும், பசுக்கள் சுதந்திரமாக மேய்வதற்குரிய இடமும்

ஆக 87 வேலி, 3½ மா நிலத்தை பேஷ்வாவிடம் இனும் நிலமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. அதில் பாகவத மேளா (இசை நாட்டிய நாடகத்தை) நடத்தும் கோபால பட்டருடைய பேரனும், அஹோபல சாஸ்திரியின் மகனுமான 'கிரிராஜகாலீஸ்வரருக்கு' நன்செய் நிலம், 13 அடிக்கோலால் ¾ வேலி சர்வ மான்யமாக தாராக்ரஹபூர்வமாக இனும் கொடுக்கப்பட்டது.

('குலவிளக்கு தீபாம்பாள்' — சரஸ்வதி மகால் நூல்நிலைய பருவ இதழ் - 33 திரு. N. ஸ்ரீனிவாஸன், சமஸ்கிருதமொழிப்புலவர்)

## ஏகோஜி மன்னர் எழுதிய நூல்கள்

ஏகோஜி தன் முன்னோர்கள் ஷஹஜி, துளஜா போன்றவர்கள்போலவே சில நூல்களை இயற்றியிருக்கிறார். அவை சமஸ்கிருதம், தெலுங்கு மற்றும் மராத்தி மொழிகளில் ஆகும்.

## ஏகோஜியின் சமஸ்கிருத மொழி நூல்கள்

ஏகோஜி தன் தந்தை துளஜாவிடம் ராஜதர்ம சாஸ்திரங்களைக்கற்று அறிந்தார். அதன் பயனாக தானும் மக்களுக்குப் பயன்படும்படி நூல் ஏதாவது எழுதவேண்டும் என்று எண்ணம்கொண்டு தன் தந்தையின் அனுமதியின்பேரில் சமஸ்கிருத மொழியில் 'பிரபஞ்சாம்ருதசார' என்னும் தலைப்பில் ஒரு நூல் எழுதினார். அது ராஜதர்மத்தை விளக்குவதாக இருக்கிறது. அதில் பல தலைப்புகள் கொண்ட பகுதிகள் இருக்கின்றன. அவை சுமார் இருபது தலைப்புகள் ஆகும். அதில் சில தலைப்புகளில் உள்ளவற்றிற்கு மராத்தி மொழியில் வியாக்கானமும் செய்யப்பட்டிருக்கிறது. இந்த சமஸ்கிருத மொழியில் காணும் நூல் ஏகோஜி மன்னர் இயற்றவில்லை. அவர் அவையில் வீற்றிருந்த புலவர் மகாதேவர் என்பவர் எழுதினார்-என்பது ஆராய்ச்சியாளர்களின் முடிவு. இதைப்பற்றி சரஸ்வதி மகால் நூல்நிலைய சுவடிகளை கேட்டலாக் செய்த பண்டிதர் திரு. P. P. சாஸ்திரி அவர்கள் ஏகோஜியின் பிரபஞ்சாம்ருதசார நூலின் ஆதாரத்தைக்கொண்டு கூறுகிறார்—

D. No. 18909/7655 பிரபஞ்சாம்ருதசார — பரபிர்மநிரூபணம்.

This author was the son of Tukkoji I. Maharaja of Tanjore and Kumaramba (Rajakumaramba) and ruled the kingdom of Tanjore for one year, between 1735 - 1736. He is otherwise known as Bavasahib. A work by name Prapancamrta-sara both in Marathi and Sanskrit is attributed to him. The work is a compenduim of many small chapters dealing with various topics. One of the colopons to one of the many Mss. of this work given below contains the name of one Mahadeva as the author—

'ஸ்ரீராஜாதிராஜ துளஜமகாராஜனின் குமாரன், ராஜகுமாராம்பாவிற்கு அன்பான பாலசோமாஸ்கந்த பக்தரான, ஏகராஜனை வணங்கும் மகாதேவன் இயற்றிய 'பிரபஞ்சாம்ருதசார ராஜரஞ்சன' புராணத்தில் துளஜாராஜ குண வர்ணம் அத்யாயம் முற்றிற்று' என்ற கூற்றை ஏற்ப ஆராய்ச்சியாளர் இந்த சமஸ்கிருத நூல் ஏகோஜி இயற்றவில்லை எனக் கூறுகின்றனர். ஆனால் ஏகோஜி சமஸ்கிருத மொழியில் உள்ள இந்த நூலை மராத்தி மொழிபெயர்த் திருக்கிறார். அதை இவர் நூல்களின் கடைசியில் காணும் வாக்கியத்தி லிருந்து தெரிந்துகொள்ளலாம்.

ஏகோஜியின் 'ராஜகார்யபத்ததி' என்னும் நூலின் கடைசியில் கூறு கிறார் :— 'ஸ்ரீராஜாதிராஜ துளஜமகாராஜ (புத்திரன்) ஏகேந்திரன் இயற்றிய பிரபஞ்சாமிருதசார ராஜரஞ்சன புராணத்தில் ராஜகார்யபத்ததி நிரூபனம் முற்றிற்று.'

## ஏகோஜியின் மராத்தி மொழி நூல்கள்

ஏகோஜி மேலே கூறிய பிரபஞ்சசாராம்ருத நூல் மொழிபெயர்ப்பைத் தவிர மராத்தி மொழியில் 'ஜீவ சிவ சம்வாதம்,' 'அவிசாரரமணியகதை,' 'பதிவிரதா தர்மம்' போன்ற நூல்களையும், 'ஸ்ரீகமலாம்பா தியாகேசபரிணயம்' 'சாகுந்தலம்' என்னும் நாடகநூலையும் எழுதினர். இதில் பதிவிரதா தர்மம் என்னும் நூல் ஏகோஜி மன்னர் இயற்றவில்லை. இதை இயற்றியவர் 'மகா தேவர்' என்பவர் ஆவார் என சரஸ்வதி மகால் நூல்நிலைய சமஸ்கிருத மொழி பண்டிதர் திரு. என். ஸ்ரீநிவாசன், நூல்நிலைய பருவஇதழ் எண் - 33ல் 'குலவிளக்கு தீபாம்பாள்' என்னும் கட்டுரையில் கீழ்க்காணுமாறு கூறுகிறார் :

'ஏகோஜியின் பாட்டியான தீபாம்பாள் பெண்களுடைய முன்னேற் தில் மிகுந்த அக்கரைகொண்டிருந்தாள். அவளுடைய விருப்பத்தின்படி முதல் அமைச்சரும், பெரும் புலவராகிய திரயம்பகராயமகி என்பவரால் பெண்கள் ஒழுகவேண்டிய நெறிகளைக் குறித்து 'சுருதி ஸ்மிருதி புராணங்களில் காணப்படும் செய்திகளை தொகுத்து ஒரு நூலாக எழுதச்செய்தார். அது 'ஸ்திரிதர்மபத்தி' என்னும் வடமொழி நூல் ஆகும். சமஸ்கிருதம் அறியாத மராட்டியரும் எளிதாக அறியவேண்டி மராத்தியில் எழுதும்படி தன் அரசவை யில் இருக்கும் ரகுநாத பண்டிதரை வேண்டினர். இவர் 'பதிவிரதாதர்மம்' என்னும் தலைப்பில் எழுதினர். இந்த பதிவிரதாதர்மம் நூலுக்கு பாவா சாகேப் தன் அவைப் புலவரான மகாதேவரைக்கொண்டு மராத்தி மொழியில் எழுதச் செய்தார். அவர் ஏகோஜி மன்னர் பெயரிலேயே அந்நூலை எழுதி அங்கிதம் செய்தார்.

ஏகோஜி சமஸ்கிருத மொழியில் எழுதிய பிரபஞ்சாம்ருதசார நூலி லிருந்து 'சிக்ஷாத்தியாயம்' என்னும் நூலுக்கு மராத்தியில் உரை எழுதினர்.

அதில் ராஜ்யத்தில் குற்றம் புரிந்தவர்களை எவ்வாறு தண்டிக்கவேண்டும் என்று விளக்கியிருக்கிறார். மற்றும் 'அவிசாரரமணீய கதை' நூலில் ராஜ காரியங்களைச் செய்யும்போது எதையும் முன்பின் யோசனைசெய்து செயல்படவேண்டும் என்ற நியதியை உணர்த்தி கூறியிருக்கிறார். 'ராஜபுத்திர நிதி' என்னும் நூல் ராஜகுமாரர்களுக்கு வரையறுத்துக்கூறும் நல்லது கெட்டது பற்றிய செய்திகளைக்கொண்டவையாகும்.

இந்த மூன்று மராத்தி நூலுக்கு தமிழாக்கம் இத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது. அதில் 'ராஜபுத்திரநீதி' நூலிலிருந்து நமக்கு இந்து சமுதாய வாழ்க்கையில் மக்கள் எவ்வாறு வளர்க்கப்படவேண்டும் என்ற அறிவுரைகள் மிகவும் தெளிவாகக்கூறப்பட்டுள்ளது. இந்த நூல் அக்கால ராஜகுமாரர்களுக்காக எழுதியிருந்தபோதும், தற்காலத்தில் பெற்றோர்களின் கடமைகளைச் செய்வது பற்றியும், தன் கல்வி, விளையாட்டு, கடமை முதலியவற்றை அறிந்து கொள்ளும் விதத்தில் மிக நன்றாக எழுதப்பட்டிருக்கிறது. 'எல்லோரும் இந்நாட்டு மக்கள்' என்னும் கூற்றுக்கு ஏற்ப இந்த நூலை பயனுள்ளதாக்கிக் கொள்ளலாம்.

## ஏகோஜியின் தெலுங்கு மொழி நூல்கள்

ஏகோஜி மன்னர் தெலுங்கு மொழியில் வால்மீகி இராமாயணத்தை 'த்துவிபதை' (ஈரடிச் செய்யுள்) ஆக செய்துள்ளார். இந்நூல் ஸ்ரீமத் ராமபயணத்தின் சுருக்கம் என்பதாக அறியமுடிகிறது. அது 'ஏகோஜியின் 'த்துவிபத ராமாயணம்' (Tel. No. 352) என்று கூறப்படுகிறது. இவர் 'விக்னேஸ்வரர் கல்யாணம்' (Tel. No. 606) என்னும் ஒரு நாடக நூலும், பக்தி நீதிபதங்கள் தெலுங்கு, மராத்தி மொழியிலும் இயற்றி இருக்கிறார். (Tel. No. 440, 441, 458) இதில் சிலவற்றை மராத்தியில் இங்கு வெளியிடப்படுகிறது.

ஏகோஜி மன்னர் இயற்றிய மேலே கூறப்பட்ட நூல்களில் சில இங்கு வெளியிடப்படுகிறது. அவை 'ஜீவசிவசம்வாதம், ராஜபுத்திர நீதி, அவிசார சமணிய கதா' ஆகிய மூன்று நூலையும் மராத்தி மூலத்தில் கண்டுள்ளபடி இங்கு தவறுகளைச் சீர்செய்து வெளியிடப்படுகிறது. இதற்கு தமிழ்மொழியாக்கமும் கொடுத்திருக்கிறேன்.

ஏகோஜிமன்னர் தன் சுமார் நாற்பது ஆண்டு வாழ்நாளில், ஒரு ஆண்டு தஞ்சையை அரசு புரிந்தும், சிலநூல்களை இயற்றியும் தன் கடமைகளைச்செய்து புகழுடன் எய்தினர். இச்செய்தியினை இங்கு தொகுத்துக்கூற எண்ணங்கொண்டு இக்கட்டுரையை எழுதலானேன். வரலாற்று மாணவர்களுக்கு பயன்படும் என்ற எண்ணத்தில் இக்கட்டுரையை இத்துடன் நிறைவு செய்கிறேன்.

ஏகோஜி மன்னர் படைப்புக்களின் தமிழாக்கம்.

## ஜீவ சிவ சம்வாதம்.

*[ மன்னர் ஏகோஜியின் பெயரில் காணும் இந்த தலைப்புகொண்ட நூல், ஜீவன் என்பது மனிதனையும் சிவம் என்பது பரம்பொருளான சிவனையும் குறிக்கிறது. ஜீவனை மனிதன் சிவதத்துவத்தை அறிந்து அதன் உயர்வைப் பற்றி வர்ணிப்பதாக அமைத்து எழுதப்பட்ட நூல் ஆகும் இது. இதில் ஜீவன் சிவனைப்பார்த்து பேசும் வாக்கியம்மட்டுமே காணப்படுகிறது. சிவபெருமான் ஜீவனுடன் பேசுவதாக் அமைந்த வாக்கியம் ஏதும் காணப்படவில்லை. இருந்தபோதும் இதற்கு தலைப்பு நூலில் கண்டுள்ளபடியே கொடுத்திருக்கிறேன். இதில் ஜீவனைத் தன்னை, ஏகோஜி மன்னர் பாவிப்பதாக நாம் கொள்ளலாம். இங்கு, வினா விடையாக அமைத்து சிவதத்துவத்தைச் சுலபமாகப் புரிந்துகொள்ளும்விதத்தில், இந்நூலை அமைத்திருக்கிறார் ஆசிரியர் ]*

ஸ்ரீ கணபதியையும் மற்ற எல்லாத் தெய்வங்களையும் வணங்கி நூலை எழுத முற்படுகிறேன்" என்று ஏகேந்திரன் கூறுகிறார்.

ஸ்ரீ சங்கரனைப் பார்த்து, ஜீவன் பேசுகிறது :

"நீ ஒரு மாயாவி. பலவிதமான மாயையை போக்குபவன் நீ. எல்லாத்தத்துவ ஸ்வரூபத்திற்கும் காரணமானவன் நீ, என்று உன்னை நான் நம்புகிறேன்.

இந்தப் பிரபஞ்சம் யாவும், உன்னை வணங்குகிறது. எல்லாவற்றிற்கும் காரணமான உன்னைக் காணவேண்டும், உன்னைப் பார்த்து வணங்கவேண்டும் என்ற எண்ணம் ஏற்படுகிறது.

இந்தப் பூதஉடலை வைத்துக்கொண்டு உன் ரூபத்தைக் காண இயலாது. ஞானத்தால் மட்டுமே, உன்னை அறிந்துகொள்ள முடியும், எனத்தெரிந்து கொண்டேன். தாய், தந்தை, குரு எல்லாம் நீ ஒருவனே ஆவாய் என்னும் தத்துவத்தில் உன்னை அறிந்துகொண்டேன். உன்னைத்தவிர, நான் வேறு ஒருவர்மீதும் பக்திசெய்யமாட்டேன். எனக்கு நீயே எல்லாம் ஆவாய்.

'சிவலோகம்' என்றால் உன் ரூபத்தைக்குறிக்கும். அகம் என்றால் 'பிரபஞ்சம்' ஆகும். இந்தவிதமான ஐந்து பூதங்களின் ஆதாரத்துடன் நீ உயிர்ப்பிராணிகளை உண்டாக்குகிறாய். அதன் நல்லது கெட்டதிற்கு ஏற்பவும், பாப புண்ணியத்திற்கேற்பவும் நீ அருள் செய்கிறாய்.

நீ, எல்லோரையும் கடைத்தேற்றுபவன், பயத்தைப் போக்குபவன், வேண்டுவனவற்றைக் கொடுத்துக் காப்பவனும் நீயே ஆவாய்.

இந்தநிலை வருவதற்கு நல்ல மனிதர்களின் சேர்க்கை என்பது ஒரு படியாகும். அந்த நிலை என்னும் படி ஏறுவதற்கு ஞானம் என்னும் நூல் ஆதாரமாகும். இதை அறிந்துகொண்டவர்களை நீ, அருள் செய்கிறாய். இந்த ஞானத்தால் 'நான்' 'என்னுடையது' என்பது 'மாயை' என்று அறிந்து கொள்ளலாம்,

வேதத்தின் உட்பொருளாக ஆண்டவன் தோற்றமளிக்கிறார், பஞ்சாட்சர மந்திரத்தின் ரூபமாக சிவன் காணப்படுகிறார், இவர், எந்நேரமும் எல்லோருக்கும் அருள்செய்யவேண்டும்.

ஞானமார்க்கத்தைக் கூறும் நூல்களைத் தினமும் படித்துவரவேண்டும். சிவனுடைய ரூபத்தை மனதில் நினைத்து, தியானம் செய்யவேண்டும். பக்திக்கென்றே ஏற்பட்டது ஞானமார்க்கம். அதன்மூலம், அக்ஞானம் அழிக்கப்படுகிறது. அந்நேரத்தில் சிவபெருமான், "இவர் என்னுடைய பக்தர்" என நினைத்துக் காக்கிறார்.

கோபம், கர்வம் போன்ற குணமும், கெட்டவர்கள் சகவாசமும் கூடாது. எந்நேரமும் நல்ல எண்ணம்கொண்டு, சிறிது ஞானத்தைப் பெற்றாலும், அது அக்ஞானத்தை அழிக்கிறது. பக்திமார்க்கத்திற்கு வழிவகுக்கிறது.

மூன்று உலகமும் வியாபித்து இருப்பவன் நீ. சிவபெருமானே! நீ, மூன்று மூர்த்திகளின் மனதிலும் குடிகொண்டிருக்கிறாய். உன் குணங்களை வர்ணிக்க இயலாது. உன் புகழின் தன்மை, வெண்மை, உன் உருவம், வெண்மை. உன் வாகனமான நந்திதேவரும் வெண்மை நிறம் கொண்டவர். யாவற்றிலும் நீ தூய்மையானவனே.

இந்த உலகத்தில், தரித்திரத்தைக் கொடுத்தவரும் நீரே. அந்தத் தரித்திரத்தை ஞானம் என்னும் அம்பால் போக்குபவரும் நீரே ஆவீர்" (என்றது)

ஜீவன் மேலும் பேசலாகிறது. "உன் உடலில் எல்லா உலகமும் அடங்கி இருக்கிறது. ஆனால் நீ, ஒரே நிலையாக, நிலைத்து நிற்கிறாய். ஆகையால், உன் சரணத்தைக்காண, என் மனது, சுற்றி அலைகிறது.

நான், முதலில் உனக்கும் எனக்கும் உள்ள வித்தியாசத்தைக்கண்டு, அறிந்துகொள்ளவில்லை. தேகத்தினால் மட்டும்தான் பேதம் கண்டுகொண்டேன். ஞானத்தினால் அந்த பேதத்தை அறுத்தெரிந்து, உன்னைத் தெரிந்து கொண்டேன். நீ எந்நேரமும் என்னைக் காத்தருளவேண்டும். தயாளகுணமுடையவனே! என்மீது கருணைகொண்டு, உலக பந்தங்களிலிருந்து விடுபடச் செய்ய, நல்ல புத்தியைக் கொடுப்பாயாக. என்னை நீ, தனித்துவைக்காதே.

என்மீது உள்ள கருணையை நீக்காதே. என்மீது கோபம்கொள்ளாதே என்னைக் காப்பாற்று. நான், காமக்குரோதங்களையும் கர்வம், மோகத்தையும் விட்டு உன்னை உண்மையான அன்புடன் நினைக்கிறேன்.'' (என்றது)

(மனதைப்பார்த்து) ''மனமே! நீ நல்லது கெட்டதை உன் மனதில் நினைத்துப்பார். மனதில் சிவனை எந்நேரமும் நினைத்துக்கொண்டு, சாவதானம் செய்துகொள்வாயாக. வீணான இந்த மாயமான சம்சார வாழ்க்கையிலிருந்து பயத்தைப்போக்கி, பாசத்தை விடுத்து, 'சிவனே என்னைக்காப்பாற்று' என்று வேண்டுவாயாக.'' (என்றது)

''மாயையினால், அறிவற்றவர்கள், பலவிதமாக ஏமாற்றுகிறார்கள். அவர்கள் நட்பு எனக்கு வேண்டாம். என் இரு கையினாலும் உன்னைப் பூசை செய்கிறேன். உன் இரு பாத கமலங்களையும் நினைத்து வலம் வருகிறேன். வாயினால் உன் பெருமைகளை உயர்த்திக்கூறிப் பாடுகிறேன். இவைதான், நான் உன்னை வணங்கும் முறையாகும்.

மனிதன் தான் செய்யும் பாவத்தினால் பாவியாகிறான். தர்மத்தினால் தர்மவானாகிறான். இந்த இரண்டுபேர்களின் தன்மையை அறிந்து, காப்பவனும் நீயே. உலகத்தில் உள்ள எல்லோருக்கும் நீ பலவித எண்ணங்களைத் தோற்றுவிப்பவன். அதன் எல்லாச் செயல்களுக்கும் நீயே காரணபூதமாக விளங்குகிறாய் என நான் நிச்சயமாகத் தெரிந்துகொண்டேன்.'' (என்றது)

'இந்தவிதமாக சிவபெருமானின் தத்துவத்வை அறிந்த நான், எப்படி இந்த உலக வாழ்க்கையில் வாழ நினைப்பேன்.'' என்று ஒருநாள், தன் தந்தை துளஜேந்திர மன்னரிடம் ஏகேந்திரன் ஏகஜமாகப் பேசலானார்.

இவ்விதமாகக் கூறப்பட்ட தத்துவ அத்தியாயம் முடிவுபெற்றது. இதைப் படிப்பவர்களுக்கு, துளஜேந்திர மன்னருக்குப் பிரசன்னமாக விளங்கும் சங்கரன் அருள் செய்வான்.

*

## ராஜபுத்திர நீதி.

துளஜேந்திர மன்னரின் புத்திரர், விஷ்ணும்சம் பொருந்தியவர். ஏகராஜன் ராஜநீதியில் கூறப்பட்ட ராஜபுத்திர நீதியை கூறுகிறார்.

ராஜபுத்திரராக இருக்கவேண்டியவர்களின் யோக்யதை யாதெனில் —

நல்ல குலத்தில்வந்த ராஜகுல ஸ்திரீயின் கர்பத்தில் வந்தவராக இருக்க வேண்டும். சத்யம் பேசுபவனாக இருக்கவேண்டும். நினைத்த காரியத்தைச் செய்துமுடிக்கும் ஆற்றல் உள்ளவனாகவும், தைர்யம் உள்ளவனாகவும், புகழ்

உடையவனுகவும் இருக்கவேண்டும், தெய்வத்தின் கடமைகளைப்போல் நினைத்து தன் தந்தையின் கடமைகளைச் செய்பவனுக இருக்கவேண்டும். தன்னுடைய சுகத்தைப்போல் தந்தையின் சுகத்தையும் நினைப்பவனுகவும், உண்மையான அன்புள்ளவனுக இருக்கவேண்டும். துஷ்டனுக இருக்கக்கூடாது. பேதமில்லாதவனுகவும் பெரியோர்களின் ஆசார அனுஷ்டானத்தை நடத்துபவனுகவும் இருக்கவேண்டும், நல்ல கல்வியைக் கற்றவனுகவும், புத்தி கூர்மையுடனும் இருக்கவேண்டும்.

சிவபூஜையில் சிறந்து விளங்கியும், சதாசாரமுடனும், இதிகாச புராணங்களை படிப்பவனுகவும் இருத்தல் வேண்டும். எல்லாவித பூஜைகளையும் செய்வதில் ஆர்வமுள்ளவனுக இருக்க வேண்டும். பெரியோர்களுடைய சொல்லைக் கேட்பவனுகவும், பிற பெண்களை தன் சகோதரியைப்போல் நினைப்பவனுக இருக்கவேண்டும்,

யானை குதிரை ஏற்றமும், தேரின்மீது அமர்ந்து செல்ல சாமர்த்தியம் உள்ளவனுதவும் இருக்கவேண்டும். அறுபத்தி நான்கு கலைகளையும் அறிந்தவனுகவும் இருக்கவேண்டும். பெரியோர்களை கௌரவித்து மதித்து நடக்கும் குணமுள்ளவனுகவும், தர்மத்தை செய்து பலனை அடைவதிலும், புகழை அடைவதிலும் எண்ணம் உள்ளவனுக இருக்கவேண்டும். எல்லா ஜீவராசிகளிடத்திலும், அன்பு செலுத்துபவனுக இருக்கவேண்டும். இந்த எல்லா குணங்களும் எந்த ராஜபுத்திரனிடத்தில் இருக்கிறதோ அவன் சிறந்தவனுகக் கொள்ளப்படும்.

மிகுந்த புண்ணியம் செய்த பலனுல்தான் ராஜபுத்திரனுக இருக்க பாக்கியம் கிடைக்கிறது. ராஜபுத்திரனுக்கு அவன் தந்தையே பிரத்யக்ஷமான தெய்வமாகும்.

'ராஜபுத்திரன், தந்தையின் எண்ணப்படி செயலைச் செய்தால் எல்லா தர்மங்களும் பலன் அடைகின்றன' என வேதம் கூறுகிறது. ராஜபுத்திரனுனைவனுக்கு இதுதான் தர்மம் என்றும் மனஸ்மிருதியில் பேசப்படுகிறது. மேலும் சில தர்மங்களைப் பற்றியும் விரிவாகக் கூறப்படுகிறது. நல்ல குலத்தில் உதிப்பது ராஜகுமாரனுக்கு சுகத்தைக் கொடுக்கும். அந்த விதமாக பிறக்கும் ராஜபுத்திரனுக்கு ஏற்படும் நல்ல செயலைப்பற்றி இங்கு கூறுகிறேன்.

அதிகாலையில் படுக்கையிலிருந்து எழுந்திருந்து சிவபெருமானை நினைத்து ஸ்துதி செய்ய வேண்டும். தாய் தந்தையரிடம் தனக்கு நீண்ட ஆயுள் ஏற்பட வேண்டுதல் வேண்டும். தினக் கடன்களைக் கழித்து சுத்தமாக ஸ்நானம் செய்து, நெற்றியில் விபூதி இட்டுக்கொண்டு, மனதில் மகாதேவனை ஒரே எண்ணத்துடன் நினைத்து, பஞ்சாட்சர மந்திரத்தை ஜபம், தன் சக்திக்கு ஏற்ப செய்ய வேண்டும். பலவிதமான வாசனை புஷ்பங்களைக் கொண்டு சிவபெருமானை பூஜிக்க வேண்டும்.

ராமாயணம், பாரதம், பாகவதம் மற்றும் பதினெட்டு புராணங்களையும் ஹரிச்சந்திரன் கதையையும் கேட்க வேண்டும். கன்றுடன் கூடிய பசுவை பூஜை செய்ய வேண்டும்.

காலையில் சூரிய நமஸ்காரம் செய்யவேண்டும். பெற்றோரை வணங்கி, அவர்களுடைய உத்திரவின் பேரில் காலை உணவை உண்ணவேண்டும். அதன் பிறகு குதிரை யானை தேர் இவற்றின் மேல் அமர்ந்து, சவாரி செய்து பழக வேண்டும். பிறகு பல நல்ல காவியங்களைப் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டும். நாடகங்களை புதிது புதிதாக இயற்ற வேண்டும். சங்கீத சாஸ்திரத்தை அப்பியாசம் செய்யவேண்டும். அவ்வப்போது உடற்பயிற்சி செய்துகொண்டிருக்க வேண்டும்.

பிற்பகல் தந்தையுடன் கூடி உணவு அருந்த வேண்டும். அவருக்கு பணிவிடைகள் செய்ய வேண்டும். சிறிது நேரம் அவருடன் அமர்ந்து பேசிக் கொண்டிருக்க வேண்டும். தந்தை கூறுகிற புத்திமதிகளைக் கேட்கவேண்டும். மாலையிலும் குதிரை, யானை, ரதம் இவற்றின்மீது ஏறி பயிற்சி செய்து வரவேண்டும்.

இரவு குலவழக்கப்படி தீவட்டி சலாம் செய்த பிறகு பெரியவர்களிடம் அனுமதி பெற்று தன் மாளிகைக்குச் செல்லவேண்டும்.

தன் மாளிகையில் தன் நண்பர்களுடன் பரிகாசத்துடன் விநோதமான விளையாட்டுக்களை விளையாடிக் கொண்டிருக்க வேண்டும். இரவு அதிகநேரம் கண்விழிக்கக் கூடாது. நண்பர்களுடன் மகிழ்ச்சியாக விளையாடிய பிறகு அந்தப்புரத்திற்கு வரவேண்டும். அங்கு தன் ஸ்திரிகளுடன் இனிமையாகப் பேசி சிருங்கார ரசத்துடன் லீலைகள் பல செய்து மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும்.

இனி ராஜபுத்திரர்களின் சாதாரண நீதிகளைக் கூறுகிறேன்.

ராஜபுத்திரர்களுக்கு கெட்ட புத்திமதிகளைக் கூறும் நண்பர்களும் இருக்கிறார்கள். உண்மையுடன் நல்லது கெட்டது அறிந்து கூறுபவர்கள் பெற்றோரே ஆவர்.

பரம்பரையாக வந்த பெரியோர்களுக்கும் பெற்றோர்களுக்கும் தன் கடமைகளைச் செய்யவேண்டும். அவர்கள்தான் நல்ல புத்திமதிகளைக் கூறுவர். எப்படி விநயகர், பார்வதி பரமேஸ்வரர் பூஜைகளைச் செய்கிறோமோ அவ்வித மாக ராஜபுத்திரர்கள் பெற்றோர்கள் கடமைகளைச் செய்யவேண்டும்.

எப்பொழுதும் கெட்ட எண்ணத்தை தவிர்த்து நல்லகுணம் பொருந்திய வனாகவும் இருக்கவேண்டும். 'தந்தையின் எண்ணம் எதுவோ அதுவே தன் எண்ணம்' என்று இருக்க வேண்டும்.

தாயிடம் அமர்ந்து உணவு கொள்ள வேண்டும், தந்தையிடம் நல்ல புத்திமதிகளைக் கேட்டு அறிந்து கொள்ள வேண்டும். மனைவியினிடத்தில் வெற்றிலைப் பாக்கு வாங்கிக்கொள்ள வேண்டும்.

எது செய்வதாக இருந்தபோதிலும் தந்தையின் உத்திரவின்பேரிலேயே செய்யவேண்டும். கெட்ட சவகாசத்தைத் தவிர்த்து, நல்ல சவகாசம் கொள்ள வேண்டும். தன் குலத்தில் இல்லாத செயலை செய்யக்கூடாது. பிற பெண்களைத் தாயைப்போல் பார்க்க வேண்டும், கபம்கட்டக் கூடிய பொருள்களை மருந்துக்குக்கூட உண்ணக்கூடாது.

தந்தை கோபம்கொள்ளும்போது ராஜபுத்திரன் தவருக ஏதும் பேசக்கூடாது. தன்னுல் தவறு ஏதாவது நடந்திருந்தால் அதை உடனே தந்தையிடம் கூறிவிடவேண்டும். தந்தை கூறும் பரிகாரத்தைச் செய்து தன் தவறிலிருந்து தூய்மையானவனுக செய்து கொள்ளவேண்டும்.

தந்தையின் கடமைகளைச் செய்து மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். காவியம் அலங்காரம், புராணம், ராமாயணம் இதிலிருந்து புத்திமதிகளை அறிந்துகொள்ள வேண்டும். அமரகோசத்தைப் படித்து தெரிந்து கொண்டு அதில் ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

தன் மனதில் நினைத்த காரியத்தை சாதிக்க மகாதேவனை பூஜைசெய்து, பஞ்சாட்சர ஜபம் செய்ய வேண்டும.

துளஜ மகாராஜரின் குமாரர் கூறிய புத்திமதிகளையும், நீதிகளையும் கேட்ட மாத்திரத்திலேயே புத்திசாலியாகி மகிழ்ச்சி அடைகிருன்.

புதிய யானை, குதிரை, பல்லக்குகளை பெறவும், வஸ்திரங்கள் போன்ற அலங்கார பொருட்களை அணியவும் பெற்றேர்கள் அனுமதியின் பேரிலேயே செய்யவேண்டும். யாருக்காவது எந்த ஒரு விஷயத்திலும் பேச்சு கொடுப்பதாக இருந்தாலும், தந்தையின் அனுமதியுடன் பேச்சு கொடுக்க வேண்டும்.

பக்கத்திலிருந்து நல்லவர்களாக நடித்து துரோகம் செய்பவர்களுடன் பழக்கம் வைத்துக் கொள்ளக் கூடாது. முரடர்கள், பொய் பேசுபவர்கள், விபசாரம் செய்யும் பெண்கள் இவர்களுடன் பழக்கம் வைத்துக்கொள்ளக் கூடாது.

தந்தைக்கு மகிழ்ச்சி கொடுக்கும்படியாக பழகவேண்டும். நல்ல அறிவுடன் மகிழ்ச்சியாக இருக்கவேண்டும். ராஜபுத்திரர்கள் வேறு வேலைகள் எதையும் செய்யக்கூடாது. பெரியவர்களிடத்திலும், வயதானவர்களிடத்திலும் மரியாதையுடனும், பண்புடனும் பழகவேண்டும். அவர்களை அவமானம் செய்யக்கூடாது. அவர்கள் கையால் உணவு அருந்தக்கூடாது.

விரோதிகளுடன் தொடர்பு வைத்துக்கொள்ளக்கூடாது. உறவினர்கள், தாயாதிகள், நண்பர்கள், இவர்களிடத்தில் மரியாதை குறைவாகப் பழகக்

கூடாது. வயதான அதிகாரிகளிடத்தில் குற்றம் குறைகளைக் காணக்கூடாது. சபையில் அமர்ந்து இருக்கும் சமயத்தில் தந்தையையே பார்த்துக்கொண்டிருக்க வேண்டும். அதிகாரிகளுடன் பேசக்கூடாது. எது பேசுவதாக இருந்தாலும் தந்தையுடன்தான் பேசவேண்டும். தான் செய்யும் பணிகளில் ஏதும் குறைவை காணக்கூடாது. தந்தையின் அனுமதியுடன் தான் செய்யவேண்டிய எல்லா விரதங்களையும் அனுஷ்டிக்க வேண்டும்.

இந்த அத்தியாயத்தைக்கேட்டு துளஜாமகாராஜாவிற்கு ஆயுள்விருத்தி ஆரோக்கிய வாழ்வும் ஏற்படுகிறது. மக்கள் செல்வம், பொருள் செல்வம் பெருகுகிறது. மற்றவர்கள் இந்நூலைப் படிப்பதால் புத்திகூர்மை ஏற்பட்டு தெளிவு அடைகிறது.

இவ்விதமாக ஸ்ரீமத் பிரமஞ்சாமிருதசார ராஜரஞ்சன புராணத்தில் ராஜநீதியை, ராஜா துளஜா மகாராஜரின் மைந்தர் ஏகோஜி இயற்றியது முடிவுற்றது.

✳

## அவிசார ரமணீய கதை.

### ( தீர விசாரிக்காமல் போனதால் ஏற்பட்ட விளைவு )

முன்னொரு காலத்தில் அநங்க நகரமென்னும் ஊரில் அனபிக்ஞன் என்ற பெயருடைய சிற்றரசன் ஆட்சி செய்துவந்தான். அந்நகரத்தின் மக்கள் யாவரும் மன்னன் மனதறிந்து நடந்துவந்தனர்.

ஒருசமயம் அந்நகரத்தில் மயன் என்னும் பெயருடைய ஒரு வண்ணான் வாழ்ந்து வந்தான். அவனுக்கு மக்கள் செல்வம் இல்லை. அதனால் மிகவும் மனம் நொந்து இருந்தான். அவன் ஒரு கழுதைக் குட்டியைக் தன் குழந்தையாக பாவித்து அன்புடன் வளர்த்து வந்தான். அதற்கு 'சிங்கோஜி' என்ற பெயரும் சூட்டி அன்புடன் அழைத்து வந்தான்.

இவ்விதமாக சில நாட்கள் சென்றபிறகு சிங்கோஜி கழுதைக்குட்டிக்கு நோய் பிடித்து அது தன் உயிரைவிட்டது. தான் அன்புடன்வளர்த்த கழுதைக் குட்டி மரணம் எய்தியதைக் கண்டு, வண்ணான் மிகவும் மனம் நொந்து அதை ஆற்றுக் கரைக்கு எடுத்துச் சென்று, ஒரு பள்ளம்தோண்டி அதில்போட்டு மண்ணை மூடினான். ஒரு பெற்ற குழந்தையைப் பறிகொடுத்த சோகத்துடன் மிகவும் துக்கப்பட்டு மனம் வருத்தம்கொண்டான்.

வண்ணான் தன் கழுதைக் குட்டியை நினைத்து துக்கப்பட்டு அழுது கொண்டிருக்கும் சமயத்தில், நகரத்தில் இருக்கும் மன்னனின் சேவகன் மனைவி ஆற்றில் நீர் எடுக்கவந்து, கரையில் துக்கமுடன் அழுதுகொண்டிருக்கும் வண்ணானைப் பார்த்து, தானும் மிகவும் நொந்து அழலானாள். அப்படியே அரண்மனைக்கு செல்லலானாள்.

அரண்மனையில் மன்னரின் ராஜபத்தினியானவள் தன் தோழி துக்கப் படுவதைப் பார்த்து தானும் துக்கப்பட ஆரம்பித்தாள். அரண்மனையில் ராணிகள் அந்தப்புரத்தில் நடந்த விஷயமறிந்து மன்னனும் மிகவும் துக்கம் கொண்டு அழலானான். இதைக்கண்டு அரண்மனையில் உள்ள ஆண் பெண் எல்லோரும் அழலாயினர்.

அதன் பிறகு வாழ்க்கையின் தினசரி கடமைகளை நினைத்து தங்கள் தங்களுக்குள் சமாதானம் செய்துகொண்டு மற்ற வேலைகளைச் செய்ய முற்பட்டனர்.

இந்நிலையில் ஒருநாள் ஒருவஞ்சக எண்ணம் கொண்ட வயதான பெண், ஒரு அழகான யானையின் தந்தங்களைக்கொண்டு அலங்கரித்த பல்லக்கைத் தேர்ந்தெடுத்து, அதில் பலவண்ண பட்டுத்துணிகளை விரித்து அலங்கரித்து, தனக்காக சில வேலைஆட்களை கூலிக்கு அமர்த்திக்கொண்டு, நன்றாகத் தானும் ஆடை அலங்காரங்களை அணிந்துகொண்டு, பல்லக்கில் அமர்ந்து, தன் ஆட்க ளுடன் இந்த அனபிருன் அரண்மனை வாசலில் வந்து வாயில் காப்போனைப் பார்த்து 'நான் மன்னனரின் அத்தை வந்திருக்கிறேன். இதை சீக்கிரமாகச் சென்று மன்னனிடம் கூறுங்கள்' எனக்கூறி, அரண்மனை வாசல் முன் மண்டபத்தில் காத்து இருந்தாள்.

அரண்மனை வாயில் காப்போன், வந்த இந்தப் பெண்ணின் பேச்சைக் கேட்டு, உடனே அரண்மனை உட்சென்று மன்னனிடம் விஷயத்தைக்கூற, மன்னனும் மிக அவசரமாக அரண்மனை வாசலுக்கு வந்து தன்னைப் பார்க்கக் காத்து நிற்கும் பெண்ணைப்பார்த்து ஆர், தாங்கள் என் உறவினர்தான் வாருங்கள் எனக்கூறி அத்தையின் காலில் வீழ்ந்து வணங்கி, தன் அந்தப்புரத் திற்கு அழைத்துச் செல்லுமாறு ராஜசேவகர்களை வினவினான். அதன்படியே சேவகர்கள் அந்தப் பெண்ணை அந்தப்புரம் அழைத்துச் சென்றனர்.

அந்தப்புரத்தில் மன்னரின் அத்தை வந்திருக்கிறார்கள் என எல்லோரும் வந்து கண்டு வணங்கி எல்லாவித மரியாதைகளையும் செய்து கௌரவித்தனர். மேலும் அரண்மனையில் அந்தப்புர பொருப்புகளையும் அவளிடம் ஒப்படைத் தனர்.

இவ்விதமாக பலநாட்கள் சென்ற பிறகு வஞ்சக எண்ணங்கொண்ட ஒருவன் அரண்மனையின் அந்தப்புரத்தில் நடந்த விஷயங்களை தன் கையாட் களைக்கொண்டு தெரிந்துகொண்டான். ஒருநாள் அராபிய குதிரையின்மீது ஏறி தன்னுடன் முரட்டு ஆட்கள் ஐந்து ஆறுபேர்களுடன் அரண்மனைக்கு வந்து வாசலில் இறங்கி, தன் ஆட்களைக்கொண்டு குடை முதலான ராஜமரியாதை களைச் செய்யச்செய்து, முன் மண்டபத்தில் வந்து தங்கினான். இதைக்கண்ட வாசல் காப்பவர்கள் இவனைப் பார்த்து, 'தாங்கள் யார்?' எனக் கேட்டார். அதற்கு வந்தவன் 'நான் மன்னரின் அத்தைப் பையன்' என்று கூறினான். உடனே வாயில்காப்போன் ஒரு ராஜசேவகனுடன் வந்தவனை, மன்னரிடம் அனுப்பிவைத்தான்.

மன்னரிடம் வந்தவனைப் பார்த்து 'மன்னர் நீ யார்?' எனக்கேட்க, 'நான் உங்கள் அத்தை பையன்' எனக் கூறினான். உடனே மன்னர் தன் ராணியின் அத்தைப்பையன் போலும் என நினைத்து, தன் அரண்மனையில் எல்லா அதிகாரங்களையும் அவனுக்குக் கொடுத்து சிறந்தமுறையில் கௌரவித்தான்.

இந்தவிதமாக பலநாட்கள் சென்ற பிறகு அந்த வஞ்சகனால் பல கேடுகள் அரண்மனையில் விளைந்தன. இதை தன் ரகசிய ராஜசேவகர்கள் மூலம் அறிந்துகொண்ட மன்னர் இந்த விபரத்தை அந்தப்புர மக்களுக்கும் தன் ராணிக்கும் தெரியப்படுத்தினான். இதைக்கேட்ட ராணியானவள் 'எனக்கு அத்தைப் பையன் உறவுமுறையில் யாரும் இல்லை. உங்கள் உறவினனாக இருக்கலாம்,' எனக்கூறி அனுப்பினாள்.

இதைக்கேட்ட மன்னர் மிகக்கடுமையாக கோபங்கொண்டு அந்த அத்தைப்பையன் என்று உறவுமுறைக் கூறிக்கொண்டிருக்கும் வஞ்சகனை அழைத்து, 'நீ யார்? உண்மையைக் கூறு' என கேட்க அந்த வஞ்சகன், 'உங்கள் அந்தப்புரத்தில் உங்கள் அத்தை என்று ஒருபெண் இருக்கிறாளே அவள் யார்?' என கேட்கலானான்.

இதை கேட்டு மன்னர், அரண்மனையில் அந்தப்புரத்தில் இருக்கும் அத்தை உறவு கூறிக்கொண்டு வந்த வயதான பெண்ணை வரவழைத்து, அந்தப் பெண்ணைப் பார்த்து 'நீங்கள் யார்?' என கேட்டார். அதற்கு அந்த பெண் சாகசமாக சிரித்துவிட்டு ஒரு வார்த்தை கூறலானாள். 'மன்னா! முதலில் தாங்கள் 'சிங்கோஜி' என்பவர் யார் என விசாரியுங்கள்' என்று கூறலானாள்.

பெண்ணின் பேச்சைக்கேட்ட மன்னர், சேவகர்களை அழைத்து 'சிங்கோஜி' என்பவர் யார் என தெரிந்துகொண்டு வரச்சொன்னார். சேவகர்கள் கேட்டு அறிந்துகொண்டு மன்னரிடம் வந்து மன்னா! 'சிங்கோஜி' என்பது ஒரு கழுதையின் பெயர் எனக்கூறினார்கள். இதை அறிந்துகொண்ட மன்னர், அத்தை பையன், அத்தை என்பவளும் வஞ்சகர்கள், என அறிந்து அவர்களுக்கு தகுந்த தண்டனை கொடுத்தான். தான் சரியாக விசாரிக்காமல் ஒருநாள் துக்கம் கொண்டோமே என வருத்தம் கொண்டு தன் மதியீனத்திற்காக வருந்தினான்.

மன்னன் என்பவன் எதையும் தீர விசாரித்துச் செய்ய வேண்டும். அப்படி செய்யாமல் போனால் பல தொல்லைகள் ஏற்படும்.

பத்தாம் நாள் மற்ற அல்லாக்கள். அரண்மனை விருதுகளான சன்னு சவாரியுடன் புறப்பட்டு. மேளதாளங்கள், வாணவேடிக்கைகள் முழங்க, இந்த இராஜா அல்லா கோயிலுக்கு வந்து, பாத்தியா (வழிபாடு) செய்து, பின்னர் வரலாற்றுச் சிறப்புமிக்க அழகிக்குளம் சென்று, அங்கு அவைகளைப் பிரித்துப் பெட்டியில் வைத்துப் பத்திரப்படுத்தப்படும். அவைகளை எடுத்து வந்து அந்தந்தக் கோயிலில் வைப்பர்.

இராஜா அல்லாவினைப் பதினோராம் நாள், (அழகிக்குளம் செல்லாமல்) இருந்த இடத்திலேயே பிரித்துப் பெட்டியில் வைத்துப் பத்திரப்படுத்தும் வழக்கம் இருந்தது. இன்று, இராஜா அல்லா கோயில் செயல்படவில்லையாயினும், வழக்கம்போல், மற்ற அல்லாக்கள் இந்த இடத்திற்கு வந்து யானையுடனும், மேளக்கச்சேரிகளுடனும், வாண வேடிக்கைகளுடனும் இவ்வாண்டுகூட வந்து சென்றது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

முகமது நபிகள் நாயகம் சல்லல்லாகு அலிவசல்லம் அவர்களின் பேரர்களும், மகள் பாத்திமாவின் மகன்களுமான அசைன், உசைன் ஆகியோர்

இரட்டைக் குழந்தைகளாகப் பிறந்தனர்.[1] அவர்களில், ஒருவர் பச்சைத்துணி போர்த்தப்பட்டும், மற்றவர் சிகப்புத்துணி போர்த்தப்பட்டும் பிறந்தனராம். வளர்ந்து, நபிகள் நாயகத்தினுடைய கொள்கைப்படி நின்று, ஐந்து வேளை தொழுகை முதலானவைகளை நடத்தி வருங்கால், அவர்கட்கு எதிரிகளான, எகுதி சாதியார் பல கொடுமைகளை இழைத்தனர். தொழுகை நடத்திய இடத்தினைத் தீக்கொளுத்தினர். அவர்கள் அத்தீயில், மலரில் நடப்பதுபோல் இறையருளால் நடந்து வந்தனர். அதன் காரணமாக இன்றும், தீமிதி நடைபெறுகிறது.

அவர்கட்குத் தண்ணீரில் விடங்கலந்து அளித்தனராம். அது அவர்கட்குப் பானகம் போல் இருந்ததாம். அதன் நினைவாக தற்போதும், அவர்கள் பானகம் வைத்துப் பாத்தியா ஓதி எல்லோருக்கும் வழங்குவார்கள். பலவிதமான வேடங்களைத் தரித்துக்கொண்டு அவர்களைத் தொழுகை நடத்தவிடாமல் செய்தார்களாம். அதன் நினைவாக இன்றும் பலர், பலவிதமான வேடங்களைத் தரித்து வருவர். அவர்கள், இருவரின் கையை வெட்டி, ஒரு குச்சியில் சொருகி அதற்கு மாலை, துணி அணிவித்துப் பழித்தார்களாம். அதன் நினைவாகத்தான் கைச்சின்னம் வைத்து அல்லா பண்டிகை கொண்டாடுகிறார்கள். புலியை அவர்கள் மீது ஏவினராம். அது பணிந்து திரும்பியதாம். அதன் நினைவாக இன்றும் புலிவேடம் போட்டுக்கொண்டு ஆடுவது வழக்கம். இது, தஞ்சையில் ஒரு அதிசயக் கலை. இவ்வளவையும் சமாளித்த இவர்களின் பண்பினையும், உறுதியினையும் கண்ட எதிரிகளான எகுதியர்கள், பின்னர், இசுலாத்தில் சேர்ந்ததாகக் கூறக் கேட்டிருக்கிறேன்.

நம் தமிழகத்தில், இதனைச் சற்று மகிழ்ச்சியுடனே இந்துக்களும் முகம்மதியர்களும் கொண்டாடுவர். சில இந்துக்கள், பக்தி மிகுதியினால், தங்கள் இடத்திலேயே புதிதாக அல்லா வைத்து, வழிபாடு நடத்தியவர்களும் உண்டு. அவைகள் நடந்துவருவதும் உண்டு. ஆனால் வடநாட்டவர், இதனைத் துக்க நாளாகக் கருதி, ஒரு சிறு இடத்தில் அல்லாவின் (கைச்) சின்னம் வைத்து இரு பக்கமும் ஆண், பெண் இருபாலாரும் அமர்ந்து பட்டினி இருந்து, தமது மார்பில் அடித்துக்கொண்டு அழுவர், ஆண்களின் மார்பகங்களில் இரத்தம் வழிய வழிய வழிபட்டதைக் கண்டிருக்கிறேன். சென்னையில் இதனை மாரடித் திருவிழா என்பார்கள்.

இத்தகு சிறப்பு வாய்ந்த அல்லா பண்டிகையினை இந்துக்கள் கொண்டாடலாகாது என்பதை மறுத்து, இதனைக் கொண்டாட வேண்டும் என்ற கூற்றுக்கு விளக்கம் இவ்வாவணத்தில் உள்ளது. அல்லா பண்டிகை வேண்டாம் என்று கூறும் சிலருக்கு இந்த வரலாறு உண்மை கூறுகின்றது. இவ்

1. இப்போதும், முகம்மதியர்கட்கு இரட்டைக் குழந்தைகளாகப் பிறந்தால் அசைன், உசைன் என்று பெயரிடுவர்.

வழிபாடு இங்கு அவசியம் என்று வலியுறுத்துகின்றது. இப்பண்டிகைக்குப் பலவகையில் அரண்மனையார் உதவி செய்துள்ள செய்திகள் மோடி ஆவணங்களில் பல இடங்களில் காணப்படுகின்றன.

இந்த அல்லா பண்டிகை, எந்த அளவில் செல்வாக்குப் பெற்றிருந்தது என்பதனை கீழ்க்கண்ட சில மோடி ஆவணக் குறிப்புகளில் காணலாம்.

*113—21—2—1776.* 12 அல்லாக்களை செய்வதற்கு தங்கம் பொள்ளல் சக்கரம் 321—3½ பணம்.

| | | |
|---|---|---|
| 2 அல்லாவுக்கு—ஒன்றுக்கு ½ சேர் வீதம் | சேர் 1 | (வெள்ளி) |
| 2 குடைக்கு —ஒன்றுக்கு ¼ சேர் வீதம் | சேர் ½ | ,, |
| விராகன் (எடை) 1க்கு 2½, 1¾, ½ வீதம் வாங்குவதற்கு | சேர் 1½ | ,, |

வெள்ளி அல்லா, தங்க முலாம் வீதம், இதற்கு 10 அல்லாவுக்கு, அல்லா 1க்கு ¼ சேர் வீதம் (வெள்ளி) 2½ சேர். முலாம் செய்வதற்கு தங்கம் ரேக்கு முலாமின் எடை 2 தோலா.

இதற்கு வெள்ளி சேர் 1க்கு 16—4 சக். வீதம் வாங்குவதற்குச் சக்கரம் 41—$\frac{1}{16}$ பணம். முலாமின் ரேக்கு தோலா 1க்கு 10—4 பணம் வீதம் சக்கரம் 20—8 பணம். கூலி 4½ சக்கரம்.

*73—9—2—1822* லகாம் ஹூசைன் அல்லா ஊர்வலம் சுற்றி வருவதற்கு பிருதுகளை வழக்கப்படி கொடுக்கிறது. ஈட்டிக்காரர்கள் 40. யானையின் மேலுள்ள பிருதுகள், மேளம், சங்கீத மேளம், அரபி வாத்தியம், துருப்புக்கள், கோட்டையிலும், அதற்கு வெளியிலும் உள்ள தப்பு, தம்பட்டம் வகையறா நெட்டியால் செய்த மரங்கள் 20.

| | | | |
|---|---|---|---|
| *75—8—1—1841.* | படே ஹூசேனி சாயேப் தர்காவுக்கு | ரூ. | 23 |
| | சர்வர் ஹூசேனி சாயேப் தர்காவுக்கு | ரூ. | 17 |
| 2. | அல்லா பண்டிகைக்காக இராச்சியத்தின் அல்லாவுக்கு (இராஜா அல்லா) | ரூ. | 11 |
| 3. | கமான் ஹூசேனி அல்லாவுக்கு | ரூ. | 11 |
| | பர்சீ ஹூசேனி அல்லாவுக்கு | ரூ | 7 |
| 4. | டால்சாகேப் வகையறா அல்லாக்களுக்கு | ரூ | 64 |

78—6—1—1841 படே உசேனி அல்லாவுக்கு மொகரம் பண்டிகைக்காக கொடியேற்றம், விளக்குக்கு எண்ணெய், சர்பத், கிச்சடி இவைகளுக்காக 10 தினங்களுக்கு 11 சக்கரம்.

78—6—2. அப்தார் (தண்ணீர்ப்பந்தல்) கானாவில் 11 நாளைக்கு அல்லாவுக்கு டாள்சாவுக்கு ரூ. 11. பல்ஸா ரூ. 11. ஹைதர்சா ரூ. 11. அதிஹுசேனி ரூ 11. புஷ்பம் நவபாண்டம் (சட்டிபானை) வகையரு ரூ. 20.

160—1—39—1827. அல்லா பண்டிகைக்காக பானக பூசைக்கு சக்—1.

160—1—70—1827. அல்லா பண்டிகைக்கு பைராகியின் வேஷம் பூண்டவனுக்கு இனும் ரூ. 1. கர்ப்பிணியின் வேஷம் போட்டு உட்கார வைத்தவனுக்கு அப்தார் கானாவில் இனும் ரூ. 5.

160—2—6—1829. டாளஸா என்னும் அல்லா தண்ணீரில் விழப் போகும் குளத்தை (அழகி குளத்தை) வெட்டுவதற்கு மகால் மராமத்து —பழைய சிவகங்கை, தஞ்சாவூர் கோட்டை-அவர்களிடம் 10 சக்கரம் கொடுக்கிறது.

160—2—42—1829. திவான் சாகேப் 4 வீதிகளையும் சுற்றிவந்தபோது அந்தந்த இடத்திலுள்ள அல்லாக்களுக்கு அல்லா பண்டிகைக்காக இனும் கொடுத்தது ரூ 325.

54—1—11—1852. மொகரம் பண்டிகைக்கு அப்தார் கானாவில் (தண்ணீர்ப் பந்தலில்) அல்லாக்களை வைப்பதற்கு சிரணி-புஸ்பம், நவபாண்டம் (சட்டி பானை முதலியன) வகையருக்களை கரீதி செய்வதற்குக் கூட ரூ. 60. ஜிஸ்ஹேறத் 27உ.

59—19—5—1825. அல்லா பண்டிகைக்காக அப்தார் கானாவில் அல்லா வைக்குமிடத்தில், ஹிந்துஸ்தானி சேவை செய்வதற்கு டக்கா (தோல் வாத்தியத்தின்)வின் ஜோடி ஒன்றைத் தயார் செய்ய சக்கரம் 2½.

61—26—3—1859. மனு—மாஜி அலி முகம்மது ஷெரிப், காளயுக்தி வருஷத்தில் எழுதிக்கொடுத்த மனு என்னவென்றால்:

ரா. ஏகோஜி ராஜா சாயேப். பீஜப்பூரிலிருந்து இங்கு வந்தபொழுது அவ்விடமுள்ள பாதஷாஹாவின் உத்தரவுப்படி சில பாதஷாஹிக்குக் கார்கானு (அரசாங்கம்) நடத்துவதற்கு சேவகனுடைய முன்னோரை அவர்களுடன் அனுப்பினர்.

அது முதற்கொண்டு, வருஷம், மாதம், தேதி, மகாலே மகாலின் பெயரும், உத்தியோகத்தின் பெயரும், நம்முடைய முன்னோர்களின் பெயரும்,

அவர்கள் கார்காணுக்களை நடத்திவந்தபடி, மொகரம் அல்லா பண்டிகைக்காக அல்லாக்களை வைப்பதும் சேவகனுடைய முன்னோர் சொல்படி ஷடி பண்டிகையும், குத்பா 2ம் நடந்து வந்தன. (கடிதம் தொடர்கிறது)

67—41—5—1842. சேக் ஹாசன், சேக் ஓசேன் எழுதிக்கொடுத்த மனு.

மொகரம் பண்டிகைக்காக அல்லா வைப்பதற்காக, ரா. யேகோஜி ராஜா சாயேப் அவர்களுடன் கொண்டுவந்த அல்லா வகையறுக்களுக்கு வருஷத்திற்கு 25 சக்கரம் வீதம் கொடுத்து வரப்பட்டது.

... ... ... ... ... ...

அமர்சிங், போகும்போது கொண்டுபோகிறேனென்றதற்கு, சர்க்காரவர்கள் வேண்டாம் என்று, சுப்பராவ் காட்கேயிடம் ஒப்புவித்தார். வருஷத்திற்கு 5 சக்கரமும், பார்சீ உசேனியின் பிருதுகளின்படியும் மொயினும் செய்து கொடுத்து நடத்தி வந்தார்.

மேற்கண்ட ஆவணத்தால், ஏகோஜி மகாராஜா அவர்கள், பீஜப்பூரிலிருந்து இங்கு வந்தபொழுது அல்லாக்களையும் கொண்டுவந்தார் என்ற செய்தியினால், மூல ஆவணத்தில் குறிக்கப்பட்ட செய்தி உண்மையாகிறது. இவ்வாறு தஞ்சையில் அல்லா பண்டிகை வந்த செய்தி நமக்குப் புலனாகிறது.

மோடி மூட்டையில் 783—1—122—18 என்ற எண்ணுள்ள கடிதம் அமர்சிங் காலத்தியது. அதில் கூறப்படும் செய்தியாவது:—

மேஸ்தர் மக்லோட் அவர்களிடம் ரைட்டர் வேலை செய்யும் சுப்பராவ் அவர்கள் எழுதிக்கொடுத்த காகிதம்.

மேஸ்தர் மஞ்கூர் அவர்கள், சர்க்காரிலிருந்து ராஜஸ்ரீ சரபோஜி மகாராஜா சாயேப் அவர்களுடைய அலவன்ஸ் வாங்கி தனது சொந்த செலவு செய்துகொண்டு, அவருக்கு சேர்ப்பிக்கவில்லை, என்பது நமக்குத் தெரிய வந்தது.

பிறகு மகாராஜா சாயேப் அவர்கள் கவர்ன்மெண்டுக்கு எழுதியனுப்பினார். உடனே 'மேஸ்தர் துரியன் வருகிறார்' என்ற சமாசாரம் தெரிந்தது. பிறகு மேஸ்தர் மக்லோட் துவிபாஷி ராயல் ஐயங்கார் ஸ்ரீனிவாச ஷேஷோ, உர்ப் அப்புராவ், சாவுகார் ஷேஷோபா இந்த மூன்று பேரும் போய், 'பணம் வந்து சேர்ந்தது' என்று மேஸ்தர் துரியனுக்கு சொல்ல வேணுமென்று ராஜஸ்ரீ சரபோஜி மகாராஜா சாகேப் அவர்கள் காரியஸ்தர் ராஜஸ்ரீ தத்தோஜியப்பாவுக்குச் சொன்னதற்கு, 'அது நிச்சயமாக முடியாது; பொய் எப்படிச்

சொல்லுகிறது' என்றூர் என்று கேள்விப்பட்டேன். பிறகு, உடனே மேஸ்தர் துரியன் வந்து சேர்ந்தார். அதன் பிறகு அப்புராவ் அவர்கள் 988 வராகன் கொண்டுவந்து இரண்டு தடவையாகச் சேர்ப்பித்தார். பாக்கி ஐவேஜி, மேஸ்தர் மக்லொட் பட்டணத்துக்குப் போகும் வரையிலும், ராஜஸ்ரீ சரபோஜி ராஜாவுக்கு சேர்ப்பிக்கவில்லை. இந்த சமாசாரம் நமக்கு நிச்சய மாகத் தெரியவந்தது. இப்படிக்கு எழுதிக்கொடுத்த காகிதம்.

கையெழுத்து. இசாஹி 26—3—1799

இவ்வாவணத்தால், மன்னர் சரபோஜியை ஏமாற்றி, மேஸ்தர் மக்லோட், பணத்தை ஏப்பமிட்டார் என்பது தெரிகின்றது.

இச்செய்திக்கு அனுசரணையாக, எண். 912—71—29—20. 7. 1796. மக்லோட்டின் அந்தரங்கத்தை அறிய பச்சமால் ஷேஷோ பண்டிதர் முயலுகிற விஷயம், என்றும், எண். 912—72—மக்லோட்டின் அந்தரங்கம் பற்றியது என்றும், எண். 912—73—மக்லோட்டை பிசகு செய்தாரென்று சென்னைக்கு அழைத்த செய்தி என்றும் காணப்படுகின்றன. அதே நேரத்தில், எண். 912—68—23 மாமாசாகேப், தன்னை அநேக விதமாக ரக்ஷித்தாரென்று சரபோஜி ராஜா சொன்ன விஷயம் என்ற ஒரு கடிதமும் பிறவும் காணப்படுகின்றன.

இவற்றில் காணப்பட்ட, ராஜஸ்ரீ தத்தோஜியப்பா என்பவரின் பெயரால், இன்று, கீழவீதியையும், கீழவாயிலையும் அடுத்து அவர் நினைவாக 'தத்தோஜியப்பா சந்து' என்ற ஒரு சந்தும், மாமா சாகேப் பெயரால், அவர் நினைவாகக் கீழவீதியும், தெற்கு வீதியும் கூடும் மூலைக்கு "மாமா சாகேப் மூலை" என்றும், இன்றும் உள்ளன.

இதனைத் தொடர்ந்து மற்றொரு ஆவணத்தில் கீழ்க்கண்டவாறு காணப் படுகிறது.

நகல்

| | |
|---|---|
| ராஜஸ்ரீ மகாராஜா | மேஜர் ஜெனரல் சர் |
| அமர்சிம்ஹஜி ராஜா | ஆர்ச்சுபால்டு கேமல் பஹதர் |
| சலாம் | கவர்னர் சென்னைப்பட்டணம் வகையரு |

முத்திரை (இந்துஸ்தானி) தம் அபாமலஹு

அமாரத், வ, அயாலத், மரத்தப், தஷாஹா மதவ அலீமஞ்சீலத்

•இப்பொழுது இங்கிருந்த க்ஷேமத்தைக்கண்டு, குத்கையேரியத் ஹமேஷா கலிகீசெய்து,. தில் ஆராம் (ஆராம்—சௌக்கியம்) செய்ய வேண்டி யது. இனிமேல் எங்கள் மூத்த சகோதரர், மகாராஜா துளஜா ராஜா சாகேப்

கைலேயடைந்த பிறகு, நீங்கள் எங்கள்மேல் தயைசெய்து 1787 பிப்ரவரி 4-ம் தேதியில் எங்கள் பேருக்கு கடுதாசியும், ஒரு பையும் அனுப்பினது, மேஸ்தர் அலெக்சாண்டர் மக்லோட் ரிஜண்ட் அவர்களின் நிலைமை நமக்குத் தெரிந்து பத்திரத்தில் உள்ளதை மனதுக்கு வாங்கி, உங்கள் அபிமானம், எங்களிடத்தில் அதிகமாயிருக்கிறதென்றெண்ணி மிகவும் சந்தோஷப்பட்டோம். அவர் இறந்ததுபற்றி மிகவும் விசனமாக யிருக்கிறதாக எழுதினதை(ப்பார்த்தோம்). நீங்களும் சமஸ்தான அபிமானியும், ஆப்த சினேகமுமாயிருப்பதால், அதிக விசனம் இருக்கும். என்ன செய்வது! எந்த சமயத்தில் ஏதாகுமோ, அது ஆகவேண்டியதுதான்.

தங்களிடத்திலிருந்து கடிதம் வந்ததும், எனக்கு எல்லாம் நிச்சய மாயிற்று. நீங்கள் கீர்த்திமான். உண்மை பேசித் தருமம் செய்கிறவர். எனது மூத்த சகோதரரின் ஆப்த சிநேகிதர் ஆதலினாலே நாங்கள், உங்களை மூத்த சகோதரன் என்றே நினைத்து, எப்போதும் உங்களுடைய தயையை விரும்புகிறோம். எங்களுக்கு நீங்களே மூத்த சகோதரன் ஆனதினால், எந்த விஷயத்தையும், ஒரு விதமான விசனமுமின்றி, எங்கள் சமஸ்தானத்தை நிலை நாட்டுவதற்கு உங்கள் மேல் பாரத்தைப்போட்டு, உங்களையே நம்பி, நிர் விசாரமாக இருக்கிறோம்.

எப்போதும் விசனமாயிருக்கிறோம். ஏனென்றால், இந்த ராச்சியம் நிரந்தரமாக இருக்கவேண்டும். அதிலிருந்து, நாங்கள், சம்சார சகிதமாய் சுகமாயிருந்தால், ஆங்கில மன்னர் உள்பட எல்லோரும் மகிழ்ச்சியடைவார்கள். உங்களுக்கும் கீர்த்தி வரும், நாங்களும் ஆங்கிலேயருடைய ஆளுகை நிழலின் கீழ் கீர்த்தி சம்பாதித்து சுகமாயிருப்போம்.

எங்களுடைய மூத்த சகோதரருடையவும் எங்களுடையவும் ஆகிய ஆப்த சிநேகாபிமானியாயிருப்பதால், நாங்கள் மனப்பூர்வமாக நிர்வஞ்சனை யாக எங்களுடைய மனோபாவத்தை வெளிப்படையாகச் சொல்லுகிறோம். அது என்னவென்றால்:

நாங்கள், பிரதாபசிம்ம மகாராஜருடைய புத்திரர்கள். எங்களுடைய மூத்த சகோதரர், துளஜா மகாராஜா, புத்திரனில்லாமல் சிவகதியடைந்ததால் அந்தப் பதவிக்கும், அதிகாரத்துக்கும் நாங்கள்தான் பாத்தியப்பட்டவர்கள். துளஜா ராஜாவைப்போலவே, நாங்களும் இருக்கவேண்டும். அவருடைய புத்திர சுவீகாரம் என்னுடைய புத்திர சுவீகாரமே. துளஜாராஜா இறக்கும் போது, சரபோஜி ராஜாவை எங்களிடம் ஒப்புவித்து, 'குழந்தையை சம்ரக்ஷணம் செய்து, ராஜ்யதந்திரம் முழுதும் நீங்களே செய்து, ஆங்கிலேயரை நம்பி, சுகமாக இராஜ்ஜியபாரம் செய்துகொண்டு, புத்திமதி சொல்லி, பாது

காப்புச் செய்யுங்கள்' என்று சொன்ன செய்திகளை மன்னரே உங்களுக்குத் தெரிவித்தது, யாவருக்கும், உங்களுக்கும் தெரிந்த செய்தியே. உங்களுக்கும் முன்பே எழுதியிருக்கிறார்கள்.

உங்களுக்கே எல்லா அதிகாரமும் இருப்பதால், உங்கள் தயவினால், நாங்கள் அரசாட்சி செய்து வருகிறோம். எங்களுடைய மூத்த சகோதரர்கள், தங்களிடம் எப்படி நடந்தார்களோ, அப்படியே நாங்களும் நடந்துகொள்ளுகிறோம். இதற்கு சந்தேகமில்லை.

மூத்த சகோதரருடைய மனோபாவத்தின்படி ஷெ சரபோஜி எங்களுடைய புத்திரன். எல்லா ராஜ்ஜிய தந்திரமும் அவருக்குக் கற்றுக் கொடுக்கிறோம். எங்களுடைய மூத்த சகோதரர், கடைசி காலத்தில் சொன்ன பிரகாரம் ராஜ்ய பாரத்துக்கு அருகதை உள்ளவர்களாகி, எல்லாவற்றையும் சம்ரக்ஷணம் செய்யும்படியாகவும், உங்கள் தயவினால் நடந்தது.

இந்தப் பிரபஞ்சத்தில் (நீங்கள்) கீர்த்திக்குப் பாத்திரராவீர்கள். கடவுள், உங்களிடம் எங்களை ஒப்புவித்திருக்கிறார். உங்கள் தயவுக்கு நாங்கள் பாத்திரமாக இருக்கிறோம். உங்கள் சித்தத்துக்கு எது சரியென்று படுகிறதோ அதைச் செய்யவும். நாங்கள் உங்கள் கனிஷ்ட பந்துவாகையால், உங்களுக்கு வேறு என்ன எழுத இடமிருக்கிறது. பாக்கி விஷயத்துக்கு, வக்கீல் தம்பக (த்ரையம்பக) ஸம்பாதி சொல்லுவார். விசேடம் என்ன எழுதுவது.

இவ்வாறுள்ள இந்த ஆவணத்தினால் மன்னர் அமர்சிங்கின் குணாதிசயங்கள் புலப்படுகின்றன. இவரது காலத்தில் தேசம் முழுவதும் நாகப்ப செட்டியிடம் அடமானம் வைக்கப்பட்டிருக்கிறது *(912—25—14—41—24. 2. 1795)* என்ற ஒரு குறிப்பு காணப்படுகிறது. இதே சமயத்தில், *(912—37—14—79)* "வில்லியம் கேடர்ஸ் கவர்னருக்கு சரபோஜி II ராஜாவின் தாயார் எழுதிய கடிதம்—அமர்சிங்கு, ராஜ்யத்தை அபகரித்துக்கொண்டு சரபோஜி வகையறுவைக் கொன்றுவிட முயற்சித்தார்", என்ற செய்தியும் காணப்படுகிறது. *(912—69 & 70)* அமர்சிங்கிடம் ராஜி பேசுவதாக சரபோஜிக்குத் தோன்றின விஷயம், என்பது ஒன்றும் இருக்கிறது.

மன்னர் அமர்சிங் இராமேசுவர யாத்திரையை மேற்கொண்டார் என்பது சில ஆவணங்களில் காணப்படுகிறது. அவற்றுள், *(912—80)* "அமர்சிங்கு பட்டுக்கோட்டை முதல் இராமேசுவரம் வரையில் ஒவ்வொரு முகாமிலும் நல்ல மழை பெய்து உபத்திரவமானது" என்றுளது.

*(912—79)* அமர்சிங்கு வெள்ளி துலாபாரம் செய்த விஷயம் (இருக்கிறது) சர்கேல் துணிமணிகளையும் 5 வித (பஞ்ச) லோகங்களையும் வைத்து துலாபாரம் செய்த விஷயம்—விபரம் ஒன்று காணப்படுகின்றது.

கும்பகோணத்தில் மகாமகக் குளத்தில் வடகரையில் துலாபார மண்டபம் என்ற ஒன்று இன்றும் உள்ளது. அதில் பலர் துலாபாரம் செய்துள்ளனர். ஒரு பெரிய தராசினை மேலே தொங்கவிட்டு, அதன் ஒரு தட்டில் தான் ஏறி நின்று, மற்றொரு தட்டில் தான் விரும்பிய பொருட்களை வைத்து, அவற்றை ஏழைகட்கும் அந்தணர்கட்கும் கொடுப்பது துலாபாரமாம். குருவாயூரில், கோயிலில் வாழைப்பழங்களையும் பிறபொருள்களையும் வைத்து இவ்வாறு துலாபாரம் செய்வது இன்றும் வழக்கத்தில் இருக்கிறது.

அவ்வாறு, மன்னர் அமர்சிங் தன் எடைக்குத் தக, வெள்ளியை வைத்து அதனைத் தானம் செய்திருக்கின்றார். இவரது (மந்திரி) சர்க்கேல், துணிமணிகளையும், பஞ்சலோகங்களையும் வைத்துத் துலாபாரம் ஏறித் தானம் செய்துள்ளார் என்பது இதனால் அறியமுடிகிறது. மன்னர் இரண்டாம் சரபோஜி 1798-ல் பட்டத்திற்கு வந்ததும், இவருக்குத் திருவிடைமருதூரைக் கொடுத்து அங்குள்ள அரண்மனையில் தங்கச் செய்தனர். அந்த அரண்மனை தற்போது வேறு ஒருவர் வசமிருப்பினும் காணக்கிடைக்கிறது. இவரது சமாதியும், அரண்மனைக்கு வடக்கே இருக்கிறது. (சுரம்) நோய்வாய்ப்பட்ட, அவ்வூர் மக்கள், 'இச்சமாதியில் வேண்டிக்கொண்டால் குணமாகிறது' என்று கூறுகின்றனர்.

மோடி ஆவணங்களின் மற்றும் பல செய்திகளால், மன்னர் அமர்சிங், மக்களால் பெரிதும் மதிக்கப்பட்டவர் என்றும், மக்களுக்கு நன்மைகள் பல செய்துள்ளார் என்பதும் தெரியவருகின்றது. ஒரு சாரார், 'அவர் பொல்லாதவர்' என்ற குற்றச்சாட்டைச் சுமத்துகின்றனர்.

அமர்சிங்கை மன்னராக்கி, அதிகாரம் முழுவதும்தாம் கைப்பற்ற வேண்டும் என்று எண்ணிய கும்பினியார், 'சரபோஜியின் சுவீகாரம் செல்லாது' என்று 12 பண்டிதர்களைக் கூறச்செய்தனர். அவர்களும் அப்படியே சொன்னார்கள். பின்னர் பொய் கூறியதாகச் சொன்னார்கள். சரபோஜியும் அவரைச் சார்ந்தவர்களும், அமர்சிங்தான் நம்மை ஏமாற்றி, கும்பினியாரின் உதவியினால் தம் இராச்சியத்தினை அபகரித்துக்கொண்டார் என்று எண்ணினர். அந்த எண்ணம் வளர்ந்து, விரோதமாகியது. அதனைப் பயன்படுத்திக் கொண்ட கும்பினியார் மீண்டும் தொல்லைகளைத் தந்தனர். இதுவே இதன் அடிப்படைக் காரணமாகும். அல்லன அகற்றி, நல்லன கொள்வதே பண்பு.

## ஆவண எண். 48

ஸ்ரீ மகராசா சாயேபு அவர்கள் திவானத்துக்கு வலம்புறியிலிருக்கும் சாமி சிறுங்கு மகன் ராமசாமி ஞயக்கன் யெழுதிக் குடுத்த யாதி

யென்னவென்றால் ஸ்ரீ ப்றத்தாபசிங் மகாராசா சாயேபு அவற்கள் பட்டத்திலே நடந்த காரியங்களெல்லாம் யென் தகப்பனார் சொல்லி கேழ்வி. ஸ்ரீ துளசி மகாராசா சாயேபு அவர்கள் பட்டத்திலே ராமநாதபுறம் மரத்தியின் பேரில் சண்டைக்கி போரது யென் தகப்பனார் சாமி சிறுங்கும் 33 சனமும், வீறலெட்சுமி விசை(ய) லெட்சுமி யெங்குற பீறங்கியை யிழுத்துக்கொண்டு போயி சண்டைக்கு போனோம். மருபடி தஞ்ச நகரம் வந்து சேர்ந்தார்கள். மதார்மல்க் வந்து கோட்டையைப் பிடிச்சான். பிக்கட்டு துரை வந்து ஸ்ரீ மகராசா சாயேபு அவற்களுக்கு பட்டங்கட்டி வைத்தார். மகராசாவே கோட்டை அலங்கிரதமில்லே. மாட்டியன் துரையை சென்ன பட்டணம் போய் அனுப்பிவிக்கிறேன் யென்று போனார். மருபடி மாட்டியன் துரை வந்தார். அவர் பாரிசம் யெங்கள் தகப்பனார் சாமிசிறுங்கையும், 33 சனத்தையும் மாட்டியன் துறை வசமாக ஒப்புவித்தார். கோட்டையுங் கட்டி முகிந்துது. அயிதர் வந்தவன் பெரிய அணைக்கரையை வெட்டி கவுழ்த்து விட்டான். ஸ்ரீ துளசி மகாராசா சாயேபு அவர்கள் யெங்கள் தகப்பனார் சாமிசிறுங்கை அழைப்பிவிச்சு உனக்கு யென்ன தேவையாச்சோ அதுகள் யெல்லாம் வாங்கிக்கொண்டு அணைக்கரையை அடைச்சுப்போட்டு வரவேணுமென்று உத்திறவு பண்ணினார். அறமணையில் 12 யானையும் சிலவுக்கும் வாங்கிக்கொண்டு 33 சனத்தோடே அணைக்கரைக்கி போயி உடப்பிலே யானைகளை நிறுத்தி அதின் சந்திலே முளைகளை நிருத்தி ஆதரவு உண்டாக்கி, அக்கரையிலே மண் யெடுக்க போனத்துக்கு கிராமத்தான் தகரார் பண்ணினான். திருச்சிறாப்பள்ளிக்கி போயி, லாட் சாயபு டீபு சாயபு[1] அவாளிடத்தில் போயி, தண்க்கா வாங்கிக்கொண்டு வந்து கிறுமத்தாருக்கு கொடுத்து, மண்வெட்டிப் போட்டு, அடைச்சுப்போட்டு தஞ்ச நகரம் வந்து சேர்ந்தோம். ஸ்ரீ அமறசிங் மகாராசா சாயேபு அவற்கள் பட்டத்தில் அவ்விதமாகவே நடத்திக் கொண்டு வந்தார்கள். ஸ்ரீ சர்போஜி மகராசா சாயபு அவற்கள் சென்னபட்டணம் போய் பட்டம் பெற்றுக்கொண்டு தஞ்ச நகரம் வந்து பட்டத்திலிருக்கும் போது, அடியென் பேறால் யென் தகப்பன் அசாமியை யென் பெறுக்குபண்ணி வைத்தார்கள். நானும் ஊமையன் சண்டைக்கி போயிருந்தேன். ஸ்ரீ சர்போஜி மகராசா சாயேபு அவற்கள் சாளுவ நாயக்கன் பட்டணத்துக்குசவாறி போயி, போட்டுலேறி விழை(ளை)யாடு(ம்)போது, ஒரு ராத்திரி பிசலிலே[2] ஸ்ரீ மகராசா சாயேபு அவற்களும் கிலேதார், பவுசுதார், வங்காளி சிறுங்கும், அதுக்கு நேமணக்கா யிருக்குற யென்னையும் இயாட்பாணம்[3] கொண்டுபோய்விட்டுது. மருநாள் இயாட்பாணம் விட்டு ய (10) தாசுக்கு சாளுவநாயக்கன் பட்டணம் வந்து சேர்ந்தோம். ஸ்ரீ அன்னதாதா பிறந்த அண்டைக்கி ௱உக (121) பீறங்கி சுட்டது நான்தான். சாமளி கப்பறுவு, அன்னதாதாவை தோளில் வைத்துக்கொண்டு, மாடியின் பேரில் வைத்துக்கொண்டு ரேற்க்கிலா சுட்டு வேடிக்கைக் காண்பித்தவன் நான்தான்.

---

1 திப்பு. 2 புயல். 3 இலங்கை.

யென் மகனுக்கு கலியாணம் செய்ய அறமனையாற் உத்திறவுப் படிக்கி போய் இருந்தேன். போனவிடத்தில் கவ வாதசுரம் வந்து வெகு அவஸ்தைப் பட்டு தஞ்ச நகரம் வந்து சேர்ந்து, கார்க்கோனே, சேவுகத்துக்கு போக வேணு மென்று கேட்டதர்க்கு, அறமனையாற் உத்திரவுப்படிக்கி போக வேணுமென்று சொன்னார். நான் சீக்காயிருக்கிறது யென்று யென்று வெகு கடுதாசிகள் யெழுதினேன். அதை அறமனையார்க்கு தெரியாதபடிக்கி போனார்கள். அன்று முதல் நாளது வரையில் அலைந்து திரிகிறேன். யேழையாகிய யென்பேரில் அறமனையாற் அவற்களுக்கு இறக்கமில்லை.

ஆகையால் கோடானகோடி ஜீவாத்துமாவை ரெட்சிக்கப்பட்ட அன்ன தாதாவே யென் கூட 5 பேர் ரூவும் பட்டணி பகலும் பட்டனியாக யிறந்து போரதாக யிருக்குது. யேழையாகிய யென்பேறில் இறக்கம் வைத்து, என் அசாமியை எனக்குக் கொடுக்கவும். அதுவரையில் தற்காலம் சீவனம் பண்ணும் படியர்க, சில சத்திரத்தில் உலுப்பை செய்து காப்பாத்த உத்திரவு செயிதால், இந்த விர்த்தாப்பியமான காலத்தில், வாங்கி சாப்பிட்டுக்கொண்டு ஸ்ரீ அன்ன தாதாவுக்கு புத்திற சம்பத்து உண்டாக வேணுமென்று வெகு தெய்வங்களை துதி பண்ணிக்கொண்டு வருகிறோம். அன்னதாதா வயத்திலே பருத்தாபசிங் மகாறாசா சாயேபு வந்து பிறக்கப் போறார். யென் கையாலே ௱உக (121) வேட்டு போடக் காத்துக்கொண்டுயிருக்கிறேன். இந்த உபகாறத்தை யேழையாகிய எனக்கு செய்யவேணுமென்று ஸ்ரீ மகராசா சாயேபு அவற்கள் பாதத்தி(ல்) தெண்டனாக விழுந்து கிடக்கிறேன்.

| | |
|---|---|
| ஆனந்த வருஷம் ஆனி-மீ 29௳ | சாமிசிரூங் மகன், ரூமசாமிநாயக்கன் |

இவ்வாவணமும் ஒரு நல்ல செய்தியினைக் கூறுகின்றது. வலம்புரி எனும் சிற்றூர் தஞ்சைக்கு வடக்கே 2 கிலோமீட்டர் தொலைவிலுள்ளது. கடல்வாழ் உயிரினங்களில் முத்துபோல விலையுயர்ந்தது வலம்புரிச் சங்கம். எனவே, குறிப்பிடப்பட்டுள்ள சிராங்கு முதலானவர்கள் இங்கு வசித்திருக்கிறார்கள். அதனால் இச்சிற்றூருக்கு 'வலம்புரி' என்று பெயரிட்டிருப்பார்களோ?—அறியக்கூடவில்லை.

இதில், மன்னர் பிரதாபசிம்மர் (1741—1764) காலத்தில் நடந்தது; துளஜா மகாராஜா (1765—1787) காலத்தில் நடந்தது; அதன் பின்னர், அமர்சிம்ம மன்னர் (1788—1799) காலத்தில் நடந்தது; மன்னர் சரபோஜி II (1799—1832) காலத்தில் நடந்தது முதலான செய்திகள் பேசப்படுகின்றன.

இதில், இராமநாதபுரத்துக்கும் தஞ்சைக்கும் பகைமை இருந்து வந்த செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. அதிராம்பட்டண வியாபாரிகள் கொழும்பிற்குச் சென்று, கொட்டைப்பாக்கை ஏற்றித் திரும்பிவரும்போது, இராமநாத

புரத்தார் அதனை மடக்கிக் காவலில் வைப்பது முதலான செயல்களால் பகைமை மிகுந்து வந்தது. துளஜா மகாராஜாவின் காலத்தில், சாமி சிராங்கு த்லைமையில் 33 பேர்களுடனும், வீரலெட்சுமி, விசயலட்சுமி எனப்படும் இரண்டு பீரங்கிகளுடனும் சென்று (வெற்றிபெற்று) வந்துள்ளனர்.

தஞ்சைக்குச் சொந்தமாக இருந்த கப்பல்களுக்கு, பிரகதீசுவரர், பிரசாத் என்று பெயரிட்டிருந்ததுபோல, இப்பீரங்கிகளுக்கும் வீரலட்சுமி, விஜய லெட்சுமி என்று பெயர்கள் இட்டிருக்கின்றனர்.

முகம்மது அலியின் இரண்டாவது மகனின் பெயர் 'மதார் முல்க்' என்பது. அவன் வந்து கோட்டையைப் பிடிச்சான் என்றுளதால், தஞ்சைக் கோட்டை, அப்போது நவாப்பினால் கைப்பற்றப்பட்ட செய்தி இதனாலும் தெரிகிறது. துளஜா மன்னர் கும்பினியாரின் துணைகொண்டு, இரண்டாண்டு கள் கழித்து மீண்டும் பெற்று அரியணையேறினார். இதற்குத் துணை நின்றவர் லார்டு பிக்கட் துரையாவர். அவர் சென்னை சென்று, மார்ட்டின் துரையை அனுப்பினார். அரண்மனை முதலானவைகள் பழுது பார்க்கப்பட்டுள்ளன.

பின்னர், ஹைதரின் படையெடுப்பால் அணைக்கரை உடைக்கப் பட்டுளது. அப்போது, முன்பு, இராமநாதபுரம் வெற்றிகொண்ட வீரர்கள் 33-வருடனும், 12 யானைகளுடனும், சாமி சிருங்கு சென்றிருக்கிறார்.

இதில், ஒரு அணை உடைந்தால், அதனை எப்படி மறுபடியும் கட்ட வேண்டும் எனும் நுணுக்கம் பெறப்படுகிறது. உடைப்பில் யானைகளை நிறுத்தி அவைகளுக்கிடையில் முளையடித்து, மூங்கில்களை வைத்துக் கட்டி, மண்ணை வெட்டிப்போட்டு, அணை உயர உயர, யானைகளை அப்புறப்படுத்தியிருக்கின் றனர். மண் வெட்டும்போது கிராமத்தார்கள் எதிர்ப்பு. பின்னர், திப்பு சாயபு அவர்களின் உத்தரவின்பேரில் அணை கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதில், இந்த மனுதார் பங்கேற்றுள்ளார்.

பின்னர், அமர்சிங் மகாராஜா அவர்கள் காலத்திலும் இம்மனுதார் இருந்து இருக்கிறார். பின்னர் சென்னை, கும்பினியார் (சுவார்ச்சு பாதிரியார்) மூலம் சரபோஜி மன்னர் பட்டம் பெற்ற பிறகு, இரைது தகப்பனார் வேலை இவருக்குக் கிட்டியுள்ளது. இவர் ஊமையன் சண்டைக்குப் போனேன் என்று குறிப்பிடுகிறார்.

அடுத்த செய்தி சுவையானது. மன்னர் சரபோஜி, சாளுவ நாயக்கன் பட்டணத்தின் கடற்கரையிலிருந்து படகிலேறி விளையாடும்போது புயல் வந் தது. படகினைக்கொண்டு இலங்கையில் உள்ள யாழ்ப்பாணத்தில் சேர்த்து

விடவே, மறுநாள் 10 மணி (தாசு)க்குச் சாளுவநாயக்கன் பட்டணம் வந்து சேர்ந்துள்ளார்கள்; என்ற செய்தியாகும்.

இவர், தான், 121 குண்டுகள் போட்டதனையும், ரேக்கிலா சுட்டு விளையாட்டுக் காட்டியதனையும் குறிப்பிடுகிறார். ரேக்லா என்பது, ஒரு சிறிய குதிரை பூட்டிய, ஒருவரே அமர்ந்து செல்லத்தக்க சிறிய பலகையுடன், இரண்டு சிறிய சக்கரங்களுடன் கூடியது. இதன் போட்டியான ரேக்லா பந்தயம் இங்கு மிகச் சிறப்பான ஒரு வீர விளையாட்டு. கடிதத்தில், 'மாடியில் வைத்துக் கொண்டு ரேற்க்கிலா சுட்டு விளையாட்டுக் காட்டினேன்' என்று கூறுகிறார். பொருத்தமாக இருப்பதாகத் தெரியவில்லை. எனவே அது, 'மடியில் வைத்துக்கொண்டு ரேக்கிலா விட்டு விளையாட்டுக் காட்டினேன்' எனில் பொருத்தமாக அமையும்.

இக்கடிதம், ஆனந்த ஆண்டு ஆனித்திங்கள் 29-ம் நாளுக்குச் சரியாக 17—7—1854ல் எழுதப்பட்டுளது. இது, மன்னர் சிவாஜியின் (1833—1855) காலமாகும். மெல்லிய, இயந்திரத்தினால் செய்யப்பட்ட காகிதத்தில் எழுதப்பட்டுள்ள இக்காகிதத்தில், Bath என்ற எழுத்துக்கள் பொறித்த புடைப்பு முத்திரை உள்ளது. இதில் குறிப்பிட்ட 'அன்னதாதா' சிவாஜி மன்னராக இருத்தல் வேண்டும். ஆனால், அக்காலத்தில் 'அன்னதாதா' என்று அமர்சிங் மன்னருக்குப் பட்டம் இருந்திருக்கிறது. அநேக, அன்னசத்திரங்களை அவர் கட்டியதால் அவருக்கு அப்பட்டப்பெயர் வந்தது என்பர். அமர்சிங்குக்கு பிரதாப சிம்மன் என்ற மகனும் இருந்திருக்கிறான் என்பது, சங்கீத சம்பிரதாயப் பிரதர்சனி என்ற நூலால் அறியக்கிடைக்கிறது. கடிதத்தில்

To

His Highness Maha Rajah

Sivajee Maha Rajah Saib

Thanjavur

என்றுளது. எனவே, இவர் குறிப்பிட்ட அன்னதாதா சிவாஜி மகாராஜாவே என்பது பெறப்படுகிறது.

இம்மனுதார், இராமசாமி நாயக்கன், தன்மகன் கலியாணத்துக்காக அனுமதியுடன் விடுப்பில் சென்றிருக்கிறார். அந்த நாட்களில் இவர் நோய் வாய்ப்பட்டிருக்கிறார். அதனை அரண்மனையாரிடம் தெரியப்படுத்தியும் இருக்கிறார். பின்னர் வந்து, வேலையில் சேர கார்க்கோனாகிய மேலதிகாரியை அனுமதி கேட்கும்போது, வாய்ப்பில்லாது போயிருக்கிறது. அதன் பிறகு, மனம் நொந்து போயிருக்கிறார்; இந்த மனுதார்.

மறுபடியும் வேலை கேட்கிறார். வயதான காலத்தில் உணவுக்கு வழியில்லை என்று உலுப்பை கேட்கிறார். அரண்மனைக்காக இவ்வளவு உழைத்த இவர் கடைசியில் உலுப்பைக் கேட்கிறார். இவருக்கு வேலையும் இல்லை. ஓய்வூதியமும் (பென்ஷன்) இல்லை. உலுப்பை என்பது, ஒருவர் சாப்பாட்டிற்கு வேண்டியதைப் பரம ஏழைகளுக்கு நாள்தோறும், அன்ன சத்திரங்களிலிருந்து வழங்கும் சாப்பாட்டுப்படி (D. A.) ஆகும். இதனைச்சேர்த்து, ஒருமாதத்திற்கு நெல்லாக அளப்பதும் உண்டு.

இத்தகு, ஏழ்மையை அடைந்த இவர், இவ்வாறு கேட்பதே, பரிதாபமாக இருக்கிறது. தான், மகாராசாவுக்குக் குழந்தையில்லை என்பதைச் சுட்டிக்காட்டி, இப்படி மகிழ்வித்தால், தான் குழந்தைப் பேறுக்காக வேண்டிக் கொள்வதாகவும் கூறுகின்றார்.

பொதுவாக இவர், ஐந்து மன்னர் பரம்பரையினைக் கூறித் தன் சேவைகளைச் சுட்டிக்காட்டிய இக்கடிதத்தின் மூலம், நல்ல பலனை அடைந்திருப்பார் எனக் கருதுகிறேன்.

மகாராசா அவர்கள் பாதத்திலே விழுந்து வணங்குகிறேன் என்று பணிவுடன் கூறியுள்ளார். கடிதத்தின் கடைசிப் பகுதி உருக்கமாகவும், கண்ணீர் வரவழைக்கத்தக்கதாகவும் இருக்கிறது. தன் கையொப்பத்தினைத் தமிழில் எழுதியுள்ளார். சாமிசிருங் மகன் ருமசாமி ஞயக்கன் என்று கையொப்பமிட்டுள்ளதால், தன்னைக் குறிப்பிட்டுத் தன் தகப்பன் பெயரையும் சேர்த்து எழுதியுள்ளார். ஏனெனில் இங்கு, வேறு இராமசாமி நாயக்கர்கள் இருந்திருக்கக்கூடும்.

இக்கடிதத்தின் ஒரு ஓரத்தில். ‘சன் *1855*’ என்று மோடி எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளது. ‘சன்’ என்பது ஆண்டினைக் குறிக்கும். *11—7—1854*ல் கொடுத்த கடிதம், *1855* தொடக்கத்தில் பதிவாகியிருக்குமோ என்னவோ, தெரியவில்லை. ஆவணக்களரி, *1855*-ம் ஆண்டு ஆவணக்கட்டுக்களில் சேர்த்திருக்கிறது என்றும் கொள்ளலாம்.

## ஆவண எண். 49

ஸ்ரீ மகாராசா சாயபு அவர்கழ் திவானத்துக்கு

கோட்டைவெளி பூக்காற தெருவிலிருக்கும் அல்லிசா தெண்டநிட்டு எழுதி குடுத்த யாதி யென்னமென்றால் மால் சற்பத்து கானுவில் நான் அஞ்சிற பளம் (ஆரஞ்சிப்பழம்) யாபாரம் பண்ணினத்தில், மாலில் பணம் பாக்கியிருப்பதால் சற்க்காற் ரவேசிப் படிக்கிப் பிடித்துக்கொண்டு யென்றுட நிலுவை சாடா வாய் குடுக்கும்படியாய் உத்திறவாக வேணுமெண்டு கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஸ்ரீஆரசயிசஹெ (1844-ம் வருஷம்) ம. அல்லிசா

மாற்சிமீ யெ (10வ) கயிியெழுத்து

இவ்வாவணம், மையினுல் செய்யப்பட்ட காகிதத்தில், கடுக்காய் மையினுல், கொருக்காய்த்தட்டை கொண்டு எழுதப்பட்டுள்ளது. எழுதியவர் முகம்மதியரானதால் தமிழ் இவ்வளவாக இருக்கிறது.

இவரது இருப்பிடம் பூக்காரத்தெரு. நான்கு கோட்டைக்குள்ளும் இருக்கும் தெருக்களைக் கோட்டை என்றும், கோட்டைக்குள்ளிருக்கும் ஒருவரைக் கோட்டையார் என்றும் குறிக்கும் பழக்கம் அண்மைக் காலம் வரை இருந்து, தற்போது இது அறுகி வருகின்றது. அஞ்சலட்டை முதலானவைகளிலும் 'கோட்டை, தஞ்சாவூர்' என்று குறிப்பிடின், இந்த இடம் எப்படியும் நான்கு கோட்டைக்குள் இருக்கிறது என்பது பெறப்படும். இந்த, நாற்புறமும் உள்ள கோட்டைக்கும் அகழிக்கும் வெளியே உள்ள இடம் 'கோட்டைவெளி' எனப் பயன்படுத்தப்பட்டு வந்தது.

அதன்படி, பூக்காரத்தெரு. கோட்டைக்கு வெளியே சுமார் 1½ கிலோ மீட்டர் தெற்கே, இன்றும் உள்ளது. அப்போது, பூக்காரத் தெருவாக இருந்தது. தற்போது ஒரு சிற்றூராக ஆகியும் தெருப்பெயராலேயே குறிப்பிடப்பட்டு வருகின்றது. இங்கு, ஒரு பெரிய 'பூச்சந்தை' இயங்கி வருகின்றது. முன்பு காலையில் மட்டுமே இயங்கிவந்த இச்சந்தை, இப்போது பிற நேரங்களிலும் பூக்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்று வருகின்றது.

இத்தெருவில் சிறப்புற்று விளங்குவது அ/மி சுப்பிரமணியசுவாமி கோயில். முன்பு சிறு கோயிலாக இருந்த இது, தற்போது, பெரும் அளவில் கோபுரங்களுடனும், சுதை வேலைப்பாடுகளுடனும் காட்சியளிக்கின்றது. முருகக்கடவுள் பக்தர்கட்கு வேண்டும் வரமளித்து, அருள் பாலித்து வருகிறார். இச்சந்தை தற்போது இவருக்குச் சொந்தமானது.

இத்தெருவில் இம்மனுதார் வசித்து வந்திருக்கிறார். இத்தெருவில் இருந்துகொண்டு, வெளியூர்களிலிருந்து ஆரஞ்சுப்பழங்களை வரவழைத்து விற்கும் மொத்த வியாபாரியாக இவர் இருந்திருப்பதால், அரண்மனையார் தமக்கு வேண்டிய ஆரஞ்சுப் பழங்களை இவர் மூலம் பெற்றிருக்கின்றார்கள்.

அரண்மனையில் உள்ள 18 கானக்களில் சர்பத் கானவும் ஒன்று. அதில் குளிர்ந்த பானங்கள், சுவைநீர்ப் பானங்கள் முதலியன தயாரித்து, அரசவை முதலான இடங்களில் உள்ளவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். இதனுல்

இங்கு 'ஆரஞ்சு சர்பத்' (சுவைநீர்) தயாரிப்பதற்கு இம்மனுதாரிடம் ஆரஞ்சுப் பழங்கள் வாங்கியதில் நிலுவை (பாக்கி) நின்றிருக்கிறது.

அதனை இம்மனுதார் கேட்கும்போது, 'அரண்மனையார் ரவேசிப் படிக்குப் பிடித்துக்கொண்டு' என்று எழுதுவதால், 'ஒப்பந்தப்படி பிடித்தம்' எனவும், வழக்கப்படி எனவும், பொருள்பட இடமுண்டு. ரவேசி எனில் விற்பனை வரியோ என்பதும் ஐயம். இனிவரும், இரண்டு கடிதங்களிலும் இத் தொடர் காணப்படுகின்றது. ஆரஞ்சுப் பழத்தினை அஞ்சிறபளம் என்று குறிப்பிட்டுள்ளார் போலும். இதன் உள்ளே, 11 சுளைகள் உள்ளனவால், இதனை 6+5 ஆறு அஞ்சுப்பழம் என்று கூறியிருத்தல் வேண்டும்.

இக்கடிதம் 10—3—1844-ம் ஆண்டு எழுதப்பட்டுளதால், இது, மன்னர் சிவாஜியின் (1833-1855) காலம். எனவே, ஏறத்தாழ இம்மன்னனின் கடைசிக் காலம் வரையிலும் சர்பத்கானா இயங்கிவந்துள்ளது என்பது இதனால் பெறப் படுகின்றது.

/ இக்கடிதத்தின் மேலும், பின்பகுதியிலும் 'சன் 1844' என்று மோடி எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளது.

பழைய முறைப்படியுள்ள க்க, த்த, ல்ல முதலான எழுத்துக்கள் கூட் டெழுத்தாகவே எழுதப்பட்டுள்ளன. ல்லி என்பதற்கு 'லி' என்று எழுதப் பட்டுள்ளது. இரண்டு எழுத்து, கூட்டெழுத்தேயன்றி, மூன்று கூட்டெழுத்து உள்ள எழுத்துக்களும் உண்டு. த்தில் என்பதனைச் சேர்த்தே எழுதியுள்ளார் கள். கி. பி. ஆண்டுகளைத் தமிழ் எண்களாலேயே குறிக்கும் பழக்கம் இருந்தது. அதன்படி 1844-ம் ஆண்டு, நாள் இவையெல்லாம் தமிழ் எண்களாலேயே குறிக்கப்பட்டுள்ளன.

## ஆவண எண். 50

ஶ்ரீமகாராசா சாயபு அவர்கள் திவானத்துக்கு கோட்டைவெளி கருந் திட்டங்குடியிலிருக்கும் கோவிந்தராவு சாளகே தெண்டனிட்டு யெழுதிக் கொடுத்த யாதி யென்னமென்றால்

நான் சற்பத்துக் கானாவில் அஞ்சிறபளம் (ஆரஞ்சுப்பழம்) யாபாரம் பண்ணினத்தில் மாலில் பணம் பாக்கி இருப்பதால் சர்க்கார் ரவேசிப்படிக்கி பிடித்துக்கொண்டு யென்னுடைய நிலுவை சாடாவாயி குடுக்கும்படியாய் உத்திறவாக வேணுமென்டு கேட்டுக்கொள்ளுகிறேன்.

னஅசயச (1844-ம் வருடம்)

மாற்சி மீ ௰ (10-ம் தேதி)

गोविंदरावसाळके.

இவ்வாவணமும், முன்னது போல கையினுல் செய்யப்பட்ட காகிதம். எழுதுகோல் — கொறுக்காய்த்தட்டை, மை—கடுக்காய் மை. கோட்டை வெளியில் கருந்திட்டங்குடி என்றுளது. அருள்மிகு வசிட்டேசுவரர் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள இத்திருத்தலம், தஞ்சைக்கு வடக்கே சுமார் 1½ கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது.

'கருங்குட்டம் தீர்த்த குடி' என்பது கருந்தட்டான்குடி என்ருகி எப்படி எப்படியெல்லாமோ மருவி வழங்கப்படுகின்றது.

இக்கடிதமும் 10—3—1844 ஆகிய அதே நாளில் எழுதப்பட்டது. இம் மனுதார் கோவிந்தராவு சாளகே என்பவர். இவர் மராத்தி (நாகரி)யில் கையொப்பமிட்டிருக்கிருர். இவரும் ஆரஞ்சுப் பழத்தினை அரண்மனைக்கு, அனுப்பியிருக்கிருர். அதன் பாக்கிக்காக விண்ணப்பித்திருக்கிருர். இவரும், அரண்மனை வழக்கப்படி பிடித்தம் செய்துகொண்டு பாக்கி முழுதும் கேட்கிருர்.

## ஆவணம் எண். 51

*ஸ்ரீ மகருசா சாயபு அவர்கள் திவானத்துக்கு*

கோட்டை வெளி பூமால் ருவுத்தன் கோவில் தெருவிலிருக்கும் வடுக கொசத்தி கோயிந்தமாள் யெழுதிக் குடுத்த யாதி யென்னமென்ருல்

மால் சர்பத்து கானுவில் நான் நவபாண்டயாபாறம் பண்ணினத்தில் வறவேண்டிய நிலுவை பணத்தை சற்க்காற் ரவேசிப்படிக்கிப் பிடித்துக் கொண்டு யென்னுடை நிலுவை சாடாவாய் குடுக்கும்படியாய் உத்திரவாக வேணுமெண்டு கேட்டுகொள்ளுகிறேன்.

| | |
|---|---|
| சூஅாசயச ஹ<br>(1844-ம் வருடம்)<br>மார்ச்-மீ ய (10) உ | கோவிந்தம்மா<br>கயியெழுத்து. |

இவ்வாவணமும், கையால் செய்யப்பட்ட காகிதத்தில் கடுக்காய் மை கொண்டு, கொறுக்காய்த் தட்டையினுல் எழுதப்பட்டதே. இம்மனுதார், மண்பாண்டங்கள் செய்து வியாபாரம் செய்யும் கோவிந்தம்மாளாவார்.

இவர்கள் குடியிருப்பெல்லாம் தற்போதும், தஞ்சைக்குக் கிழக்கே 1½ கிலோமீட்டர் தூரத்திலுள்ள பூமாலை ராவுத்தன் கோயிலை அடுத்துள்ள பகுதி யாகும். இன்றும், 'குயவர் தெரு' என்று வழங்கி வருகின்றது.

குறிப்பிட்டுள்ள பூமாலை ராவுத்தன் கோயில், வரலாற்றுப் பின்னணி கொண்டது. மதுரையில், சொக்கலிங்கப் பெருமான் பிட்டுக்கு மண் சுமந்த வரலாறு, யாவரும் அறிவர். அதற்குமுன், மாணிக்கவாசகருக்காக, திருப் பெருந்துறைப் பெர்மான், இங்கு வந்துதான், (குதிரைக்கார) ராவுத்தர் வேடம் புனைந்து, பூமாலை தரித்துக்கொண்டு, இங்கிருந்தும் புறப்பட்டுச்சென்று, காட்டி லுள்ள நரிகளையெல்லாம், நல்ல உயர்மட்டக் குதிரைகளாக்கிக்கொண்டு அவற்றில் ஒன்றின் மீதமர்ந்து மதுரையை அடைந்தாராம். அதனால் இந்த இடத்தில் எழுந்தருளியுள்ள இறைவர்க்குப் பூமாலை ராவுத்தர் என்ற பெயர் இன்றும் வழங்கிவருகின்றது.

இச்செய்தியினை, எமது சரசுவதி மகால், வெளியீடு, "தஞ்சை வெள்ளைப் பிள்ளையார் குறவஞ்சி" என்ற நூலில் காணலாம்.

இத்தெருவில் வாழும் 'வடுக கொசத்தி' என்பதனால், இவ்வம்மையார் தெலுங்கு பேசும் பிரிவைச் சேர்ந்தவராக இருக்கலாம். இவ்வம்மையாரும் சர்பத்து கானுவுக்கு மண்பாண்டங்கள் சால்கள், பானைகள், மடக்கு, (மூடி)கள் முதலான மண்பாண்டங்கள் செய்து கொடுத்து வந்துள்ளார்.

அவைகளைப்பெற்று, சர்பத் கானுக்காரர்கள், பானையில் தண்ணீரை விட்டுக் குளிரவைத்து, அத்தண்ணீரில் ஆரஞ்சுப்பழம் முதலானவற்றின் சாறுகளைக் கலந்து, கோடையின் வெப்பம் தணியக் கொடுப்பார்கள்.

நவபாண்டம் என்பது புதிய மண்பாண்டத்தினைக் குறிக்கும் வழக்குச் சொல். இதிலும் நிலுவை நின்றிருக்கிறது. அதனைத் தரவேண்டுமென்று அம்மையார் கேட்கும்போது, வழக்கமாக அரண்மனையில் செய்யும் பிடித்தம் போக மீதி முழுதும் தரவேணுமென்று கேள்கிறார்.

சில ஆவணங்களுக்குச் சில முக்கிய தொடர்கள் இருப்பதுபோல பாக்கிக்கு மனுக்கொடுத்தால் சர்க்கார் ரவேசியைப் பிடித்துக்கொண்டு, பாக்கி முழுவதும் தரவேணுமென்று கேட்டால்தான் பாக்கி வரும் போலும்.

இவ்வாவணமும், 10—3—1844-ல் எழுதப்பட்டிருக்கிறது. கடந்த 3 ஆவணங்களும் இதே தேதியில் இருப்பதால், இத் தேதி பாக்கிக்காக மனுக் கொடுக்கும் நாளாக இருந்திருக்கலாம் என்பது பெறப்படுகின்றது.

## ஆவணம் எண். 52

அறிக்கார மகால் பசலி நாணுவய்யனுக்கு யெழுதினது.

யென்னவென்றால் நாளது மாதம் 22 தேதியிலும், 29 தேதியிலும் நிற சக்கவாற் அம்பாபுரத்திலிருந்து அனுப்பின காகிதங்கள் வரப்பத்திக் கொண் டோம்.

சத்திரத்துக்கு அளக்கவேண்டிய நெல்லு அளக்காமல் குத்தகைக் காறனைக்கொண்டு அளந்துகொள்ளாமல் கமாவிசுதாறனைக் கொண்டும் தர்ம காறியத்துக்கும் ரொம்ப அயாக்கிறதை நடக்குறதென்று அறிந்து கொண்டோம். கமாவிசுகார ராமடு அய்யன் புதுச்சேறிக்கு போயிருந்தும் ஷெ 11வ ராத்திரி சத்திரம் வந்து சேர்ந்தாரென்றும் அறிந்தோம்.

கமாவிசு ருமடு அய்யன் நாளது பங்குனிமீ 12 தேதியில் ஒரு அர்ஜி யெழுதிக்கொண்டத்தில் கண்டயிடத்தில் சத்திரத்துக்கு நெல்லெல்லாம் கடக்குறத்துனலேதான் சத்திரம் விட்டு அசயக்கூடாதாயிருக்குறதென்றும், ஆகையால் அந்தக் காறியம் பார்த்துக்கொண்டு வந்து சேருகிறேனென்று, அறமனையார் சுருக்குலே வறச்சொல்லி எழுதின கட்டளைக்கு பதில் உத்திறமாக ஒரு அர்ஜி யெழுதிக்கொண்டிருக்கிறுன். அறமனையார் வறவழைச்சத்துக்கு அப்படி யெழுதினவன் சத்திறம் விட்டு மத்தொரு விடத்துக்கு போனது மிகுந்த அச்சரியமாயிருந்துது. இப்பவும் கமாவிசு ருமடு அய்யனுக்கு இந்த பத்திரம் கண்டசணம் வறவழைச்சி சத்திறத்து கணக்கும் கூடக் கொடுத்து ரெண்டு சிப்பாய்களையும் கொடுத்து இவிடம் அனுப்பிவிக்கவும். அதுக்கு அவன் உடனே புறப்பட்டால் நல்லது. இதுக்கும் அவன் யேதாவது தடங்கல் சொல்லுவானேயாகில் அதற்காக நாலுபேர் சாட்சி வச்சி பதில் உத்திரவு யெழுத வேண்டியது.

சத்திறம் கிறுமம் குத்தகைக்காறன் சுந்தறப்பய்யனுக்கு நீர் ஒரு அறிக் காரனை அனுப்பி முகதாவில் வறவழைத்து, குத்தகை நிலுவை கணக்கு கேட்டு, வாங்கிக்கொண்டு, அந்தக் கணக்குப்படிக்கு நிலுவை கொடுக்கச் சொல்லி, அவன் அளக்கிற நெல்லும் நீர் கிட்டயிருந்து அளந்துகொண்டு களஞ்சியத்தில் போட்டு சேதிக்கு யெழுதவும். இந்தப்படிக்கு குத்தகைக்காரன் நடந்து கொள்ளாமலிருப்பானேயாகில், அது சங்குதிக்கும் சாட்சி வச்சி பதில் உத்தரவு யெழுதவேண்டியது. இந்தக்காகிதம் உசூர் அறிக்காரன் நிசினந்த மத்தியஸ்த அறிக்காரன் முன்னுக்கு கமாவிசுதாருக்கு(ம்) குத்தகைக்காறனுக்கும் வாசித்துக் காண்பிவித்து சேதிக்கு யெழுதவும்.

சூஆாஉய்டுஷு
யேப்றல்மீ ௫ெ தஞ்சாவூர்.

(இக்கடிதத்தின் பின்புறம்)

ருஜசாம்பாபுறம் சத்திறம் அமிஞ பிச்சுவய்யனுக்கு யெழுதுகுறதென்ன வென்ருல்

நாளது தைமீ 1வ்க்கு உன்னை ஷெ சத்திறத்துக்கு அமீனாவாக நேமித்த நாள்முதல் இதுவரைக்கும் தாருபுறம் கிறுமம் குத்தகை சுப்புபிள்ளை குத்தகை

மேல்வாறத்தில் அளந்திருக்குற நெல்லும் செலுத்தின பணமும் இவளவென்று தேதி வாறம் கண்டு ஒரு கணக்கு அதிசிக்கிறத்தில் தயார் செயிது அனுப்பி விக்கவும்.

இவ்வாவணமும், முன் ஆவணம் போன்றது. காகிதம் கையினால் செய்யப்பட்டது. கடுக்காய்மை, கொறுக்காய்த்தட்டை எழுதுகோல் இவற்றால் உருப்பெற்றது இவ்வாவணம். இரண்டு தாள்கள் கொண்டது. கொண்ட நாள் **5—4—1825**. இதன் காலம், மன்னர் சரபோசியின் **(1799—1832)** காலம் ஆகும்.

இதில் அரண்மனைக்கு வரவேண்டிய நெல்லைச் சத்திரத்தில் அளந்து கொடுக்கப்படவேண்டிய செயலில் ஏற்பட்ட குறைபாடுகள் பேசப்படுகின்றன. அளக்கவேண்டியவர் அளக்காமலும், பொறுப்பில்லாமல் கண்ட இடங்களிலும் நெல்லைக் கிடத்தியிருப்பதும் பேசப்படுகின்றன. சத்திரப் பொறுப்பலுவலர், சத்திரத்தை விட்டு நகரக்கூடாது என்றிருந்தும், அவர், வேறு இடத்திற்குச் சென்று வருகிற செய்தி, இதில் கூறப்படுகிறது.

அவருக்கு அரண்மனையாரின் உத்தரவு, 'கணக்குகளுடனும், சிப்பாய்களுடனும் உடன் வரவேண்டியது' என்பது. அப்படி வரவில்லை என்றால் அதற்குச் சாட்சியுடன் கடிதம் எழுதவேண்டியது என்றும் காணப்படுகின்றது.

குத்தகைக்காரர்கள், (அரண்மனைக்கு) சத்திரத்துக்கு அளக்கவேண்டிய நெல்லை முறையே அளத்தல். அதனைக் களஞ்சியத்தில் சேர்த்தல், குத்தகைக் காரர்கள் சரிவர நெல் அளக்காவிடில், அதற்கு சாட்சியுடன் செய்தியினை அரண்மனைக்குத் தெரியப்படுத்தல் ஆகிய செய்திகள் கூறப்பட்டுள்ளன.

தஞ்சை, மராத்திய மன்னர்கள் அன்னதானம் செய்வதில் ஆர்வமுடையவர்கள். அவர்தம் மனைவியர்களும் அப்படியே. மயிலாடுதுறையினின்றும், ஒரத்தநாடு வழியாக, இராமேச்சுரம் செல்லும் பயணிகட்கு, **96** இடங்களில் அன்னசத்திரங்கள் அமைத்ததாகவும், அவற்றிற்குத் **96** தோட்டங்களை உரிமையாக்கி அவற்றினின்றும் வரும் வருமானத்தைக்கொண்டு அச்சத்திரங்களைப் பராமரித்ததாகவும் கூறுவர்.

இவர்கள் கட்டிய சத்திரங்கள் ஏராளம். அவற்றுள் பட்டியலிட்டுச் சொல்லப்பட்டன ஒரு சிலவே. எமது மகால் மோடி ஆவணக்கட்டு **551—1—46—1850**ல் மகால் அன்னசத்திரம்:

1. தஞ்சாவூர் கோட்டை அன்னசத்திரம்
2. முக்தம்பாபுரம் அன்னசத்திரம்

3. ராஜகுமராம்பாபுரம் அன்னசத்திரம்

4. மோகனம்பாபுரம் அன்னசத்திரம்

5. சக்வாரம்பாபுரம் அன்னசத்திரம்

6. இராஜசாம்பாபுரம் அன்னசத்திரம்

7. எமுனம்பாபுரம் அன்னசத்திரம்

8. சைதம்பாபுரம் அன்னசத்திரம்

9. சுலட்சணம்பாபுரம் அன்னசத்திரம்

10. மகாதேவபட்டணம் அன்னசத்திரம்

11. சைதம்பாபுரம்—ராமேசுவரம் பழைய சத்திரம், புதிய சத்திரம்.

12. மல்லியம் அன்னசத்திரம்

13. பஞ்சநத மோகனம்பாபுரம் அன்னசத்திரம்

14. இராஜகுமராம்பாபாயி அம்மணி ராஜே சாயேப் சத்திரம் கோயில்.

15. மாது ஸ்ரீ அஹில்யாம்பா சத்திரம்

இச்சத்திரங்களின் வசூல் வருமானங்கள், வசூலாக வேண்டியவைகள், கணக்கு வகையறுக்கள்—இரண்டு பெரிய காகிதத்தில் உள்ளன.

இப்பட்டியலில் கூறப்பட்ட 6-வது சத்திரமே இராசசாம்பாபுரம் சத்திரம் ஆகும். இதுவே இவ்வாவணத்தில் குறிப்பிடப்பட்டுளது. இச் சத்திரத்திற்கு உண்டான கணக்குகளை உடனே எழுதி அனுப்பும்படியாக, அச் சத்திரத்து அதிகாரி, அமீனா, பிச்சுவய்யனைக் கேட்டிருக்கிறார்கள். இந்த அமீனா இக்கடிதம் எழுதிய நாளுக்குச் சற்று முன்னதாக அண்மையில்தான் நியமிக்கப் பட்டிருக்கிறார் என்பதும் இதனால் தெரிகின்றது.

## PUBLICATIONS OF SARASVATI MAHAL LIBRARY.

| | | |
|---|---|---|
| 1. | GUIDE BOOK TO SARAVATI MAHAL—(with Illustration) by A. Panchanathan M.A., B.Lib.sc., A. O. i c (English) | 7-00 |
| 2. | SOMAYAGA PERUNKAVIYAM (Tamil) Edited by Pulavar V. Chockalingam | 8-00 |
| 3. | VEERAGAMAM (Tamil) Edited by Dr. S. G. Deivanayagam, M.A., Ph.D., | 4-50 |
| 4. | ATHIRUPAVATHI KALYANAM (Tamil) Edited by V. Venugopalan | 6-00 |
| 5. | NEETHINOOL (Tamil) Edited by Prof. K, Kothandapani, M A., B.O.L., | 5-00 |
| 6. | SADASIVA DHYANAM (Tamil) Edited by Prof. S. Govindarasanar | 4 00 |
| 7. | HARICHANDRA NATAKAM (Tamil) Edited by Pulavar S. Thilagam B.Litt., | 4 00 |
| 8. | 4448 VIYATHIKAL — ORU VILAKKAM (Tamil) Edited by S. Arangarasan, B. I. M., | 8-50 |
| 9. | MURTHI DHYANAM (Sanskrit) Edited by Siromani S. Swaminatha Sastri | 12 50 |
| 10. | THANJAPURI MAHATMYAM (Sanskrit) Edited by Siromani S. Rajalakshmi | 5-00 |
| 11. | ANUBHAVA VAITHIYA MURAIKAL (Tamil) Edited by Dr. T. V. Varadharajan, D.A.M.S., & Pulavar S. Thilagam | 4—50 |
| 12. | SIRUTHONDAR ESAI NATAKAM (Tamil) Edited by G. Sethuraman, M. A., B. Ed., | 12-50 |
| 13. | THIRUKKURAL PALAYA URAI (Tamil) Edited by A. M. Parimanam, M.A., M.Litt., Ph.D., | 10—00 |
| 14. | KALACHAKKARAM (Tamil-Astrology) Edited by Vidwan Adigalasiriyar | 7-00 |
| 15. | AKASA BHAIRAVAKALPA MANTRAM (Sanskrit) Edited by Tethiyur Brahmasri Krishnamurthi Sastri | 2-75 |
| 16. | PHALAVATHI (Sanskrit) Edited by Siromani N. S. Devanathachariar | 36—00 |
| 17. | NYAYA KAUSTUBHA KANDA (Sanskrit) Edited by V. Subramaniya Sastri | 65—00 |
| 18. | SABDAM ALIAS TALASOLKATTU (Urai-Tamil) Edited by N. Visvanathan | 12-00 |
| 19. | SRI RAMA DINACARYA (Marathi) Edited by T. R. Bheema Rao | 6-00 |
| 20. | TAMIL EASAI PADALKALUM NATYA PATHANKALUM (Tamil) Edited by Siromani N. Srinivasan | 5-00 |